# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 12

ஆகஸ்ட் 2015
ஷ்ராவண் – பாத்ரபத் 1937

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382

**அனைவருக்குமான நிதிச் சேவையும் சமூக மாற்றமும்**

*– சரண் சிங், சீ.எல்.தத்ஹிச், எஸ். ஆனந்த்*

**இந்தியாவின் வளர்ச்சிக்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்திக்கொள்ளுதல்**

*– விஜய்குமார் கவுல்*

**அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டத்தில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு**

*– டாக்டர் பி.எம். மாத்யூ*

**இந்தியாவின் வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்கியதா? கோட்பாட்டு வரையறைகளும் ஆதாரங்களும்**

*– ஸ்ரீபத்மோதிராம்*

**எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு உதவியாக விவசாயம்**

*– புவன் பாஸ்கர்*

*(2–ம் பக்கம் தொடர்ச்சி...)*

உருவாக்கக் கூடிய மற்றும் வறுமையைக் குறைக்க உதவுகின்ற பொருளாதார வளர்ச்சி என்பதாகும். வாய்ப்புகளை அனைவருக்கும் உருவாக்கித் தருதல், கல்வி மற்றும் திறன் மேம்பாடு மூலம் மக்களை அதிகாரம் பெற்றவர்களாக்குதல் ஆகியன இதில் அடங்கும். சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட பிரிவினர்களை மைய நீரோட்டத்தில் இணைய வைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசு பல புதிய முயற்சிகளைத் தொடங்கி உள்ளது. விரைவான பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் அவர்களுக்கு கிடைக்க அரசு உதவும் வகையில் இந்த முயற்சிகள் உள்ளன. நிதிசார்ந்த செயல்பாடுகளில் அனைவரையும் உள்ளடக்கும் மாபெரும் நடவடிக்கைகளில் ஒன்றாக பிரதம மந்திரி மக்கள் நிதித் திட்டம் (PMJDY) விளங்குகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்ட பத்து மாதத்திற்குள்ளாகவே மிகச்சிறந்த முடிவுகளை அடைந்துள்ளது. வீட்டுக்கு ஒரு வங்கிக் கணக்கு என்ற நிலையை 98% வீடுகள் பெற்றுள்ளன. முத்ரா வங்கி, எஸ்இடியு, திறன் இந்தியா இயக்கம் போன்றவையும் சிறந்த நடவடிக்கைகள் ஆகும். இவை திறன் பெற்ற தொழிலாளர்களை உருவாக்கும்; வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டம், பிரதம மந்திரி ஜீவன் சுரக்ஷா திட்டம் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் சமூகப் பாதுகாப்பை நீடித்து வழங்க வேண்டும் என்ற நோக்கில் இவை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் (MGNREGA) மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி உள்ளது. மேலும் வேலைக்காக மக்கள் குடிபெயர்வதை இது பெருமளவில் குறைத்துள்ளது. கிசான் அட்டை, பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாயி திட்டம் (PMKSY), தேசிய வேளாண் சந்தை (NAM) ஆகிய திட்டங்கள் விவசாய சமூகத்துக்குப் பெருமளவில் பயன் அளிக்க வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப்பட்டு உள்ளன. வேளாண் சமுதாயத்தினரின் மேம்பாடே நாடு சமூக பொருளாதார நல்வாழ்வில் சிறந்து விளங்குகிறது என்பதற்கான முக்கியமான குறிகாட்டியாகும்.

எனினும், பலதரப்பட்ட 1.2 பில்லியன் மக்கள் தொகையுடன், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் வளர்ச்சியின் பலன்களை எடுத்துச் செல்வது என்பது மிகப்பெரிய சவாலாகவே உள்ளது. இந்த இடத்தில்தான் பொருத்தமான தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. இந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் இந்தியா திட்டம் இத்தகைய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் முன்மொழியப்பட்டு உள்ளது. கடைக்கோடி குடிமகனுக்கும் நிர்வாகமும் சேவைகளும் கிடைக்கச் செய்வதன் மூலம் பலன்களைத் திறம்பட மக்களுக்கு அளிக்க முடியும். அதற்காகத் தொழில்நுட்பங்களை திறம்பட பயன்படுத்துதல் ஆகியவனவும் திட்டத்தின் நோக்கம் ஆகும். அடிப்படை துறைகளான கல்வி, சுகாதாரம், வேளாண்மை, உற்பத்தி ஆகியவற்றில் ஒட்டுமொத்தமான உருமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் இந்த இயக்கத்தின் நோக்கமாகும். இதனால் வாழ்வின் பொதுவான தரம் மேம்படும். ”உள்ளடக்கிய வளர்ச்சி” என்ற விரிவான நோக்கத்துடன் புதிய திசையில் இந்தியப் பொருளாதாரம் நடைபோடத் தொடங்கி உள்ளது. சமமான அந்தஸ்து மற்றும் சமமான வாய்ப்பு என்பதை உண்மையாகவே தனது குடிமக்களுக்கு உறுதிப்படுத்த இது முனைந்துள்ளது. ●

# இந்தியாவில் பொது விநியோக அமைப்பின் அரசியல் பொருளாதாரம்

– சி.எஸ்.சி.சேகர்

இந்தியாவில் பொது விநியோக அமைப்பானது (பி.டி.எஸ்) 1965ஆம் ஆண்டு பொது மக்கள் அனைவரும் வாங்கக்கூடிய விலையில் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தொடங்கப்பட்டது. சந்தையில் விற்கும் விலையைவிடக் குறைவான விலையில் உணவு தானியங்களை மாநில அரசுகள் நியாய விலைக் கடைகள் (எஃப்.பி.எஸ்) மூலமாக விநியோகித்து வருகின்றன. உணவு தானியங்களின் பொருளாதாரச் செலவுக்கும் விநியோக விலைக்கும் (சி.ஐ.பி) இடையிலான வித்தியாசமே உணவு மானியமாக அமைகின்றது. 1998வரை பொது விநியோக அமைப்பு நகரப் பகுதிகளில் மட்டுமே செயல்பட்டு வந்தது. இதன் காரணமாக, பொது விநியோக அமைப்பு என்பது நகரப் பகுதிகளில் மட்டுமே செயல்பட்டு வருகிறது என்ற கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. இந்த விமர்சனத்திற்குப் பதில் நடவடிக்கையாக 1997ல் இலக்கு சார்ந்த பொது விநியோக அமைப்பு (டி.பி.டீ.எஸ்) தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் கீழ், ஒவ்வொரு மாநிலத்திலும் தகுதி வாய்ந்த பயனாளிகளின் எண்ணிக்கையை மத்திய அரசு நிர்ணயம் செய்தது. அந்தந்த மாநிலத்தில் நிலவும் வறுமைக் கோட்டின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டது. அவ்வாறு நிர்ணயம் செய்த வீடுகள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள (அல்லது பீ.பி.எல்) குடும்பங்கள் என்று அழைக்கப்பட்டன. இக்குடும்பங்கள் மிகக் குறைந்த விலையில் உணவு தானியங்களைப் பெற தகுதி படைத்த குடும்பங்கள் என அறிவிக்கப்பட்டன. இது மட்டுமல்லாமல், மிகவும் ஏழ்மையான வீடுகள், அதாவது அந்தோதயா அன்ன யோஜனா வீடுகள் என்று அழைக்கப்படும் வீடுகளுக்கு (ஏ.ஏ.ஓய்) வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்குத் தரப்படும் விலையைவிட மிகக் குறைந்த விலையில் உணவு தானியங்கள் தரப்படுகின்றன. வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள (அல்லது பீ.பி.எல்) குடும்பங்கள் மற்றும் மிகவும் ஏழ்மையான வீடுகள் (ஏ.ஏ.ஓய்) ஆகிய பிரிவின் கீழ் வரும் உண்மையான பயனாளிகளைக் கண்டறியும் பணியை மாநில அரசுகள் மேற்கொள்கின்றன. பயனாளிகளை இலக்காகக் கொண்டு செயல்படும் எந்த ஒரு அமைப்பைப் போலவே இந்த டி.பி.டீ.எஸ் அமைப்பும் பயனாளிகளைச் சேர்த்தல் மற்றும் பயனாளிகளை நீக்குதல் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி உள்ளது.

மாநிலங்களுக்கு இடையில் பொது விநியோக அமைப்பில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன. பொது விநியோக அமைப்பின் பயனாளிகளை உள்ளடக்குதல், பெறுமான தகுதிகள் மற்றும் நடைமுறையாக்கல் ஆகிய அம்சங்களில் மாநிலங்களுக்கு இடையில் குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் எந்தவிதமான ஒளிவு மறைவும் இல்லாமல் (உணவு தானியம், பருப்பு, உணவு எண்ணெய்) அனைத்து மக்களுக்கும் பொது விநியோக அமைப்பு செயல்படுகின்றது. ஆனால் பீகாரில் டி.பி.டீ.எஸ்–ல் நீண்ட காலமாக நிறைய

**சி.எஸ்.சி. சேகர்** தில்லி பல்கலைக்கழகத்தில் பொருளாதார வளர்ச்சிக்கான நிறுவனத்தில் இணைப் பேராசிரியர்

ஒளிவு மறைவுத் தன்மை இருந்து வந்தது. எனினும் கடந்த சில ஆண்டுகளாக பீகாரில் பொது விநியோக அமைப்பு மேம்பாடு அடைந்து வருகின்றது. இடம் மற்றும் காலம் என்ற எல்லைகளைத் தாண்டி தேசிய அளவிலான மதிப்பீடுகள் இத்தகைய வித்தியாசங்களைக் கண்டறிவதில்லை. எனவே நாம் இந்தக் கட்டுரையில் பொதுவாக சில மாநிலங்களில் நிலவும் மாநில அளவிலான பொது விநியோக அமைப்பின் செயல்பாடுகளைக் கவனத்தில் கொண்டு பரிசீலிக்க இருக்கிறோம். பீகார் மற்றும் சட்டீஸ்கர் மாநிலங்களில் நிலவும் பொது விநியோக அமைப்பு முறை குறித்து முக்கியமாக பரிசீலிக்க உள்ளோம். வித்தியாசமான செயல்திறன்களுக்குக் காரணமாக இருக்கின்ற சாத்தியமான காரணிகளைப் புரிந்து கொள்வதுதான் நமது நோக்கமாகும். பல்வேறு மாநிலங்களில் பொது விநியோக அமைப்பின் செயல்பாடுகளைப் பகுத்தாய்வு செய்வதற்கு அரசியல் பொருளாதாரச் சட்டகத்தையே நாங்கள் பெரும்பான்மையாக பயன்படுத்தி உள்ளோம்.

## பகுதி 2: பகுப்பாய்வுக்கான சட்டகம்

கேள்விக்கு உட்படுத்தப்படும் பிரச்சனை குறித்து தொடர்புடைய நூல்கள் மற்றும் கட்டுரைகளில் பொதுவாக இரண்டு பகுப்பாய்வு அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை

1. புதிய பாரம்பரிய அதிகபட்ச நல்வாழ்வு அணுகுமுறை
2. அரசியல் பொருளாதார அணுகுமுறை

மரபார்ந்த அதிகபட்ச நல்வாழ்வு அணுகுமுறையில் சந்தைத் தோல்வி, பொருளாதாரச் சந்தையில் ஒதுக்கீட்டுத் திறன் ஆகியன மையக்கருத்துக்களாக உள்ளன. இரக்கமுள்ள ஏஜென்ட்டாக அரசு பார்க்கப்படுகின்றது. இந்த எங்கும் நிறைந்த அணுகுமுறை பிகோ என்பவரின் (1932) படைப்புகளில் இருந்து உருவானது. மூலவளங்களை ஒதுக்கீடு செய்து விநியோகிக்கும் செயலை முறையாக மேற்கொள்வதில் சந்தைகள் ஏன் தோல்வி அடைகின்றன என்ற காரணங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. இந்தக் குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு தனிநபர் பொருளாதாரத்தில் அரசு தலையீடு செய்ய வேண்டும் என்று இந்த அணுகுமுறையானது பரிந்துரை செய்கின்றது. அரசு பொது மக்களுக்கான பொருட்களைத் தயாரிக்கிறது, சமூகச் செலவுகள் மற்றும் பலன்களை ஒருங்கிணைக்கிறது, செலவு குறையும் தொழிலகங்களை சீரமைக்கிறது மற்றும் சரியான வழிமுறையில் அதாவது பாரெட்டோ ஆப்டிமல் வே முறையில் வருமானத்தை மீள்விநியோகம் செய்கிறது (மெக்கார்மிக் மற்றும் டால்லிசன் 1981ல் எழுதியுள்ள "அரசியல்வாதிகள், சட்டமன்றம் மற்றும் பொருளாதாரம்: அரசாங்கம் குறித்த நலன்நாடும் குழு கோட்பாடு பற்றிய ஒரு ஆய்வு" என்ற நூலைப் பார்க்கவும்). இந்தப் பார்வை அரசாங்கத்தை அதிநவீனமானதாக எல்லாம் அறிந்ததாகப் பார்க்கிறது.

அரசியல் பொருளாதார அணுகுமுறை என்பது முதன்மையாக பிகோவியன் அணுகுமுறைக்கு (Pigovian approach) எதிர்வினையாக உள்ளது. எல்லாம் தெரிந்த, மக்களுக்கு நன்மைகளை செய்யும் அரசு என்ற பார்வையை இது நிராகரிக்கின்றது. சந்தையின் குறைபாடுகளைச் சரிசெய்வது என்ற கருத்தாக்கத்தை இது கேள்விக்கு உள்ளாக்குகிறது. சந்தைத் தோல்விகளைச் சீர்செய்ய முயலும்போது அரசாங்கமே அதனளவில் தோற்றுப்போகும் என இந்த அணுகுமுறை வாதிடுகின்றது. இதற்குக் காரணம் அரசாங்கம் என்பது சட்டமன்றம் மற்றும் நிர்வாகம் என பல அமைப்புகளின் கூட்டமைப்பாக இருப்பதுவே ஆகும். ஏனெனில் இந்த அமைப்புகளுக்கு அவைகளுக்கே உரிய சொந்த இலக்குகள் உள்ளன. இவை பெரும்பாலும் எதிரானதாகவும் முரண்பட்டதாகவும்

இருக்கின்றன. அரசியல் பொருளாதாரக் கோட்பாடு அரசியல்வாதிகளின் சுயநல முனைப்பு நடத்தை, வாக்காளர்கள், ஆதிக்கம் செலுத்தும் குழுக்கள் மற்றும் அதிகார வர்க்கம் மீது கவனம் செலுத்துகின்றது. (வாக்காளர் மற்றும் அரசியல்வாதிகளின் நடத்தை குறித்த டவுன்ஸ் என்பாரின் ஆய்வு நூல்களில் இருந்து(1957) அரசியல் பொருளாதாரத்தின் தோற்றம் தொடங்குகிறது. அரசாங்கக் கொள்கைகளின் தேவை மற்றும் விநியோகம் குறித்த டல்லாக் நூல்கள் (1962), அதிகாரக் குழுக்கள் குறித்த ஆல்ஸன் படைப்புகள் (1965, 1982) ஆகியனவும் இந்த அணுகுமுறையை வளர்த்தெடுத்தன. பல்வேறு நிறுவன முறைமைகளின் கீழ் அரசாங்க ஏஜெண்ட்டுகள் எவ்வாறு செயலாற்றுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள விஞ்ஞானரீதியிலான அணுகுமுறையை வழங்குவதற்கு இந்த அரசியல் பொருளாதார அணுகுமுறை முயற்சிக்கிறது. இத்தகைய செயல்பாடு பொருளாதார நிர்ணயத்துக்கும் அரசாங்க நடைமுறைக்கும் இடையில் வேறுபாட்டை உருவாக்குவதையும் புரிந்துகொள்ள முயற்சிக்கிறது.

### 2.1 பட்டறிவு சார்ந்த அரசியல் பொருளாதார பகுப்பாய்வுகள்

அரசியல் மற்றும் பொருளாதார சந்தைகளில் ஏஜென்ட்டுகளின் நடத்தையை ஆதார அடிப்படையிலான அரசியல் பொருளாதார மாதிரிகள் வகுத்துத் தருகின்றன. மேலும் அரசின் முன்னுரிமைகளை அகவயமாகத் தருவிக்கின்றன. அரசியல் முன்னுரிமை செயல்பாட்டு (பி.பி.எஃப்) மாதிரி என்பது கொள்கை உருவாக்குதலில் பல்வேறு குழுக்களின் ஆதிக்கத்தை கணக்கில் எடுத்துக் கொள்கின்றது. பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஏற்ப தற்சார்பில்லாத செயல்பாடுகளுக்கு கொள்கை உருவாக்குபவர்கள் அதிக பட்ச கவனம் செலுத்துவதாக இந்த மாதிரி கருதிக் கொள்கின்றது. கூடுதல் கவனம் அல்லது கொள்கை முன்னுரிமைகள் என்பவை அரசியல் கொள்கை உருவாக்குதல் நடைமுறையின் விளைவாக உருவாகக்கூடியவை எனப் பார்க்கப்படுகின்றது. அரசியல் முன்னுரிமை செயல்பாட்டு மாதிரியில் வெளிப்படும் விவாதங்கள் செயல்திறன் கணக்கீடுகளைக் (உதாரணமாக நல்வாழ்வுச் செயல்பாடுகளின் உபரி, லாபம், நிகர பண்ணை வருமானம், அரசாங்க பட்ஜெட் செலவினம் முதலானவை) குறிக்கின்றன. ஒவ்வொரு செல்வாக்கு மிக்க குழுவின் நலவாழ்வையும் பிரதிபலிக்கின்றன. முன்னுரிமைகள் பற்றிய கணக்கீடு சாத்தியமாகக் காரணம் அவற்றை கண்டறிய முடிவதுதான். அதாவது அவை கொள்கை விளைவாக வெளிப்படுவதுவே காரணம் ஆகும். பி.பி.எஃப் ஆய்வுகளின் மற்றொரு முக்கிய குறிக்கோள் (குறிப்பாக வேளாண் கொள்கை பகுப்பாய்வுகள்) கொள்கை ஒப்பந்தப் பத்திர நிலைகளை அகவயமான முறையில் நிர்ணயம் செய்வதுவே ஆகும். கொள்கை உபகரணங்களில் விலைகள், பற்றாக்குறை பட்டுவாடாக்கள், இறக்குமதி ஒதுக்கீடுகள் மற்றும் அது போன்ற பிற நிலைகள் அடங்கும். இந்த ஒப்பந்தப் பத்திரங்களின் நிலைகள் நேர்க்கோட்டு சேர்க்கை பி.பி.எஃப்பை அதிகபட்சமாக்குவதில் இருந்து உருவாக்கப்படுகின்றன. பொருளாதார உபரி நடவடிக்கைகள் மற்றும் அரசாங்க வருவாய் அகியவற்றின் மூலம் இது கணக்கிடப்படுகின்றது.

பி.பி.எஃப் அணுகுமுறையானது ஒருவகையில் மரபான, பலன்தரும், எங்கும் நிறைந்த அரசாங்க பார்வையோடு இணைந்ததாக இருக்கிறது. அரசியல் பொருளாதார முடிவு எடுக்கும் நடைமுறையில் வெவ்வேறுவிதமான கவனத்தைப் பெறுகின்ற சமூகத்தில் நிலவும் மாறுபட்ட நலன்களை அங்கீகரிப்பதில்தான் இந்த இரண்டு

அணுகுமுறைகளும் வேறுபடுகின்றன. அரசாங்க முன்னுரிமைகளின் அடிநாதமான அமைப்பு செறிவாக உள்ள பி.பி.எஃப் அணுகுமுறையானது முன்னுரிமை அமைப்புக்கான விளக்கத்தை இன்னமும் தரவில்லை. அரசாங்கம் என்பது இப்பொழுதும் ஒற்றை அலகாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அரசாங்கம் சில நடத்தைச் செயல்பாடுகளுக்கு ஏற்ப செயல்படுவதாகவே கணக்கில் கொள் ளப்படுகின்றது. அரசியல் சந்தையை விரிவான மாதிரியாக்க வேண்டிய தேவையை விலக்கி விடுவதற்காகவே கொள்கை உருவாக்குனர் என்பது உருவாக் கப்பட்டு உள்ளது. இது செயற்கையான கருத்தாக்கம் ஆகும். முன்னுரிமைகளுக்கான கூடுதல் கவனத்தை நிர்ணயிக்கும் அரசியல் ஏஜென்ட்டுகளை உள்ளடக்கும் வகையில் பெரும்போக்கான பி.பி.எஃப் அணுகுமுறையில் எந்த முயற்சியும் மேற் கொள்ளப்படவில்லை.

## 2.2 செல்வாக்குமிக்க குழுக்கள்

பட்டறிவு இலக்கியத்தின் மற்றொரு கரையாக இருப்பது ஆதிக்கம் செலுத்தும் அல்லது செல்வாக்கு மிக்க குழுக்களின் செயல்பாடுகளுமே ஆகும். கொள்கை உருவாக்கல் நடைமுறைகளைப் புரிந்து கொள்வதில் அரசியல் சூழலும் செல்வாக்கு மிக்க குழுக்களுடன் அதன் உறவும் முக்கிய பங்கு வகிக்கின்றன. (பிரணாப் பிரதன் எழுதி ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் 1984ல் வெளியிட்டுள்ள "இந்தியாவில் வளர்ச்சியின் அரசியல் பொருளாதாரம் என்ற நூலையும் சி.எஸ்.சி சேகர் எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி தொகுதி 40, இதழ் எண் 50ல் எழுதி உள்ள "பொருளாதார அபிவிருத்தி, சமூக மேம்பாடு மற்றும் செல்வாக்கு மிக்க குழுக்கள்" (2005) என்ற கட்டுரையையும் பார்க்கவும்). பொதுவாக இந்தியாவில் அபிவிருத்தி நடைமுறையை விளக்க நாம் இந்த அணுகுமுறையை பயன்படுத்தலாம். மேலும் குறிப்பாக பொது விநியோக அமைப்புக்கும் பயன்படுத்தலாம். ஜனநாயக அரசியல் செயல்பாடு என்பது இந்தியாவில் மிகவும் சிக்கலானதாக உள்ளது. தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகளுக்கு நிதி தேவைப்படுகிறது. இந்த நிதி தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் தொழில்முதலாளிகள், பண்ணையாளர்கள் உள்ளடங்கிய குழுக்கள் மூலமாகவே பெறப்படுகின்றது. எனவே அரசியல் கட்சிகள் மேலாதிக்கம் செய்யும் குழுக்களை சார்ந்திருப்பது என்பது இயல்பான ஒன்றாகவே உள்ளது. இதுவே, ஒரு வழியில், கொள்கை உருவாக்கல் மற்றும் நடைமுறையாக்கலில் அரசியல் கட்சிகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது. அரசியல் கட்சிகள் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்துவது என்பது போதுமான நிதியைத் தருகின்ற செல்வாக்கு மிக்க குழுக்களால்தான் பெரும்பாலும் வழிநடத்தப்படுகின்றது. பெரும்பான்மையான செல்வாக்கு மிக்க குழுக்களுக்கு அரசியல் நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிப்பது என்பது முக்கியமானதாகும். எனவே, இந்தக் குழுக்கள் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாக வேண்டிய தேவை உள்ளது. விவசாயக் கூலிகள், கிராமக் கைவினைக் கலைஞர்கள், ஏழைகள், ஆதரவற்றவர்கள் போன்ற பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் குழுக்கள், கொள்கை தொடர்பான அம்சங்களில் இருந்து விடுபட்டுப்போக இதுவே காரணமாக அமைகின்றது. தங்களுக்கு உள்ள முன்னுரிமையை இவர்கள் பெறுவதில்லை. ஏனெனில் இவர்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி அளிக்கும் அளவிற்கு ஆதார வளங்களைப் பெற்றிருக்கவில்லை.

தகவல் சமச்சீரின்மையும் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு செல்வாக்குமிக்க குழுக்களுக்கு இடையில் தகவல் சமச்சீரின்மை இருக்கும்போது எந்தக் குழுக்களில் அதிக அளவில் தகவல் தெரிந்தவர்கள் உள்ளார்களோ அந்தக் குழுக்களுக்கே அரசியல் கட்சி சாதகமாகச்

செயல்புரியும். கொள்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தி தங்களுக்குச் சாதகமானதாக்கிக் கொள்வதற்காக தங்களது உறுப்பினர் களுக்குத் தகவல் அளிக்க நிதி ஆதாரத் தைச் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் செல்வாக்குமிக்க குழுக்களுக்கு ஏற்படு கின்றது.

அரசியல் நடைமுறைகள் என்ற வழியில் மட்டுமல்லாது கொள்கை மீது தாக்கம் ஏற்படுத்த செல்வாக்குமிக்க குழுக்களுக்கு வேறு ஒரு வழியும் உள்ளது. விளைவுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்த செல்வாக்குமிக்க குழுக்கள் பெரும்பான்மை மக்களைக் குறி வைக்கின்றன. எதிர்ப்பு மற்றும் போராட்டங்கள் வழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை தங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றுவதற்கு பொதுமக்களை செல்வாக்குமிக்க குழுக்கள் ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக மனித உரிமைகள், தொழிற்சாலை மாசு போன்ற விஷயங்களில் தனியார் நிறுவனங்களை சீரமைக்கும் கொள்கைகள் தொடர்பாக இது நடைபெறுகிறது. எவ்வா றாக இருந்தாலும், இந்தக் கொள்கைகள் செயல்படும் முறையானது பேரம் பேசுதல் மூலமாகவே நடைபெறுகிறது. தேர்தல்கள் அல்லது சட்டமன்ற நடவடிக்கைகள் மூலமாக நடப்பதில்லை.

## பகுதி 3 சட்டீஸ்கர் மற்றும் பீகாரில் பொதுவிநியோக அமைப்பு முறை

முந்தைய பகுதியில் கோடிட்டுக் காட்டப்பட்ட அரசியல் பொருளாதார அணுகுமுறையை விரிவாகப் பயன்படுத்தி பீகார் மற்றும் சட்டீஸ்கர் மாநிலங்களில் நடைபெற்றுவரும் பொது விநியோக அமைப்பின் செயல்திறனை நாம் இந்தப் பகுதியில் விவாதிக்க உள்ளோம்.

2004வரை சட்டீஸ்கரில் பொது விநியோக அமைப்பு என்பது தனியார் வசமே இருந்தது. ஒழுங்குமுறையற்ற விநியோகம் மற்றும் வெளிச்சந்தைக்கு தானியங்களை திசை திருப்பி விடுவதே நியாய விலைக்கடைகளை தனியார் நடத்துவதில் உள்ள முதன்மையான பிரச்சனை ஆகும். இவற்றை எதிர்கொள்ள சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சட்டீஸ்கர் பொது விநியோக அமைப்பு (சி.பி.டி.எஸ்) ஆணை 2004 என்பதே மிக முக்கியமான சீர்திருத்தம் ஆகும். இதன் கீழ் சில முன்னோட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தனியார் பங்கேற்பைத் தளர்த்தி தானியங்களை நேரடியாக நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிப்பது; இப்பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு மஞ்சள் நிற பெயிண்ட் பூசுதல்; நியாய விலைக் கடைகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஏழாம் தேதி உணவுப் பொருட்களை விநியோகிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டது; விவரங்களைக் கணினிமையமாக்கியதன் மூலம் விநியோகம் செய்யும் வாகனங்களைத் தடம் அறிதல், கிட்டத்தட்ட அனைவருக்கும் பொதுவிநியோக அமைப்பை நீட்டித்தல் (80%); இதன் மூலம் பெரும்பான்மையான மக்கள் மிகச் சிறந்த சேவைகளை எதிர்பார்க்கும் தன்மையை அதிகப்படுத்துதல்; நியாய விலைக் கடையை நடத்துபவருக்கு ஒரு குவிண்டாலுக்கு கொடுக்கப்பட்டு வந்த கமிஷன் ரூ.8/–ஐ ரூ30/–க்கு உயர்த்துவதன் மூலம் அவர்கள் பொதுமக்களை ஏமாற்றுவதைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் ஒவ்வொரு வீட்டின் முன்பும் பெயர், ரேஷன் அட்டையின் வகை மற்றும் விலை போன்ற விவரங்களை பெயிண்ட்டால் எழுதுதல்; இதன்மூலம் தகுதியில்லாதவர் பீ.பி.எஸ் அல்லது ஏ.ஏ.ஒய் அட்டைகளைப் பயன்படுத்தினால் அது வெளிப்பட்டு அவர்களுக்கு அவமானத்தை உண்டாக்கும். இவ்வாறு பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


பீகாரில் பொது விநியோக அமைப்பு பல பிரச்சனைகளுடனேயே எப்போதும் இருந்தது. (ஜோஸ் மூஜ் என்பவர் 5 கிராமங்களில் உள்ள 150

வீடுகளில் மேற்கொண்ட சர்வேயின்படி எக்கானமிக் – பொலிடிக்கல் வீக்லியில் அவர் எழுதி வெளியான "பீகார் மற்றும் ஜார்க்கண்ட்டில் உணவும் அதிகாரமும்" (2001) என்ற கட்டுரையைப் பார்க்கவும்). அங்கு நிலவும் மிகப்பெரிய பிரச்சனைகள் என்னவென்றால்: அனைத்து மட்டங்களிலும் உணவுப் பொருட்களைப் பெரிய அளவில் கையாடுதல்; விநியோகித்தலில் பேதம் (நீக்கல் மற்றும் சேர்த்தல் பிழைகள்); மாநிலத்தில் போதிய உணவு உற்பத்தி இல்லாமை; பீகார் மாநில உணவு மற்றும் பொது விநியோக கார்ப்பரேஷன் (பி.எஸ்.எஃப்.சி.எஸ்.சி) செயல்படாமல் இருப்பது; பெரிய அளவில் நடைபெறும் ஊழல் மற்றும் பி.டி.எஸ் டீலர்கள், அரசு ஊழியர்கள், உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் அமைச்சர்களுக்கு இடையிலான கூட்டணி; மிகக் குறைவான பொருளாதார வளர்ச்சி இருப்பதால் அதிகமான மூலவளங்களை பணக்காரர்கள் கையகப்படுத்திக் கொள்வது ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

சட்டீஸ்கர் மற்றும் பீகார் மாநிலங்களின் செயல்பாடுகளில் உள்ள வேறுபாட்டை ஒரு எளிதான அரசியல் பொருளாதார சட்டகச் சித்தரிப்பு மூலமாக (படம் 1 & 2) விளக்கிக் கூறலாம். செல்வாக்கு மிக்க குழுக்கள், நிறுவனங்கள், கொள்கை ஆகியவற்றுக்கு இடையில் பரஸ்பர உள்உறவு இருக்கின்றது. இந்த உள்உறவு பல திசைகளில் நடப்பதோடு வளர்ச்சி செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள பல்வேறு பங்குதாரர்கள் மீது விதவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது (படம் 1). இவை ஒன்றை ஒன்று பாதிக்கின்றன. அதனால் இறுதி விளைவும் பாதிக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் விளைவுகளுக்கும் உண்மையில் ஏற்பட்ட விளைவுகளுக்கும் இடையிலான இடைவெளிகள் என்பது விநியோகத் தரப்பில் உள்ள இடைவெளி அல்லது தேவை தரப்பில் உள்ள இடைவெளி இவற்றால் ஏற்படுகின்றது (படம்-2). விநியோக தரப்பில் பிரச்சனைகள் ஏற்படக் காரணங்கள் எவையென்றால்: உள்ளார்ந்த முனைப்பு இல்லாதது; பொருத்தமான ஊக்கத்தொகை அளிக்கும் முறை இல்லாமை; போதுமான கண்காணிப்பு இல்லாதது போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டலாம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது தேவை தரப்பில் ஏற்படும் போதாமை என்பது பயனாளிகளிடம் இருந்து தேவையை உருவாக்கும் அம்சம் இல்லாததுதான். பிரதிபலனாக, ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.


## படம் 1




பீகாருக்கும் சட்டீஸ்கருக்கும் இடையிலான வேறுபாட்டை மேலே கூறிய சட்டகத்தைப் பயன்படுத்தி புரிந்துக் கொள்ளலாம். சட்டீஸ்கரில் தொடக்கநிலை பிரச்சனைகள் 2004ஆம் ஆண்டுவரை நீடித்ததற்குக் காரணம் நியாயவிலைக் கடைகளுக்கு ஒழுங்கற்ற முறையில் பொருட்களை விநியோகம் செய்தது, வெளிச்சந்தைக்கு பெருமளவில் விற்பனைக்கு உணவுப் பொருட்களை திசை திருப்பியது போன்றவையே ஆகும். தேவையான ஊக்குவிப்பு அமைப்பு இல்லாததும் பொருத்தமான

## படம் 2

## கொள்கை உருவாக்கல் மற்றும் நடைமுறையாக்கல்




*கண்காணிப்பு முறை இல்லாததும்தான் விநியோகத் தரப்பில் இதற்கான முதன்மைக் காரணங்கள் ஆகும் (படம்–2). சட்டீஸ்கர் அரசாங்கம் கொள்கை ரீதியில் தலையீடு செய்தது; சி.பி.டீ.எஸ் ஆணை அறிமுகப்படுத்தப்பட்டது; சட்டீஸ்கரில் இருந்து வந்த இது வரையிலான காட்சி இப்போது மாறத்தொடங்கியது; ஒரு குவிண்டாலுக்கு ரூ8/– என இருந்த கமிஷன் ஒரு குவிண்டாலுக்கு ரூ30/– ஆக உயர்த்தப்பட்டது; என்பது நியாயவிலைக் கடை நடத்துபவர்களுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. நியாய விலைக் கடை டீலர்கள் வெளிச்சந்தைக்கு உணவுப் பொருட்களை திசை திருப்பி விற்க முயலும் முயற்சியை இது குறைத்தது. வாகனங்களை கணினி மூலம் தடம் அறிதல், வாகனங்களுக்கு மஞ்சள் நிற பெயிண்ட் அடித்தது, அதனால் வாகனங்களைத் திட்டமிட்ட விநியோக இடங்களைத் தவிர வேறு இடங்களில் நிறுத்தி உணவுப்பொருட்களை இறக்க முடியாமல் செய்தல் போன்ற கண்காணிப்பு அம்சங்கள் வலிமையாக்கப்பட்டன. பயன் பெறுவோர் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தியதன்*

மூலம் பொதுவிநியோக அமைப்பு சிறப்பாகச் செயல்பட ஆரம்பித்தது. இது விநியோக தரப்பை நன்கு வலுப்படுத்தியது (படம்–2). பி.டீ.எஸ் திட்டத்தை விரிவுபடுத்தியது, பி.டீ.எஸ் விலைகளைக் குறைத்தது, கணினிமயமாக்கியது, உணவுப் பொருட்களை விடுகளுக்கே சென்று விநியோகம் செய்தது, தனியார்களிடம் இருந்த நியாய விலைக் கடைகளை மீட்டது, குறை தீர்ப்புக்காக முறையான வழிமுறைகளை நிர்மாணித்தது போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மாநிலத்தில் பொது விநியோக அமைப்பை மேம்படுத்தச் செய்தன. விநியோகம் மற்றும் தேவை என இரு தரப்பிலும் ஏற்பட்ட மேம்பாடுகள் குறுகிய காலமான பத்தாண்டுகள் என்ற காலகட்டத்திற்குள்ளேயே சட்டீஸ்கர் மாநிலம், மாதிரி மாநிலமாக மாறி இருக்கிறது. சி.பி.டீ.எஸ் கொள்கை பயனாளிகளில் செல்வாக்கு மிக்கவர்களின் குழுவை உருவாக்க உதவியது. இது தேவை தரப்பை வலுப்படுத்த உதவியது (படம்–1ல் கொள்கை → செல்வாக்கு மிக்க குழுக்கள் என்ற இணைப்பு).

இதற்கு மாறாக, பீகாரில் பொது விநியோக அமைப்பு 2011வரை பலவிதமான பிரச்சனைகளுக்கு உள்ளாகி இருந்தது.

அனைத்து நிலைகளிலும் பெரிய அளவில் உணவுப்பொருட்கள் கையாடல், விநியோகத்தில் முறைகேடு (விலக்கல் மற்றும் சேர்த்தல் பிழைகள்); பீகார் மாநில உணவு மற்றும் பொது விநியோக கார்ப்பரேஷன் (பி.எஸ்.எஃப்.சி.எஸ்.சி) செயல்படாமல் முடங்கி இருந்தது; பி.டீ.எஸ் டீலர்கள், அரசு அதிகாரிகள், உள்ளூர் அரசியல்வாதிகள், சில சமயங்களில் அமைச்சர்கள் என இவர்களுக்கிடையே கூட்டணி பிரச்சனைகள் முக்கியமானதாக இருந்தன (ஏற்கனவே குறிப்பிட்டிருந்த ஜோஸ் மூஜ் என்பவரின் கட்டுரையைப் பார்க்கவும். அதனுடன் அவரின் த ஜர்னல் ஆஃப் பீசன்ட் ஸ்ட்டீஸ் தொகுதி 25 எண்2–ல் 1998ல் வெளியான “உணவுக் கொள்கையும் அரசியலும்: இந்தியாவில் பொது விநியோக அமைப்பின் அரசியல் பொருளாதாரம்” என்ற கட்டுரையையும் பார்க்கவும்). இத்தகைய நிலைமை ஏற்படக் காரணம் அந்த மாநிலத்தில் போதிய உணவுப் பொருள் உற்பத்தி இல்லாமையே ஆகும். இதனால் உணவுக்கான ஆதரவு திரட்டும் முயற்சி வலுவானதாக இல்லாமல் போய்விட்டது. பொருளாதாரத்தில் பொதுவான மந்தத்தன்மை; பொருளாதார, சமூகத் தளங்களில் பெரிய அளவிலான சமநிலையற்ற தன்மை; இதனால் பொதுவிநியோக அமைப்பின் முதன்மை பயனாளிகளான ஏழைகள் உண்மையில் குரல் அற்றவர்களாக இருந்தார்கள். சிறப்பாகச் செயல்படக்கூடிய சிவில் சொசைட்டி மற்றும் ஊடகம் இல்லாத காரணத்தால், பொது விநியோக அமைப்பு என்பது தேர்தல் அறிக்கையில் ஒரு பிரச்சனையாக மாறாமல் போய்விட்டது. ஆனால் ஆந்திரப்பிரதேசத்திலும் தமிழ்நாட்டிலும் இது தேர்தல் பிரச்சனையாக இருந்தது. பயனாளிகள், ஊடகம், சிவில் சொசைட்டி ஆகியோரிடம் இருந்து தேவை உருவாக வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. மிகச் சிறப்பாக பொது விநியோக அமைப்பு செயல்பட பாசாங்கு அற்ற அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கமும் தேவைப்படுகின்றார்கள்.

இந்தப் போக்குகள் எல்லாம் கடந்த சில ஆண்டுகளில் மாறி உள்ளன. பொது விநியோக அமைப்பு கடந்த மூன்று ஆண்டுகளில், குறிப்பாக கடந்த 12 மாதங்களில் மேம்பாடு அடைந்துள்ளது. இதற்கு முதன்மையான காரணம் பீகார்

மாநில அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளே (ஜீன் ட்ரெசா மற்றும் ரீத்திகா கேரா இருவரும் எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லியில் 2015ல் எழுதி உள்ள "பொது விநியோக அமைப்பில் இழப்புகளைப் புரிந்து கொள்ளுதல்" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). தடம் காணும் கூப்பன்கள் என்ற முறையை அறிமுகப்படுத்தியதில் இருந்து அதாவது 2011ல் இருந்து அபிவிருத்திக்கான அறிகுறிகள் தென்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில் மேலும் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக கடந்த 12 மாதங்களில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சமூக பொருளாதார மற்றும் சாதிக் கணக்கெடுப்பு புள்ளி விவரங்களைப் (எஸ்.இ.சி.சி) பயன்படுத்தி ரேஷன் அட்டைகளுக்கான புதிய பட்டியல் தயாரிக்கப்பட்டது. பீகாரில் உள்ள ஊரக குடும்பங்களில் சுமார் 75 சதவிகித குடும்பங்கள் புதிய ரேஷன் அட்டையை அல்லது அந்தோதயா அட்டையை வைத்துள்ளன. பொது விநியோக அமைப்பின் மூலம் ஒரு நபருக்கு ஒரு மாதத்திற்கு 5 கிலோ உணவுப் பொருள் பெறத் தகுதி உண்டு என்பதையே பெரும்பான்மையான மக்கள் இப்போதுதான் முதன்முதலாகத் தெரிந்து கொண்டனர். பொது விநியோக அமைப்பை தேர்தல் விவாதங்களுக்குள் கொண்டு வந்ததன் மூலம் ஒட்டுமொத்த அரசியல் சொல்லாடலுமே மாநிலத்தில் மாறி உள்ளது. மக்கள் தங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளவும் தங்களுக்கான நிலுவையைப் பெறுவதற்கான கோரிக்கையை எழுப்பவும் எதிர்க்கட்சிகள் உதவுகின்றன. இவை எல்லாம் இணைந்து பொது விநியோக அமைப்பின் பயனாளிகளிடம் இருந்து அழுத்தம் உண்டாகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமைகளோடு ஒப்பிட இது முற்றிலும் முரண்பாடான சூழ்நிலையாகும். அப்போது பெரும்பான்மையான மக்களுக்கு பொது விநியோக அமைப்பு முறை குறித்து எதுவும் தெரியாது.

இதுவரையிலான விவாதம் பீகார் மற்றும் சட்டீஸ்கர் மாநில பொது விநியோக அமைப்பில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திக்கு முதன்மையான காரணம் அரசாள்கையில் எடுக்கப்பட்ட முன்னோட்ட நடவடிக்கை களின் விளைவே என்பதை சுட்டிக்காட்டி உள்ளது. இது விநியோகத் தரப்பை மேம்படுத்தி உள்ளது. தேவை தரப்பை வலுப்படுத்தி உள்ளது.

## பிற மாநிலங்களின் அனுபவம்

கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறையாக்கலில் இதேவிதமான அபிவிருத்திகள் பிற மாநிலங்களிலும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன (ரீத்திகா கேரா 2011ல் எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லியில் எழுதி உள்ள "பொது விநியோக அமைப்பின் உணவு தானியங்களைத் திசை திருப்பும் போக்குகள்" என்ற கட்டுரையையும் ராகவ் பூரி 2012ல் எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லியில் எழுதி உள்ள "பொது விநியோக அமைப்பை சீர்திருத்துதல்: சட்டீஸ்கரில் இருந்து கற்ற பாடங்கள்" என்ற கட்டுரையையும் பார்க்கவும்).

இமாசலப் பிரதேசத்தில் பொது விநியோக அமைப்பு என்பது அனைவருக்கும் பொதுவானதாக உள்ளது (ஆனால் சமச்சீராக இல்லை). ஏ.பி.எல் குடும்பங்களைவிட குறைந்த விலையில் பொருட்களை பீ.பி.எல் குடும்பங்கள் பெற்றுக் கொள்ள முடியும். உணவு தானியம் அல்லாத இதர பி.டீ.எஸ் சரக்குகள் (பருப்புகள் மற்றும் உணவு எண்ணெய்) அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரே விலையில்தான் தரப்படுகின்றன. "தேவையைக் குறைத்தல்" என்ற நடைமுறைக்குத் திரும்பாமலேயே இவை

எல்லாம் சாதிக்கப்பட்டன. நிலப்பகுதி சிரமமானதாக இருந்தாலும் தமிழ்நாடு போன்று கடுமையான சோதனைகள் இல்லாமல் இந்தச் சாதனையானது எட்டப்பட்டுள்ளது. பொது விநியோக அமைப்பை அனைவருக்குமானதாக மாற்றியதே இதற்கு முதன்மை காரணம் ஆகும். இதன்மூலம் பயனாளிகளிடம் இருந்து தேவை அதிகரித்தது.

மக்களுக்கு இசைந்த மற்றும் குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் திறம் பட்ட கண்காணிப்பு முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதிப்படுத்துவதற்காக எளிய, சிக்கனமான நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இத்தகைய சிரத்தைமிக்க சிந்தனையை வேறெந்த மாநிலமும் அமைப்புகளை உரிய முறையில் வைத்திருக்க முயலவில்லை (25–9–2011 தி இந்து இதழில் ஆர்.அலமேலு எழுதி உள்ள "தமிழ்நாட்டில் இது சிறப்பாகச் செயல்படுகின்றது" என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

ஆந்திரப்பிரதேசம் எளிய விலக்கல் காரணியைப் பயன்படுத்தியது. இதன் மூலம் விலக்கல் பிழைகள் குறைந்தபட்ச அளவினதாகக் குறைக்கப்பட்டன. ஆனால் ஆந்திராவில் சேர்த்தல் பிழைகள் அதிகம் உள்ளன. 2008ல் இருந்து ஒரிஸா மாநிலமானது சட்டீஸ்கர் மாநில மாதிரியைக் கடைபிடிக்கின்றது. கோராபுத் போலாங்கீர் காலஹந்தி பிராந்தியத்தில் (கே.பி.கே) அனைவருக்குமான பொது விநியோக அமைப்பு என்ற நடவடிக்கையும் இதில் அடங்கும். நியாய விலைக் கடையை நிர்வகிக்கும் பொறுப்பு கிராம பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட்டது. மே 2010ல் இருந்து ராஜஸ்தான் மாநிலமும் மேலே கூறிய சீர்திருத்த நடவடிக்கைகளில் சிலவற்றை நடைமுறைப்படுத்தியது. 2010ல் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்கள் பொது விநியோக அமைப்பின் செயல்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன என்று முடிவுகள் தெரிவிக்கின்றன. ஜார்க்கண்ட் மாநிலத்தில்தான் முழுமையற்ற, புதுப்பிக்காத பி.பீ.எல் பட்டியல் உள்ளது. எனினும் பின்னாட்களில் ஜார்க்கண்ட் மாநிலமும் சில சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்தது. 2009ல் இருந்து பொது விநியோக அமைப்பில் அரிசி விலை கிலோ ரூ.1/– எனக் குறைக்கப்பட்டது. எப்போது விநியோகிக்கப்படும் என்று சரியாக எதிர்பார்க்கவும் வீடு வீடாக விநியோகிக்கவும் பொது விநியோக அமைப்பில் உணவு தானியங்களை விநியோகிப்பதற்கான கால அட்டவணை உருவாக்கப்பட்டது.

## முடிவுகள்

பொது விநியோக அமைப்பின் பயன்கள் பிறருக்கும் கிடைக்கும் வகையில் விரிவாக்குதல், பி.டீ.எஸ் விலைகளைக் குறைத்தல், கணினி மயமாக்குதல், உணவு தானியங்களை வீடுகளுக்கே சென்று விநியோகித்தல், ரேஷன் கடைகளை தனியார் வசமிருந்து மீட்டல், நியாய விலைக் கடைகளை சமுதாயமே நிர்வகித்தல், குறை தீர்ப்புக்கான முறையான வழிமுறைகளை நிறுவுதல், நியாயவிலைக் கடை கமிஷனை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக பல்வேறு மாநிலங்களும் பொது விநியோக அமைப்பை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றன. இந்தப் புதுப்பித்தல் பணியில் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால் பொது விநியோக அமைப்பைச் செயல்படச் செய்ய வேண்டும் என்ற புதிய அரசியல் உறுதியே ஆகும். பயன்கள் பெறுவோர் வட்டத்தைப் பெரிதாக்குவதன் மூலம் தேவையை வலுப்படுத்துதல், சிறப்பாகச் செயல்படும் பொது விநியோக அமைப்பில் பயனாளிகளின் பங்கை அதிகரித்தல் என்பனவும் இதில் முக்கிய அம்சங்கள் ஆகும். ●

# எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையும், சமூக மாற்றமும்

சரண் சிங்[1], CL. தத்ஹிக்[2] மற்றும் S. அனந்த்[3]

நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த ஏதுவாக முதலீட்டை ஊக்குவிக்க சமுதாயத்தில் நலிந்த, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எளிதான முறைகளில் நிதி வசதி அளிப்பதே எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையாகும். நாடெங்கிலும் சம நிலையில் சமுதாய வளர்ச்சியை மேம்படுத்த எல்லோரையும் உள்ளடக்கிய நிதிநிலைமை உதவுகிறது பெண்கள் உள்ளிட்ட ஏழைகள் மற்றும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு அதிக அதிகாரங்களை அளித்து அவர்கள் நிதி சார்ந்த முடிவுகளை சுயமாக எடுக்க அதிக திறமை வாய்ந்தவர்களாக உருவாக்க இது உதவும். சேமிப்பு, பணபட்டுவாடா கணக்கு, கடனில் காப்பீட்டு வசதி, ஓய்வூதியம் போன்ற நிதி சார் சேவைகள் எல்லோருக்கும் கிடைக்க செய்வதே எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையின் நோக்கமாகும். வர்த்தக வாய்ப்புகள், கல்வி, ஓய்வுக் காலத்திற்கான சேமிப்புகள் மற்றும் அவசர கடன்கள் உள்ளிட்ட இழப்புகளை ஈடுகட்ட ஏதுவான காப்பீட்டு வசதிகள் போன்ற சேவைகளை அளிப்பதும் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையின் நோக்கமாகும். பெரும்பான்மையான இந்தியா வாழ் மக்களுக்கு சிறந்த வாழ்க்கை தரத்தையும் வருமானத்தையும் அளிக்க முயல்வதே எல்லோரையும் உள்ளடக்கிய நிதிநிலைமையின் குறிக்கோளாகும்.

எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை உட் கொண்ட முறையான நிதித் துறை சேவைகள் எல்லோருக்கும் கிடைக்க வைப்பது ஒரு தொடர் முயற்சியாகும். இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து இதற்கு தேவையான முயற்சிகளை இந்திய அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் எடுத்து வருகின்றன. முன்பு செய்த முயற்சிகளால் போதிய பலன்கள் கிடைக்கவில்லை. ஆனால் சமீபத்தில் மத்திய அரசு கொள்கைகளை பரிசீலித்து குறைந்தபட்சம் வங்கிக் கணக்குகள் துவக்குவதிலாவது எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை வலுவாக வேண்டுமென்று தீர்மானித்தது. பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனாவுக்கு நல்ல பலன் கிடைத்து இந்தியாவின் 98 சதவிகித குடும்பங்கள் வங்கிக் கணக்கு துவக்க முடிந்துள்ளது. இது பலதரப்பட்ட தாக்கங்களை ஏற்படுத்தினாலும் சமூக பொருளாதார சூழ்நிலையை மாற்றி இந்தியாவில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

## எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையின் வரலாறு சார்ந்த வளர்ச்சி

காலனி ஆட்சிக் காலத்திலிருந்தே கொள்கை வகுப்பவர்கள் முறைப்படுத்தப்படாத துறைகளின் தன்மைகளைக் குறைக்க முயற்சிகள் எடுத்து வருகின்றனர். வட்டிக்கு கடன் கொடுக்கும் தனியார் ஆதிக்கத்தை 1895ல் நிக்கெல்சன் அறிக்கை சுட்டிக்காட்டியது. ஆதன் அடிப்படையில் 1904ம் ஆண்டு கூட்டுறவு கடன் சங்கங்கள் சட்டம் இயற்றப்பட்டு அச் சங்கங்கள் அமைக்க ஏதுவான

[1] பெங்களூரிலுள்ள இந்திய மேலாண்மை கழகத்தின் பொருளாதாரத்துறைக்கான இந்திய ரிசர்வ் வங்கி சார் பேராசிரியர். இந்திய ரிசர்வ் வங்கியின் வங்கி ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குனர்.

[2] இந்திய விவசாய பொருளாதார சங்கத்தின் கௌரவ செயலாளர். இந்திய ரிசர்வ் வங்கியின் கிராமப்புற பொருளாதாரத்தின் முன்னாள் இயக்குனர் மற்றும் பூனேயிலுள்ள விவசாய வங்கிக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்.

[3] வங்கிசார் தொழிற்நுட்ப வளர்ச்சி மற்றும் ஆய்வு நிலையத்தின் இணை பேராசிரியர் மற்றும் விஜயவாடா சார்ந்த தனியார் ஆய்வாளர்.

சட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் அடுத்த சில ஆண்டுகளில் மக்களுக்கு நிதிசார்ந்த சேவைகளை அதிகமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1951–54ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட அனைத்திந்திய கிராமப்புற கடன்சார் ஆய்வின்படி 1950–51ஆம் ஆண்டுகளில் விவசாய கடன் தேவைகளில் வணிக வங்கிகள் 0.9 சதவிகிதம்தான் பூர்த்தி செய்தன. விவசாயம் சார்ந்த தனியார் கடன் கொடுப்பவர்கள் 24.9 சதவிகிதமும், பொதுவாக வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் 44.8 சதவிகிதம் கடனையும் விவசாயிகளுக்கு அளித்தார்கள். (இந்திய ரிசர்வ் வங்கி 2008, 2011) எல்லோரையும் உள்ளடக்கிய நிதிநிலைமையை உருவாக்கும் முதல் முயற்சியாக 1955ல் இந்திய ஸ்டேட் வங்கி அரசுடைமையாக்கப்பட்டது. இதன் பிறகு, 1969 மற்றும் 1980ல் மேலும் பல வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டன. தேசிய விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) அமைக்கப்பட்டதும் விவசாயம் உள்ளிட்ட சில துறைகளுக்கு முன்னுரிமைக் கடன் வழங்குவது செயலாக்கப்பட்டதும், எல்லா மக்களும் முறைப்படுத்தப்பட்ட நிதிநிறுவனங்களிலிருந்து கடன் வசதி பெற வாய்ப்புக்களை அதிகரித்தது.

பல வகையான நிதித்துறை சேவைகளை வழங்க ஏதுவான திட்டங்களை 2005ல் இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்தது. முதல் கட்டமாக வங்கிகள் அடிப்படை சேமிப்புகளை மக்களுக்கு வழங்க உத்தரவிட்டது. (2012 ஆகஸ்டில் இதை அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கு என்றும் தற்போது ஜன்தன் கணக்கு என்றும் கூறப்படுகிறது). ரங்கராஜன் குழு 2008ல் அளித்த பல்வேறு பரிந்துரைகளை அடுத்து எல்லோருக்கும் நிதிசார் சேவைகள் வழங்குவது வேகம் பெற்றது. அந்த பரிந்துரைகளாவன: வங்கிகளில் சேமிப்பு, கடன் வசதி, குறு காப்பீட்டு வசதி மற்றும் பணம் பரிமாற்றம் ஆகிய சேவைகள் ஏழைகளுக்கு கிடைக்கச் செய்வது. இதன் அடிப்படையில் ஒரு மாவட்டத்திலாவது ஒரு வங்கி இந்த அனைத்து சேவைகளையும் ஏழைகளுக்கு செய்து கொடுத்து 100 சதவிகித வெற்றியை பெறுமாறு கூறப்பட்டது. இது அல்லாமல், ஏழை மக்களுக்கு அவர்கள் வீட்டு வாசலிலேயே சில சேவைகளை அளிக்கவும் வங்கிகளுக்கு உத்தரவு இடப்பட்டது. 2010ல் துவங்கி அடுத்த மூன்று ஆண்டுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய நிதிசார் சேவைகளை வழங்க ஒரு திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2000 மக்களுக்கு மேல் வாழும் கிராமங்களில் 2012க்குள்ளும் 1000லிருந்து 2000 வரையிலான மக்கள் வசிக்கும் கிராமங்களில் 2013க்குள்ளும் இச்சேவைகளை வழங்க திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வங்கி சார்ந்த சேவைகளில் நான்கு சேவைகளாவது இந்த கிராமங்களில் இருக்க வேண்டும். இனி துவங்கப்படும் புதிய வங்கிக் கிளைகள், கிளைகள் இல்லா பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் அமைக்க வேண்டும் என்றது இந்தத் திட்டம்.

விவசாயபொது கடன் அட்டைகளை வழங்குவது மற்றொரு முக்கிய திட்டமாகும். சமீப கால முயற்சியாக ரூ.10 லட்சத்துக்கு உட்பட்ட கடன் தேவைக்குள்ள சிறு தொழில் முனைவோருக்கு கடன் வசதி வழங்க குறு தொழில் வளர்ச்சி மறு கடன் வழங்கும் நிதியம் முயற்சிகள் மேற்கொள்ளும். இந்த நிறுவனத்துக்கு 20,000 கோடி நிதி வசதியும் 3000 கோடி ரூபாய் கடன்சார் உத்திரவாதங்கள் வழங்கவும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் இந்தியாவின் குறு தொழில்களுக்கு கடன் வழங்கும் நிதியங்களுக்கு மறு

கடன் வசதி அளிக்கும். இப்படிப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் கிராமப்புறங்களில் முறைப்படுத்தப்பட்ட நிதித் துறையிலிருந்து கடன் வசதி அதிகரிக்கப்படவில்லை. 2013ல் மேற் கொள்ளப்பட்ட கடன் மற்றும் முதலீடு ஆய்வின்படி முறைப்படுத்தப்பட்ட நிதி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் 17.2 சதவிகிதமாகவும், முறைப்படுத்தப்படாத துறைகளிலிருந்து பெறப்பட்ட கடன் வசதி 19 சதவிகிதமாகவும் இருந்தது. ஆகவே, கிராமப்புறங்களில் முறைப்படுத்தப்பட்ட துறைகளிலிருந்து கடன் வசதி வழங்குவது அதிகரிக்கப்பட்டாலும், தனியாரிடம் கடன் பெறுவது, குறையவில்லை. ஏழைகளுக்கு முறைப்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகள் கிடைக்காத பல காரணங்களை அனந்த் மற்றும் ஓங்கூ கூறியுள்ளனர் (2013). சிங் மற்றும் நாயக் 2014ல் மேற்கொண்ட ஆய்வில் எல்லோரையும் உள்ளடக்கிய நிதிச் சேவையை வழங்குவதில் உள்ள தடங் கல்களை தெளிவுபடுத்தியிருக்கிறார் (2015).

இதனடிப்படையில், தற்போதைய பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா முந்தைய அணுகு முறையிலிருந்து மாறுபடுகிறது. இந்தத் திட்டம், தீவிரமாக செயல்படுத்தப்படுவதுடன் ரூபாய் கையிருப்பு அட்டை, குறு காப்பீடு மற்றும் வங்கிச் சேவைகள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சென்றடையும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய திட்டங்களில் கிராம அளவில் செயல்பட்டன. இந்த திட்டம் துவங்கப்பட்டபோது ஏழரை கோடி வங்கி கணக்குகள் ஜனவரி 26, 2015க்குள் துவக்கப்பட வேண்டும் என்ற இலக்கு இருந்த நிலையில், எதிர்பாராத அளவுக்கு சாதனை அளவு வெற்றி கிடைத்துள்ளது (அட்டவணை 1).

## எல்லோருக்கும் நிதிசார் சேவைகள் வழங்குவதால் ஏற்படும் சமூக பொருளாதார விளைவுகள்

எல்லோருக்கும் நிதிசார் சேவைகள் வழங்குவது என்பது வங்கி சேவைகளை கடந்த நிலையாகும். கடந்த 20 ஆண்டுகளாக நாம் உணர்ந்த ஒரு நிலை பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பான வங்கித்துறை உருவாக்கமும், விரிவாக்கமும் ஆகும். பொருளாதார மாற்றங்கள் சமூக மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதை வரலாறு கூறுகிறது. எல்லோருக்கும் நிதி சேவைகளை வழங்க முயலும் போது அதனால் பெரிய பொருளாதார சமூக

அட்டவணை 1 : பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா
(எண்கள் கோடியில்)

| வரிசை எண் | | திறக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | | | ரூபாய் கையிருப்பு அட்டைகளின் எண்ணிக்கை | கணக்கு களில் உள்ள தொகை | பணமில்லா கணக்குகளின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிராமப் புற | நகர்ப் புற | மொத்தம் | | | |
| 1 | பொதுத்துறை வங்கிகள் | 6.9 | 5.8 | 12.7 | 11.9 | 14357.5 | 52.3 |
| 2 | தனியார் வங்கிகள் | 2.5 | 0.4 | 2.9 | 2.1 | 3258.5 | 52.1 |
| 3 | கிராம வங்கிகள் | 0.4 | 0.3 | 0.7 | 0.6 | 1068.6 | 49.3 |
| | மொத்தம் | 9.79 | 6.5 | 16.3 | 14.5 | 18684.6 | 52.2 |

ஆதாரம் : இந்திய அரசு (2015a)

## அட்டவணை 2 :
## எல்லோருக்கும் நிதிசார் சேவைகளின் வளர்ச்சி : வங்கிகள், கிராம வங்கிகள்

| *விவரங்கள்* | *2010 ஆண்டு முடிய* | *2011 ஆண்டு முடிய* | *2012 ஆண்டு முடிய* | *2013 ஆண்டு முடிய* | *2014 ஆண்டு முடிய* |
|---|---|---|---|---|---|
| கிராமங்களில் வங்கி சேவைகள் | | | | | |
| a) கிளைகள் | 33,378 | 34,811 | 37,471 | 40,837 | 46,126 |
| b) கிளைகள் அல்லா வகையில் | 34,316 | 81,397 | 1,44,282 | 2,27,617 | 3,37,678 |
| c) மொத்தம் | 67,694 | 1,16,208 | 1,81,753 | 2,68,454 | 3,83,804 |
| நகர்ப்புறங்களில் தொடர்பாளர் மூலம் | 447 | 3,771 | 5,891 | 27,143 | 60,730 |
| **அடிப்படை சேமிப்பு கணக்கு வைப்பு கிளைகள்** | | | | | |
| a) மில்லியன்களில் | 60.19 | 73.13 | 81.20 | 100.80 | 126.00 |
| b) தொகை (ரூ. பில்லியன்களில்) | 44.33 | 57.89 | 109.87 | 164.69 | 273.30 |
| **அடிப்படை சேமிப்பு கணக்கு வைப்பு–தொடர்பாளர் மூலம்** | | | | | |
| a) மில்லியன்களில் தொகை | 13.27 | 31.63 | 57.30 | 81.27 | 116.90 |
| b) ரூ. பில்லியன்களில் | 10.69 | 18.23 | 10.54 | 18.22 | 39.00 |
| **மேற்கண்ட கணக்குகளில் கடன் வசதி** | | | | | |
| a) மில்லியன்களில் தொகை | 0.18 | 0.61 | 2.71 | 3.92 | 5.90 |
| b) ரூ. பில்லியன்களில் | 0.10 | 0.26 | 1.08 | 1.55 | 16.00 |
| **விவசாய கடன் அட்டை** | | | | | |
| a) மில்லியன்களில் | 24.31 | 27.11 | 30.24 | 33.79 | 39.90 |
| b) ரூ. பில்லியன்களில் | 1240.10 | 1600.05 | 2068.39 | 2623.00 | 3684.50 |
| **பொதுவான கடன் அட்டை** | | | | | |
| a) மில்லியன்களில் | 1.40 | 1.70 | 41.84 | 3.60 | 7.40 |
| b) ரூ. பில்லியன்களில் | 35.10 | 35.07 | 2.11 | 76.30 | 1096.90 |

*ஆதாரம் : இந்திய அரசு (2014e), இந்திய ரிசர்வ் வங்கி (2013, 2014, 2015)*

மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிராமப்புற பகுதிகளில் பெரிய மாற்றங்களை காண்கிறோம். விவசாயத்தில் மிக வேகமாக இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன, போக்குவரத்து, தொலைதொடர்பு ஆகிய வைகளில் முன்னேற்றம். தொழில்நுட் பத்திலும் மாற்றங்கள். இந்த சமூக பொரு ளாதார மாற்றங்களினால் வங்கி சார்ந்த நடவடிக்கைகளில் பெரு வளர்ச்சி (அட்டவணை–2)

ஜன்தன் திட்டத்தினால் ஏற்படும் சமூக தாக்கத்தினால் ஒரு முழுமையான சமூக பாதுகாப்பு வலை கிடைக்கிறது. பிரதம மந்திரி பாதுகாப்பு காப்பீடு திட்டம், பிரதம மந்திரி ஆயுள் காப்பு திட்டம், மற்றும் அடல் ஓய்வூதிய திட்டம் ஆகிய மூன்றும் குறைந்த செலவில் கிடைக்கின்றன. இந்த மூன்று திட்டங்களில் சுமார் 10.4 கோடி மக்கள் சேர்ந்துள்ளனர் (இந்திய அரசு 2015b) பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனாவை ஒரு முக்கிய கருவியாக

பயன்படுத்தி இந்த திட்டங்களின் மூலம் மக்களுக்கு பயனளிப்பதோடு, ஏழைகளுக்கும் முறைப்படுத்தப்படாத துறைகளில் பணிபுரிபவர்களுக்கும் சமூக பாதுகாப்பு வலையையும் ஏற்படுத்த முடியும்.

2010க்குப்பிறகு எல்லோருக்கும் நிதிசார்ந்த சேவையை அளிப்பதில் தொழில்நுட்பம் முன்னிலை வகிக்கிறது. தொழில்நுட்ப முன்னேற்றங்களும், பிரச்சினைகளுக்கு தீர்வு காண தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் உள்ள செலவுகள் குறைந்து வருவதாலும், பிரதம மந்திரியின் ஜன்தன் திட்டத்துக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. ஜன்தன், ஆதார் மற்றும் கைப்பேசி ஆகியவைகளை பயன்படுத்துவதன் மூலமும் தற்போது அளிக்கப்பட்டுள்ள கடன் மற்றும் இருப்பு அட்டைகளை பயன்படுத்துவதற்கு அளிக்கப் பட்டுள்ள சலுகைகளாலும் நம்முடைய பொருளாதாரத்திலும் சமுதாயத்திலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த ஒரு அரிய வாய்ப்பு உள்ளது. வங்கித்துறை விரிவாக்கத்தினாலும், பல மாநில அரசுகள் அரசின் சேவைகளை மக்களுக்கு அளிப்பதற்காக தகவல் தொலை தொடர்பு தொழிற்நுட்பங்களை பயன்படுத்துவதாலும், ஆதார் பயன்படுத்தப்படுவதாலும், இதுவரை கிடைக்காத பல வெற்றிகளை இந்த கணிணிசார் அணுகுமுறை மூலம் நாம் பெற வாய்ப்புள்ளது. அடிப்படை தகவல்களை நாம் பார்க்கும் போது, ஜன்தன் பெருமளவு விரிவாக்கம் பெற்றிருப்பதால், இந்த வாய்ப்பு சாத்தியமாகிறது. ஏனெனில், பெரும்பான்மையான கிராமப்புற குடும்பங்கள் தங்களுடைய பணத்தை 25 சதுர கிலோமீட்டர் அளவிற்குள்தான் செலவு செய்கிறார்கள். இந்திய பொருளாதார பூகோள அமைப்பைப் பார்க்கும் போது பெரும்பான்மையான கிராமங்கள் ஒரு ஊரிலிருந்து, ஐந்திலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றன.

ஜன்தன் கணக்குகளை பயன்படுத்தி பல மக்களை சிறு வணிகங்களோடு இணைக்க முடியும். பலர் ஏற்கனவே முறைப்படுத்தப்பட்ட வங்கித்துறையில் இணைந்துள்ளனர். ஆதாரை சார்ந்த குறு பணம் வழங்கு இயந்திரங்கள் (வங்கித்தொடர்பாளர்கள் உதவியோடு) மூலம் மக்கள் பொருள்கள் வாங்குவதற்கு மின் தகவல் அட்டைகளை பயன்படுத்தி பணக் கையிருப்பு ரூபாய் அட்டைகளை பயன்படுத்தலாம். ஆனால், இது செயல்படுவதற்கு சில மாற்றங்களை செய்ய வேண்டும். முக்கியமாக, இந்த வியாபாரங்களுக்கு தகுந்தவாறு வங்கிகள் உடனுக்குடன் பணப்பரிமாற்றம் செய்ய வேண்டும். இதற்கான தொழிற்நுட்ப மாற்றங்களை செய்வது கடினமல்ல. இந்த முறையில், மக்கள் பண நோட்டுக்களை பயன்படுத்துவதற்கு பதிலாக மென்பொருள் அட்டை மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பெரும் அளவிலான மக்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கும் வகையில் தொழில்நுட்ப முன்னேற்றங்களினாலும், கைப்பேசி வசதிகளினாலும் இந்த மாற்றங் களுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. சாம்சங் நிறுவனத்துக்கு அமெரிக்கா அளித்துள்ள ஒரு காப்புரிமையின்படி விரல் ரேகையை பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழிற்நுட்பம் வளர்ந்துள்ளது.

வங்கித்தொடர்பாளர் மூலமாக சேவைகளை வழங்கும்போது, இதுவரை பூர்த்தி செய்யப்படாத பல நிதி சேவைகளை அளிக்கும் வாய்ப்பு தெரிய வந்துள்ளது. இதனால் இதுவரை முறையான நிதிச்சேவைகளை வழங்க இயலாத இடங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி மூன்று பெரிய பயன்களை நாம் அறிகிறோம். எளிதாக சேவையை பெற முடிவது சேவைக்கான குறைந்த கட்டணங்கள் மேம்படுத்தப்பட்ட வங்கி சார்ந்த உறவுகள் ஆகியவைகளினால் நிகழ்ந்துள்ள உயர் கடன் வசூல் விகிதங்கள். இப்படி விரிவாக்கப்பட்டுள்ள வங்கி சேவைகளினால் இதுவரை முறைப்படுத்தப்படாத நிதிச்சேவை

வழங்கியவர்களைவிட மலிவாக சேவைகளை அளிக்கமுடிகிறது. தெலுங்கானா மாநிலத்தில் மெஹபூப் நகர் மாவட்டத்தில் பணம் வழங்கு இயந்திரங்கள் மற்றும் வங்கி தொடர்பாளர்களின் பெருக்கத்தால் முறைப்படுத்தப்படாத பண மாற்று தரகர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதைப்போலவே, வங்கிகள் கணிணிசார் உடனடி பணமாற்றம் செய்வதால், அதற்கான செலவுகளும் குறைந்துள்ளது. பல கிராமங்களில் வங்கி தொடர்பாளர்கள் மூலம் காலவரை வைப்பு தொகைகள் பெறப்படுவதால், இதுவரை முறைப் படுத்தப்படாத பாதுகாப்பற்ற முதலீடுகள் குறைந்துள்ளன. இதனால், கிராமங்களில் முதன்முறையாக மக்கள் முறைப்படுத்தப்பட்ட வங்கிகளில் பணத்தை செலுத்தி பாதுகாப்பாக இருக்க முடியும். தேவைப்படும் போது எடுத்துக்கொள்ள முடியும். இதனால், மக்களின் சேமிப்பு பாதுகாப்பற்ற முதலீடுகளில் வீண் ஆகாமல், நாட்டிற்கு அவசியம் தேவையான கல்வி, நல்வாழ்வு மற்றும் வீட்டு வசதித் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

## ஜன்தன்னை தாண்டி

ஜன்தன்னின் வெற்றியை நாம் உறுதி செய்துவிட முடியாது. முறைப்படுத்தப்பட்ட வங்கித்துறை தனியார், முறைப்படுத்தப்படாத வட்டிக்கு பணம் வழங்குவோரை மீட்கும் போதுதான் இந்த திட்டம் வெற்றி அடைந்தது என்று கூறமுடியும். பிரதம மந்திரி ஜன்தன் திட்டத்தின் பயன்கள் மக்களுக்கு விரைவாக சென்று அடையாததற்கு இரண்டு இடர்பாடுகள் உள்ளன. மக்கள் பயன்படுத்தும் இடங்கள் போதிய அளவில் இல்லாததும், வங்கித் தொடர்பாளர்கள் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்துக்குமான பணத்தொகை குறைவாக உள்ளதேயாகும் (அனந்த் அண்ட் ஓங்கூ 2014, தத்ஹிக் 2014). மக்கள் பயன்படுத்தும் இடங்கள் குறைவாக இருப்பதால் கிட்டத்தட்ட இந்தியாவின் பாதி கிராமங்களில் மக்களுக்கு வங்கிச் சேவை கிடைப்பதில்லை (அட்டவணை 2). பிரதம மந்திரி ஜன்தன் திட்ட கணக்கு மூலம் ஒவ்வொரு நிகழ்வுக்கும் உண்டான அதிகபட்ச தொகையை உயர்த்துவதன் மூலம் மக்கள் இந்த சேவைகளை அதிகமாக பயன்படுத்துவர். ஜன்தன் திட்டத்தின் வெற்றியும் பொதுவாக மக்கள் வங்கிகளை பயன்படுத்துவதன் போக்கும் இந்த கணக்குகள் மூலம் பல சேவைகளை பெறும் வசதிகள் இல்லாததும், வங்கித் தொடர்பாளர்கள் மூலம் செய்யப்படும் நிகழ்வுகளுக்கு பல தடங்கல்கள் இருப்பதும் முக்கிய காரணமாகும். பல வங்கிகளில் இம்மாதிரியான கணக்குகளில் நாள் ஒன்றுக்கு பணம் எடுப்பதோ, செலுத்துவதற்கோ அதிகபட்ச தொகை ரூ.1500லிருந்து ரூ.10,000 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு நிகழ்வுக்கு அதிகபட்ச தொகையாக ரூ.50,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேற்பட்ட தொகைக்கு வங்கித் தொடர்பாளரும், கணக்கு வைத்திருப்பவரும் நேரடியாக வங்கிக்கு வந்து அதற்கான ஒப்புதலை தர வேண்டும். ஒரு நாளைக்கு ரூ. 10,000க்குமேல் எந்த சேவை நிகழ்வும் செய்ய முடியாது. ஜன்தன் திட்டத்தின் மூலமாக அரசாங்கத்திடமிருந்து தாங்கள் பெற வேண்டிய அனைத்து நிகழ்வுகளுக்கும் மக்கள் ஒப்புதல் அளித்திருப்பதால் நிலைமை மேலும் சிக்கலாகிறது. இது அல்லாமல் பல அரசு திட்டங்களின் கீழ் நேரடி பயன் மாற்றம், இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய தொகைகள் ஆகியவைகள் இந்த அதிகபட்ச தொகையைவிட அதிகமாக உள்ளன. எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமையை உருவாக்க அஞ்சலக வங்கிச் சேவைகளையும் பயன்படுத்த வேண்டும் என்று சிங் (2014) கூறுகிறார். அஞ் சலகங்களில் சுமார் 28 கோடி கணக்குகள்

உள்ளன. 13 கோடி சேமிப்பு கணக்குகளும், 11 கோடி தொடர் வைப்பு கணக்குகளும் உள்ளன.[5]

அனைத்து மக்களுக்கும் நிதிசார் சேவைகள் கிடைப்பதற்கு இதுவரை பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டாலும் வெற்றி என்னவோ குறைவாகத்தான் கிடைத்துள்ளது. மக்களுக்கு அத்தியாவசிய பண்டங்களை வழங்கும் நியாய விலை கடைகளை பயன்படுத்துவதன் மூலம் பிரதம மந்திரி ஜன்தன் திட்டத்தை விரிவாக்கி சமுதாய பொருளாதார அமைப்புகளில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்து கிராமப்புறங்களிலும் மின் தகவல் தொடர்பை விரிவாக்க முடியும். ஆந்திர பிரதேச அரசு "எங்கும் ரேஷன் பொருட்களை பெறலாம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவதை நல்ல உதாரணமாக கூறலாம். இதன் மூலம் எங்கிருக்கும் நியாய விலைக்கடைகளிலும் ரேஷன் பொருட்களைப் பெறலாம். இதன் மூலம், ஒரு நகரத்திலுள்ள சிவில் சப்ளைஸ் துறையின் நியாய விலைக்கடைகளில், எந்தக் கடையிலிருந்தும் ஒருவர் ரேஷன் பொருட்களைப் பெறலாம். சிவில் சப்ளைஸ் துறையின் தகவல்கள் ஆதாருடன் இணைக்கப்பட்டிருப்பதால் எந்தக் கடையிலிருந்து எவ்வளவு ரேஷன் பொருட்களை பெறுகிறார்கள் என்பதை எளிதாக கண்காணிக்க முடியும். எல்லா ரேஷன் கடைகளிலும் (27,176) தேவையான கணிணிசார் இயந்திரங்கள் உள்ளதால் மொத்தமுள்ள 267 மண்டலங்களிலும் (தாலுக்கா) உள்ள சேமிப்பு கிடங்குகளில் உள்ள நிலைமைகளை ஒரு மையத்திலிருந்து கண்காணிக்க முடியும். இந்த நியாய விலைக் கடைகளை பல சேவை வழங்கு நிலையமாக மாற்றுவதன் மூலம் மக்களுக்கு பலவகையான நிதிசார் சேவைகளை வழங்கி வங்கித்துறையை பெரிதளவு விரிவாக்க முடியும்.

## முடிவாக

பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா தங்கத்தை பணமாக்கி வட்டி பெறும் திட்டம் மற்றும் முத்ரா திட்டங்களின் மூலம் பல வகையான நிதிசார் சேவைகளை மக்களுக்கு வழங்கி குறிப்பாக கிராமப்புற பொருளாதாரத்தில் பெருவகையான மாற்றங்களை ஏற்படுத்தும் வண்ணம் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை பயனளிக்கும். இந்தத் திட்டங்கள் மூலம் மக்களிடையே பணப்புழக்கம், பண இருப்பு மிகுந்து அவர்கள் முதலீடு செய்யவும் வாய்ப்புகள் ஏற்படும். இந்தத் திட்டத்தின் முக்கிய பங்கு பெறுபவர்களான வங்கிகள், குறு நிதி வழங்கு நிலையங்கள் தனக்குத் தானே உதவும் குழுக்கள், அஞ்சலகங்கள் மற்றும் முத்ரா பேங்க் அடங்கும். இவை அனைத்தும் வங்கித்துறை சார்ந்து செயல்படுவதால் மக்களுக்கு பலவகையான நிதி சார் சேவைகள் கிடைக்கும். அதைப்போலவே, கிராமப்புறங்களில் செயல்படும் 1,40,000 அஞ்சலக கிளைகள் புதிய சேவைகளை அறிமுகப்படுத்தவும், மக்களின் பணத்தை முதலீடு செய்யவும் உதவும். இதன்படி, புதிய வங்கி வைப்புக் கணக்குகள், சிறு சேமிப்பு கணக்குகள், தங்கப் பத்திரங்கள் மற்றும் புது வகையான சேவைகள் துவங்க வாய்ப்புள்ளது.

இந்த வகையான நடவடிக்கைகளினால் பொருளாதாரத்தில் புதியன வற்றை செய்ய வேண்டிய ஆர்வம் பெருக்கெடுத்து புதிய எண்ணங்களை மக்களுக்கு வேண்டிய பொருட்களாக தயாரிக்க ஏதுவாக அமையும். இதனால், எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஏற்பட்டு இந்தியாவில் பொருள் செய்வோம் என்ற திட்டம் வெற்றியடைந்து அதனால், பொருளாதாரத்தில் அதிக வேலை வாய்ப்பும் அதிக பொருள் உற்பத்தியும் ஏற்படும். ●

[5] அஞ்சலகங்களில் மீதமுள்ள கணக்குகள் காலவரை கணக்குகளாகும்.

# அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டத்தில் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு

– டாக்டர் பி.எம். மாத்யூ

பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டாலும் அதன் பயன் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கமே அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டத்திற்கு அடிப்படை. 'வளர்ச்சி' மற்றும் 'பங்கீடு' என்ற இரண்டையும் தனித்தனியாக அணுகாமல் ஒன்று சேர்த்து அணுக வேண்டும் என்பதும் இதன் நோக்கம் எனலாம். எனினும் உலக அளவில் இந்தக் கருத்து நாடுகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு அரசியல் மற்றும் சமூக முக்கியத்துவம் உண்டு. சுதந்திரப் போராட்ட காலத்திலேயே உள்ளூர் வளங்களைக் கொண்டு, உள்ளூர்த் தேவைகளை நிறைவேற்றும் சுயேட்சையான சிறு, குறு தொழில்களே பிரதானமான பொருளாதாரச் செயல்பாடுகளாக இருந்தன. பிரபல பொருளாதார மேதை மகலநோபிஸ் முன்மொழிந்த வளர்ச்சித் திட்டத்தில், சிறு–குறு தொழில்களே வளர்ச்சியை முன்னெடுத்து இயக்கும் எஞ்சினாக இருந்தன. அதே சமயத்தில் அவை அடிப்படையான பெருந்தொழில்துறைகளுக்குப் பக்கத் துணையாகவும் விளங்கின. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது என்றாலும், இந்தப் பெயர் பின்னாளில்தான் உருவாக்கப்பட்டது.

பல பதிற்றாண்டுகளாகவே இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சி கண்டே வந்துள்ளது. வளர்ச்சியின் விகிதம் வேண்டுமானால் சற்றுக் கூடக்குறைய மாறுபட்டிருக்கும். பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் உந்தித் தள்ள வேண்டும் என்ற இலட்சியம் ஒருபுறம் இருந்தாலும், வளர்ச்சியின் பலன் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் சென்று சேருமாறு கொள்கைகள் வரையப்பட்டு செயல்படுத்துவது மிக முக்கியமானதாகும். இதற்கெனவே குறு, சிறு, நடுத்தரத் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.

எனினும் அண்மைக் காலத்தில் பொருளாதாரக் கட்டமைப்பே மாறிவிட்ட சூழலில், அந்த மாற்றத்தோடு தன்னையும் மாற்றி இணைத்துக் கொண்ட பிரிவும் உண்டு; மாற்றத்திற்குத் தாக்குப்பிடிக்காமல், பின்தங்கிவிட்ட பிரிவும் உண்டு. இந்தப் பின்னணியில் குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மிக முக்கிய பணியை ஆற்றுகின்றன.

## குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் அரசின் உத்தி

குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அரசு மூன்றுவிதமான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில், பாரம்பரியத் தொழில்களைப் பாதுகாத்தல் என்பதாக இருந்து, சிலவகையான பொருள்களைச் சிறு தொழில் நிறுவனங்கள் மூலமாகத்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிலை இருந்தது. பின்னர், தொழில் முனையும் சிறுதொழில் அதிபர்களுக்கு அரசின் பெருந் தொழில்களுக்குத் தரப்படும் அனைத்துச்

---

**டாக்டர் பி.எம். மாத்யூ**

சலுகைகளும் கிடைத்தன. தற்போது, திறமைமிக்கத் தொழில் நிறுவனமானால் அது போட்டியைச் சமாளித்து வெற்றி பெற்றுவிடும் என்று கூறுகின்றனர்.

இதற்கேற்பவே, அரசின் அண்மைக் காலக் கொள்கைகளும், அமைந்துள்ளன. அவை: தேசிய இலக்கை எட்டுவதற்கான முன்னோடித் திட்டங்கள்; திறன் வளர்ப் பிற்கும், தொழில் முனைவை ஊக்கு விப்பதற்கும் சார்புரிலைத் திட்டங்கள். இவ்விரு கூறுகளும் ஒன்றிணைந்து செயல் படும்போது மக்களின் புத்தாக்கத் திறனும், ஆற்றலும் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## குறு, சிறு நடுத்தரத் தொழில் வளர்ச்சித் திட்டங்கள்

குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காகக் கடந்த ஆறாண்டுகளில் நம் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல திறத்தவை. செயல்தளங்களை நோக் கியவை, சமூகப் பிரிவுகளை நோக்கியவை, துணைப் பிரிவுகளுக்கு ஆதரவு என்று பல திட்டங்களைச் செயல்படுத்தியபோதும், எந்தப் பிரிவினருக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல் படுத்தப்பட்டனவோ, அந்தப் பிரிவினருக்கு உரிய காலத்திற்குள் நன்மை கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். இந்த ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கை யிலும், மத்திய பட்ஜெட்டிலும் குறிப்பிட் டுள்ள செயல்பாடுகளை நாம் உன்னிப்பாக மதிப்பிட வேண்டும்.

## புதிய தொடக்கங்கள் :

தற்போது உலக நாடுகள் பலவும், புதிய தொழில் தொடக்கங்களுக்கு ஊக்கம் அளிக்கும் போக்கைப் பின்பற்றுகின்றன. மக்கள் வளம் மிகுந்துள்ள நம் நாட்டிலும், இளையோரின் தொழில் தொடக்க முயற்சி களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இதற்கான சிறு முயற்சி மத்திய பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், இதனை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

## உள்ளூர் அளவிலான தயாரிப்புகள்

தேசிய போட்டிமிகு உற்பத்தித் திட்டம் (NMCP) மற்றும் தேசிய உற்பத்திக் கேந்திரமாக இந்தியாவை நிலை நிறுத்தும் அறிவிப்பும் வந்துள்ளது. 2014 மே மாதம், பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியில் புதிய கொள்கை அறிவிக்கப்பட்டது. பின்னர் 2014 சுதந்திரதினத்தன்று, உள்ளூர் அளவிலான தயாரிப்புகளை ஊக்கப்படுத்தும் கொள்கை அறிவிக்கப்பட்டது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தன்னம்பிக்கையையும், சுய மேட்டிமை யையும் தூண்டும் விதமாக அந்த அறிவிப்பு அமைந்தது.

## திறன்வளர்ப்பு

தொழிற்கல்வியில் நம் நாடு பல முன்முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், திறன் வளர்ப்பில் பெருத்த இடைவெளி நிலவுகிறது. இதனைச் சரிவரப் புரிந்து கொண்டு, ஒட்டு மொத்தக் கொள்கை அறிவிக்கப்படாமல் இருந்தது. ஆனால் 2014 ஆம் ஆண்டு பட்ஜெட்டில், மக்களின் திறன் வளர்ப்பிற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்றும் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதனைச் சரியாகச் செயல்படுத்தினால் புதிய தொழில் தொடக்கங்கள் உத்வேகம் பெறும்.

பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, மின்னணு சாதனங்கள், ஜவுளித் துறை ஆகிய மூன்று தொழில் பிரிவுகளுக்கு உற்பத்திப் பெருக்கு அணுகுமுறையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களின் திறனைப் பயன்படுத்துதல் :

இந்தியாவின் ஊரகப் பகுதிகளில் சாதி வேறுபாடுகளும், மொழிப் பாகுபாடுகளும்

புதிய தொழில் நிறுவனத் தோற்றத்திலும், அவற்றுக்கு ஆளெடுப்பதிலும்கூட பிரதி பலிக்கின்றன. வெவ்வேறான பண்பாட்டுப் பின்னணி கொண்ட பல சமூகப் பிரிவு மக்களும் கல்வி வாய்ப்புகளைப் பெறும் சூழ்நிலையில் அவர்களை குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் ஈர்த்துக் கொள்ள முடியும்.

சமூக விளிம்பு நிலைக் கோட்பாட் டின்படி பிரதான நீரோட்டத்தில் உள்ள வகுப்பினரை விடவும், ஓரங்கட்டப்பட்ட சமூகத்தினரே பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும்பங்கு அளிக்கின்றனர். உலகளாவிய இந்தப் போக்கினை, இந்தியாவும் தனது வளர்ச்சித் திட்டங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நமது அரசியல் அமைப்பில், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களுக்குச் சிறப்புச் சலுகைகளும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினர் நலனுக்கென தனி யொரு அமைச்சகம் செயல்படுகிறது. எனினும், இச் சமூகத்தினரின் சிறப்பான திறமைகளைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான திட்டங்கள் தீட்டப்படவில்லை.

பெரும்பாலான நாடுகளில் இனவழிச் சிறுபான்மையினர் மைய நீரோட்டத்தில் கலந்துவிடாமல் தனித்தே இயங்கினாலும் தமது பாரம்பரிய பொருளாதாரச் செயல் பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். எடுத்துக்காட்டாக, வியட்நாமிலும் இந்தோனேஷியாவிலும் உள்ள பத்திக் கைவினைக் கலைஞர்கள், வியட்நாமின் மட்பாண்டங்கள் வனையும் தொழிலாளர்கள், சீனாவின் துணி தயாரிக்கும் யூகுர் சிறுபான்மையினர், சீனாவின் பாரம்பரிய உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கஸாக் பிரிவினர், போன்ற வர்களைக் குறிப்பிடலாம். இந்தியாவிலும்கூட, மொராதாபாத் நகரில் பித்தளை சாமான்கள் தயாரிப்பவர்கள், நர்ஸபூரில் ஜரிகை தயாரிப்பவர்கள், சென்னப் பட்டினத்தில் மரப்பொம்மை தயாரிப்பவர்கள், உடுப்பியில் உணவகம் நடத்துவோர் என்று இனவழிச் சிறுபான்மையினர் மேற்கொண்டுள்ள பிரபலமான தொழில்கள் உள்ளன.

சிறுபான்மையினரின் மேம்பாட்டுக் காக, அவர்கள் மேற்கொண்டுள்ள பாரம்பரியத் தொழிலில் பயிற்சிகள் அளித்துத் திறன் மேம்பாட்டுக்கு வழி வகுக்கும் திட்டம் 2014 மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

எனினும் கீழ்க்காணும் விஷயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### 1. வளர்ச்சிக்கு அறிவைப் பயன் படுத்துதல்

கடந்த 25 ஆடுகளில் உலக நாடு களின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு மிக முக்கியமான காரணம், அறிவுசார் பொருளாதார வளர்ச்சியே ஆகும். எஃகு, வாகனங்கள், சாலைகள் போன்றவற்றைச் சார்ந்திருந்த நாடுகள், சிலிகான், கம்ப்யூட்டர், நெட்வொர்க் என்று புதிய அறிவுத் துறைகளுக்கு மாறிவிட்டன. முன்பு வேளாண் பொருளாதாரத்தை அகற்றிவிட்டு தொழிலகப் பொருளாதாரம் தலையெடுத்தது போன்றதே இதுவும். இந்தியாவில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்க ளுக்குப் பல்லாண்டுகளாகவே தொடர்ந்து ஊக்கம் அளிக்கப்பட்டு வந்தாலும், சர்வதேச தரத்தில் அவை அமையவில்லை. சிறு தொழில் துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை மற்ற பெருந் தொழில் நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் தயாரிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டது சரியில்லாததாகும்.

மேலும் சிறு தொழில் வளர்ச்சிக்கான அறிவுசார் முயற்சிகளும் ஊக்கமும் மிகச் சொற்பமாகவே இருந்து வருகின்றன.

## தொழில் முனையும் திறன்

வாணிகக் குடும்பத்தினரே தொழில்களைத் தொடங்குவது காலங்காலமாக நம் நாட்டில் இருந்து வரும் வழக்கமாகும். ஆனால் 1970களில் இந்த மனப்பாங்கை மாற்றி, ஆர்வமுள்ளவர்கள் தொழில் தொடங்குவதற்கு ஏற்றவாறு கொள்கைகள் வரையப்பட்டன. எனினும் புதிய தொழில் தொடங்கும் எண்ணம் கொண்ட எண்ணற்ற இளைஞர்களுக்கு அது கனவாகவே போய்விடுகிறது. எனவே தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் ஊக்கத் திட்டங்களை ஏனைய தொழிற் கொள்கைகளோடு சேர்த்து மறுபரிசீலனை செய்து, உரிய மாற்றங்களைச் செய்வது அவசியமாகும்.

## 3. ஒருங்கிணைந்த திறன் கட்டமைப்பை உருவாக்குதல் :

திறன் கட்டமைப்பு என்பது, தொழிலாளர் நிலையைப் பொறுத்தே அமையும். இந்தியாவில் உள்ள தொழிலாளர்களின் திறன், மாறிவிட்ட பொருளாதாரச் சூழலுக்குப் பொருத்தமுடையதாக இல்லை. நமது இளம் தலைமுறையினருக்குப் போர்க்கால வேகத்தில் புதிய திறன் பயிற்சிகளை அளித்தாக வேண்டும். அப்போதுதான் தொழிற்சாலைகளில் அவர்களைப் பணியமர்த்தும் வாய்ப்புகள் அதிகரிக்கும். சென்ற ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய சுதந்திர தின உரையில் 'திறன்மிகு பாரதம்' என்று அறிவிக்கப்பட்ட திட்டம், நமது தொழிலாளர் வர்க்கத்திற்காகத்தான். இதற்கென 2014 நவம்பரில் திறன் வளர்ச்சி மற்றும் தொழில் முனைவோருக்கான புதிய அமைச்சகம் ஒன்றும் ஏறபடுத்தப்பட்டது.

புதிய தொழில் முனைவோருக்குத் திறன் வளர்ச்சி அடிப்படையாக தேவை என்றாலும், அதற்கு மேலும் சில தகுதிகளும் தேவைப்படுகின்றன. 2005–2012ஆம் ஆண்டுகளுக்கு இடையேயான காலகட்டத்தில் நம் நாட்டில் கூடுதலாக சுமார் 27 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேவையை விடக் குறைவாகவே வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளதை இதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். எனவே வேலை தேடுகின்ற இளைஞர்களில் ஒரு சிலருக்கேனும் புதிய தொழில் தொடங்க உத்வேகம் அளிக்கலாம். இதற்காக 2009ஆம் ஆண்டிலேயே தேசிய திறன் வளர்ச்சிக்குக் கொள்கை வகுக்கப்பட்டது. பின்னர் 2015ஆம் ஆண்டில் அது, தேசிய திறன் வளர்ப்பு மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்புக் கொள்கை என்று பெயர் மாற்றம் பெற்றது.

## சமூகத் தொழில் நிறுவனம் :

சமூகத் தொழில் நிறுவனங்கள் என்பவை, ஏனைய தொழில் நிறுவனங்கள் போலவே பொருள்களையும் சேவைகளையும் வழங்கினாலும், சமூக மற்றும் சுற்றுச் சூழல் இலக்குகளுக்கு ஏற்ப தனது உபரியை மடைமாற்றம் செய்துவிடும். வருவாய் ஈட்டும் தொழில்களாக இருந்தாலும் அவை, சமூக, பண்பாட்டு, சுற்றுச் சூழல் தேவைகளை நிறைவு செய்வதாக இருக்கும்.

தனியார் நிறுவனங்களும் சில பொதுத் துறை நிறுவனங்களும் செய்யத் தவறிய அல்லது போதிய அளவுக்கு செய்யாத சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதாக சமூகத் தொழில் நிறுவனங்கள் விளங்கும். அவையே அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வித்திடுவதாகவும், நீடித்து நிலை பெறும் வளர்ச்சியைத் தருவதாகவும் அமையும். ●

# இந்தியாவின் வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்கியதா? கோட்பாட்டு வரையறைகளும் ஆதாரங்களும்

– ஸ்ரீபத்மோதிராம்

## அறிமுகம்

இந்தியா தொண்ணூறுகளின் தொடக்கத்தில் இருந்தே குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி பெற்று வருகின்றது. அண்மைக்கால பொருளாதார ஆய்வறிக்கை (2015) கூற்றின்படி ஒட்டுமொத்த தேசிய வருமானம் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1997–2002) சராசரி ஆண்டு விகிதத்தில் 5.6 சதவிகிதமாக இருந்தது. இது பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) 7.6 சதவிகிதமாகவும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2007–2012) 7.8 சதவிகிதமாகவும் வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி விகிதங்கள் சர்வதேச தர மதிப்பீடுகளின்படியும் இந்தியாவின் கடந்தகால விகிதங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போதும் குறிப்பிட்டுச் சொல்லும்படியான சாதனைகளாகவே உள்ளன. "இந்து வளர்ச்சி விகிதம்" என்ற அவதூறான பாதையில் இருந்து இந்தியா ஒரு வழியாக மாறி உள்ளது. ஆனால் இந்த வளர்ச்சி என்பது ஏழைகள் மற்றும் சமூகத்தில் உள்ள இதர நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கையில் எத்தகைய விளைவை ஏற்படுத்தி உள்ளது என இந்தியாவில் பல அறிஞர்களும் கேள்வி எழுப்பி உள்ளனர். இந்த அக்கறைதான் "அனைவரையும் உள்ளடக்குதல்", "அனைவரையும் உள்ளடக்கும் தன்மை" மற்றும் "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி" போன்ற கருத்தாக்கங்களை உருவாக்கி உள்ளது. இந்தச் சொற்கள் கல்விப்புலத்திலும் கொள்கை சார்ந்த சொல்லாடல்களிலும் இப்போது அதிக மாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

முன்பிருந்த திட்டக்குழுவின் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான தேவையை வலியுறுத்தி இருந்தது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்றால் என்ன என்பது குறித்து அது வரையறை செய்தும் இருந்தது. அதில் விவாதிக்கப்பட்டிருந்த செய்திகள் கீழே தரப்படுகின்றன:

"அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது வறுமையைக் குறைப்பதாக இருக்க வேண்டும்; உடல்நலம் சார்ந்த பயன்கள் பரந்துபட்ட அளவிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கொண்டதாகவும் இருக்க வேண்டும்; அனைத்துக் குழந்தைகளும் பள்ளிக்கூடத்தில் சேர வழிவகை இருக்க வேண்டும்; உயர்கல்வி பயில அதிக அளவில் மாணவர்கள் சேர வேண்டும் மற்றும் கல்வியின் தரம் மேம்பட வேண்டும்; திறன் மேம்பாடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தினக்கூலி சார்ந்த வேலை மற்றும் வாழ்வாதாரம் இரண்டிலும் சிறப்பான வாய்ப்புகள் கிடைப்பதாகவும் இது இருக்க வேண்டும். தண்ணீர், மின்சாரம், சாலைகள், சுத்தம், வீட்டுவசதி போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் இது பிரதிபலிக்க வேண்டும். எஸ்.சி /எஸ்.டி மற்றும் ஓபிசி மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்தப்பட வேண்டும்". (மேலும் கூடுதல் விவரங்களுக்கு 2011ல் திட்டக் குழு வெளியிட்ட "விரைவான, நீடித்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி: பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான அணுகுமுறை" என்ற வெளியீட்டைப் பார்க்கவும்).

உள்ளடக்கிய வளர்ச்சிக்கான இத்தகைய விரிவான தெளிவில்லாத வரையறையையும்

---

**ஸ்ரீபத்மோதிராம்** மும்பையில் உள்ள இந்திராகாந்தி மேம்பாட்டு ஆய்வு நிலையத்தில் பேராசிரியராக உள்ளார்.

அதனோடு தொடர்புடைய பிரச்சனைகளையும் நான் பல இடங்களில் சுட்டிக் காட்டி வருகின்றேன். (மோதிராம் மற்றும் நரபராஜு இருவரும் இணைந்து ஆக்ஸ்ஃபோர்டு டெவலப்மெண்ட் ஸ்டடீஸ் என்ற இதழில் [43(2)/2015] எழுதி உள்ள "இந்தியாவில் வளர்ச்சியும் பின்னடைவும்: உள்ளடக்கிய வளர்ச்சி தன்மை என்பதைச் சுட்டுகின்ற அண்மைக்கால சான்றாதாரம் எது?" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). ஆனாலும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருத்தாக்கம் பலவித நபர்களை பல்வேறுவிதமாக சிந்தித்துப் பார்க்கச் செய்ய அனுமதித்துள்ளது – சிலர் பிறரைவிடத் தீவிரமாகச் சிந்தித்துள்ளனர். அண்மைக்காலமாக குறைவான ஆனால் அதிகரித்துக் கொண்டு வரும் கல்விப்புல ஆய்வுகள் கீழ்வரும் கேள்விகளை முறையான ஆய்வுக்கு உட்படுத்தும்விதமாக உள்ளன:

- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி (அல்லது அனைவரையும் உள்ளடக்குதல் அல்லது அனைவரையும் உள்ளடக்கிய தன்மை) என்றால் என்ன?
- இந்தியாவின் வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருந்து வருகின்றதா?

இந்தக் கேள்விகளுக்கு விரிவாகவும் அதேசமயம் உத்திமுறை சாராத பதில்களையும் என்னுடைய சில கட்டுரைகளில் இருந்து தொகுத்து தருகின்றேன். இரண்டாவது கேள்விக்கான பதில் பெரும்பாலும் எதிர்மறையானதாகவே இருக்கின்றது (அதாவது வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இல்லை). இதற்கான காரணங்களையும் நான் சுருக்கமாக விவாதிக்கிறேன்.

## அனைவரையும் உள்ளடக்குதல் என்றால் என்ன?

நான் மேலே சுட்டிக்காட்டியவாறு, அனைவரையும் உள்ளடக்குதல் என்பதை கருத்தாக்க வரையறை செய்ய பல வழி முறைகள் உள்ளன. காலந்தோறும் வறுமை குறைந்து வரும் விகிதத்தை சில அறிஞர்கள் இதற்கான மையமாக எடுத்துக் கொள்கிறார்கள். வறுமை வேகமாக குறைந்துக் குறைந்து வருகின்றது என்றால் அது அனைவரையும் உள்ளடக்கி இருக்கிறது என்பதற்கு ஆதாரமாகும். உண்மையில், இந்தியாவில் கல்வியாளர்கள் மற்றும் கொள்கை உருவாக்குபவர்களிடம் வறுமைக் குறைப்பு விகிதங்களை ஆய்வு செய்வது என்ற மரபு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு, இந்த நடைமுறை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என விரிவாக விளக்குவது முக்கியமானது ஆகும். அரசாங்கம் நிர்ணயிக்கும் வறுமைக் கோடுகளைப் பயன்படுத்திதான் வறுமை என்பது கணக்கிடப்படுகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனத்தின் (என்.எஸ்.எஸ்.ஓ) நுகர்வுக்கான செலவு அடிப்படையிலான சர்வேக்களின் அடிப்படையிலும் வறுமை கணக்கிடப்படுகிறது. வருமானம் குறித்த நம்பகமான தகவல்கள் கிடைக்காததால், அதற்குப் பதிலாக செலவு எடுத்துக் கொள்ளப்படுகிறது. வறுமையைக் கணக்கிடும் பிரபலமான முறை என்பது தனிநபர் எண்ணிக்கை விகிதம் (ஹெச்.சி.ஆர்) ஆகும். வறுமைக் கோட்டுக்குக் கீழே வருமானம் உள்ள தனிநபர்களின் சதவிகிதமாக இது இருக்கிறது. இரண்டு வேறு வேறு விதமான காலகட்டங்களை எடுத்துக் கொள்வோம். உதாரணமாக 2004–05 மற்றும் 2009–10 ஆகிய இரண்டு ஆண்டுகளை எடுத்துக் கொள்வோம். இந்த ஆண்டுகளுக்கான தனிநபர் எண்ணிக்கை விகிதம் HCR 2004–05 மற்றும் HCR 2009–10 என்றும் குறிக்கப்படும். வறுமை குறைப்பின் விகிதம் கீழே உள்ளவாறு தரப்படுகின்றது: HCR 2004–05 – HCR 2009–10. மொத்த வறுமைக் குறைப்பு HCR 2004–05 – HCR 2009–10 என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். இது ஐந்து ஆண்டுக்கால இடைவெளியில் நிகழ்ந்து

உள்ளது. மேலே குறிப்பிட்ட காலகட்டத்தை பதினோரு ஆண்டுக்காலத்தோடு (அதாவது 1993–94 நிதி ஆண்டுகளில் இருந்து 2004–05 நிதி ஆண்டுகள் வரை) ஒப்பிட்டால், முடிவு மேலும் சிறப்பாகத்தான் இருக்கும். இந்தக் காலகட்டத்துக்கான வறுமை குறைப்பு விகிதம் ஓராண்டுக்கு 2.2 சதவிகிதப் புள்ளிகள் ஆகும். ஆனால் 2004–05 நிதி ஆண்டுகளில் இருந்து 2009–10 நிதி ஆண்டுகள் வரையிலான இடைப்பட்ட காலகட்டத்தின் வறுமை குறைப்பு வேகமானதாகவே இருக்கும் (ஓராண்டு 4.4 சதவிகிதப் புள்ளிகள்). (இந்தப் புள்ளி விவரங்கள் தோரட் மற்றும் துபே இணைந்து 2012ல் எழுதி உள்ள "1993–94 நிதி ஆண்டுகளில் இருந்து 2009–10 நிதி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் வளர்ச்சி என்பது சமூகத் தளத்தில் உள்ளடக்கியதாக இருந்ததா?" என்ற கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டது). மிக அண்மைக்கால என்.எஸ்.எஸ்.ஓ கணக்கெடுப்பு 2011–12ஆம் ஆண்டுக்கானதாகும். ஆனால் கடந்தகால முறையைத் தாண்டி என்.எஸ்.எஸ்.ஓ முந்தைய மிகப்பெரிய கணக்கெடுப்புக்கு (2009–10) இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மற்றொரு பெரிய அளவு கணக்கெடுப்பைச் செய்திருந்தது (2011–12) முன்பிருந்த திட்டக்குழு இந்தக் கணக்கெடுப்பில் கிடைத்த தரவைப் பயன்படுத்திக் கொண்டது. குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துரைக்க இந்தப் புள்ளி விவரம் பயன்பட்டது. "எனவே மிக அண்மைக்காலத்தின் அதாவது ஏழு ஆண்டு காலகட்டத்தில் அதாவது 2004–05 நிதி ஆண்டுகளில் இருந்து 2011–12 நிதி ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலகட்டத்தில் வறுமை குறைப்பு விகிதமானது 1993–94 நிதி ஆண்டுகளில் இருந்து 2004–05 நிதி ஆண்டு வரையிலான இடைப்பட்ட ஆண்டுக்காலகட்டமான 11 ஆண்டு காலகட்டத்தில் ஏற்பட்ட வறுமை குறைப்பு விகிதத்தைவிட மூன்று மடங்கு அதிகமானதாகும். (திட்டக்குழு 2013ல் வெளியிட்ட "வறுமையைக் கணக்கிடுதல், 2011–12 பத்திரிகையாளர்களுக்கான குறிப்பு" என்ற பிரசுரத்தைப் பார்க்கவும்).

மேலே கூறிய அணுகுமுறை எளிமையாகவும் விளங்கிக் கொள்ளும்படியும் இருக்கிறது. எனினும், அரசாங்கம் நிர்ணயம் செய்யும் வறுமைக்கோடு எதிர்ப்புக்குள்ளாகும் சிக்கல் இருந்து வருகின்றது. இத்தகைய வறுமைக் கோடுகள் செயற்கையாக குறைவான அளவினதாக நிர்ணயிக்கப்படுகின்றன என்று நம்புவதற்கு காரணம் உள்ளது. சரியானது என வாதிடமுடியாத வகையில் உள்ள ஒரு முறையியலின் அடிப்படையில் இந்த அணுகுமுறை உள்ளது. எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லி இதழில் வெளியான பல கட்டுரைகள் அரசாங்கத்தின் வறுமைக் கோடுகள் குறித்த கொள்கை பற்றி பல விமர்சனங்களை எழுப்பி உள்ளதே இதற்கு ஆதாரமாகும். (எக்கானமிக் அண்ட் பொலிடிக்கல் வீக்லியில் 2014ல் எஸ்.சுப்ரமணியன் எழுதி வெளியாகி உள்ள "மீண்டும் வறுமைக் கோட்டை அடைதல்... மற்றும் மீண்டும்" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). பயன்படுத்தப்படும் வறுமைக் கோடுகளுக்கு ஏற்ப வறுமை குறைப்பு விகிதங்கள் மாறுபடக் கூடியவை. மேலும் இந்த அணுகுமுறை குறுகிய எல்லைகள் கொண்டதாக உள்ளது. பன்னிரண்டாவது திட்ட ஆவணத்தில் உதாரணமாகச் சொல்லப்பட்டதை எடுத்துக் கொண்டு பார்க்கும் போது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கருத்தாக்கம் குறுகிய எல்லைக்கு உட்பட்ட வரையறையாக உள்ளது புலப்படும். இந்தச் சிக்கலைத் தீர்க்க உள்ள ஒரு வழிமுறை என்னவென்றால் எந்த ஒரு நியாயமான வறுமைக் கோட்டு நிர்ணயத்துக்கும் உகந்தவாறான உள்ளடக்கலை மதிப்பீடு செய்ய உதவியாக இருக்கும் அணுகுமுறை ஒன்றைப் பயன்படுத்துவதுதான். அதிலும் இத்தகைய அணுகுமுறை குறிப்பிட்ட வறுமைக்

கோட்டைச் சார்ந்ததாக மட்டுமே இருந்து விடக்கூடாது. அத்தகைய ஒரு அணுகுமுறை பொருளாதாரத் துறையில் தற்போது உள்ளது. முன்னர் சுட்டிக்காட்டிய (2015) கட்டுரையில் மோதிராம் மற்றும் நரபராஜு ஆகியோர் இத்தகைய அணுகுமுறையைப் பயன்படுத்தி உள்ளனர். உள்ளடக்கல் தன்மையை மதிப்பீடு செய்ய என்.எஸ். எஸ்.ஓ மேற்கொண்ட நுகர்வுச் செலவு கணக்கெடுப்புகளிலும் இத்தகைய அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏழைகளின் வருமானம் போதுமான விகிதத்தில் அதிகரித்துள்ளதா எனக் கண்டறிவதே இதன் நோக்கமாகும். இது வழக்கமாக சராசரி நபரின் வருமானம் அதிகரித்துள்ளது என்று தெரிந்துக் கொள்ளக்கூடிய கண்ணோட்டம் ஆகும். 2004–05 நிதி ஆண்டுகளில் இருந்து 2011–12 நிதி ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் சராசரி நபரின் (மீடியன்) செலவு கிராமப் பகுதிகளில் 22% என்ற விகிதத்திலும் நகரப் பகுதிகளில் 27% என்ற விகிதத்திலும் அதிகரித்து உள்ளது. முன்னரே குறிப்பிட்டபடி, வருமானம் என்ற இடத்தில் செலவு எடுத்துக் கொள்ளப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது. கிராமம் மற்றும் நகரம் என இரண்டு பகுதிகளிலும் ஏழைகளின் செலவினத்தில் வளர்ச்சி என்பது விதிக்கப்பட்ட அளவைவிட குறைந்துள்ளது. அதாவது பணக்காரர்கள் மற்றும் மத்தியதர வர்க்கப் பிரிவினரை விட ஏழைகள் குறைவான வளர்ச்சியே அடைந்துள்ளனர். இந்தக் குறைவு நகரப் பகுதிகளில் வெளிப்படையாக உள்ளது. உதாரணமாக, கிராமப் பகுதிகளில் கடைசி பதின்மானத்தில் (DECILE) (10ஆவது சதமானம் (PERCENTILE) உள்ள நபரின் செலவு 20.3% அதிகரித்து உள்ளது. நகரப் பகுதிகளில் இது 24.5%ஆக உள்ளது. சராசரி நபருக்கான வளர்ச்சி விகிதங்களை விட (கிராமப் பகுதி 22%, நகரப் பகுதி 27%) இவை குறைவானதாக இருப்பதைக் கவனிக்க வேண்டும். இதற்கு மாறாக 90ஆவது சதமானத்தில் (PERCENTILE) உள்ள நபர் (பணக்கார சதமானம் (PERCENTILE) அதிக வளர்ச்சி விகிதத்தில் உள்ளார். அதாவது கிராமப் பகுதியில் 23.1% மற்றும் நகரப் பகுதியில் 29.1% என இவை உள்ளன. நலிவடைந்த ஜாதிப் பிரிவுகளில் (எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி) உள்ள ஏழைகள், உழைக்கும் வர்க்கத்தினர் (விவசாயத் தொழிலாளர்கள், விளிம்பு நிலை விவசாயிகள், சிறு விவசாயிகள், தற்காலிக நகரத் தொழிலாளர்கள்) ஆகியோருக்கு இதே வகையிலான அளவீடுகளைப் பயன்படுத்திப் பார்க்கும் போது வருமான வளர்ச்சி போதுமானதாக இல்லை என்பது தெளிவாகிறது. இந்த ஆய்வில் இருந்து கிடைக்கும் ஒட்டுமொத்த முடிவு என்னவென்றால் இந்தியாவின் வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இல்லை என்பதே ஆகும்.

மிகத் தீவிரமான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பல்வேறு அறிஞர்களும் இதே விதமான முடிவிற்கே வந்துள்ளனர். பக்க கட்டுப்பாடு கருதி நான் அவற்றில் ஒரு சில கருத்துக்களை மட்டுமே விவாதிக்கிறேன். உள்ளடக்கல் என்பதை கருத்தாக்கமாக வரையறுக்க டி.ஜெயராஜ் மற்றும் எஸ்.சுப்ரமணியன் ஆகியோர் முயன்று உள்ளனர். இந்திய வளர்ச்சியை பல்வேறு குழுக்களுக்கு இடையில் பகிர்ந்து பார்க்கும் பிரச்சனைக்கும் ஏனைய புலங்களில் நிகழும் இதேவித பிரச்சனைகளுக்கும் இடையிலான ஒப்புமையை இவர்கள் பயன்படுத்தி உள்ளனர். உரிமை கோருபவர்களுக்கு இடையில் ஒரு எஸ்டேட்டை பகிர்ந்துக் கொள்ளுதல் (டால்முடிக் எஸ்டேட் பிராப்ளம்) அல்லது வறுமை ஒழிப்புக்காக ஒதுக்கப்பட்ட குறைவான பட்ஜெட் தொகையை பல்வேறு குழுக்களுக்கு இடையில் பிரித்துக் கொள்ளுதல் ஆகியன ஏனைய புலங்களுக்கான உதாரணம் ஆகும். மக்கள் தொகையின் வருமான மதிப்பளவைகளின் (QUANTILE) உண்மையான செயல்திறனையும் (கடைசி 10 சதவிகிதம், அதற்கடுத்த பத்து

சதவிகிதம் முதலியன) பல்வேறு நியாயமான காரணிகள் நிறைவு செய்யப்பட்டால் அவர்கள் வெளிப்படுத்தக் கூடிய செயல்திறனையும் ஜெயராஜ் மற்றும் சுப்ரமணியன் ஒப்பிட்டுள்ளார்கள். இரண்டு காலகட்டங்களை நாம் எடுத்துக் கொண்டால் (1 மற்றும் 2), அனைவரும் சமம் என்ற காரணிப்படி (லெக்சிகோகிராபிக் மேக்ஸிமின்) 2ஆவது காலகட்டத்தில் வளர்ச்சியின் வருமானத்தை விநியோகித்தாக வேண்டும். இது எப்படி இருக்க வேண்டும் என்றால் மிக ஏழ்மையான மதிப்பளவையில் (QUANTILE) இருந்து தொடங்கப்பட வேண்டும். முடிந்த அளவில் எத்தனை மதிப்பளவைகள் (QUANTILE) சமமானதாக்கப்பட முடியுமோ அந்த அளவு பரிமாற்றத் தொடர்கள் இருக்க வேண்டும். மீதியுள்ள மதிப்பளவைகள் (QUANTILE) (அப்படி ஏதேனும் இருந்தால்) வளர்ச்சியின் வருமானத்தைப் பெறாது. இதற்கு எதிர்மாறாக, குறைந்தபட்ச விரிவாக்க காரணிப்படி (பாரெட்டோ ரெஸ்பெக்டிங் ஈகுவல் டிஸ்ட்ரிபியூஷன்) இரண்டாவது காலகட்டத்தில் ஒவ்வொரு பதின்மானத்துக்கும் (DECILE) அனுமதித்த பிறகு, அதாவது காலகட்டம் 1இன் இடைநிலை (MEAN) வருமானத்தை தக்க வைக்கும் அளவிற்கு அனுமதித்த பிறகு கூடுதல் தொகை ஒதுக்கப்படலாம். வளர்ச்சி செயல்பாட்டில் இருந்து கிடைத்த உபரியில் 10ஆவது பங்குக்குச் சமமான அளவில் இந்தக் கூடுதல் தொகை இருக்க வேண்டும். என்.எஸ்.எஸ்.ஓ நுகர்வுச் செலவின் கணக்கெடுப்புகளின் தரவுகளைப் பயன்படுத்தி அவர்கள் இருவரும் இந்திய நிலைமையானது இத்தகைய நியாயமான காரணிகள் இல்லாமல் இருக்கிறது. கடைசி மதிப்பளவைக்கு (QUANTILE) (மிக ஏழ்மையான 20ஆவது சதவிகிதம்), 1993–94க்கும் 2009–10க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் உண்மையான வளர்ச்சி என்பது ஓராண்டுக்கு 1.43 சதவிகிதமாக கிராமப் பகுதிகளில் இருந்தது. அதேசமயம் குறைந்தபட்ச காரணி முறையானது ஓராண்டுக்கு வளர்ச்சி விகிதம் 2.88 சதவிகிதம் என உறுதி செய்தாக வேண்டும். பற்றாக்குறை நகரப் பகுதிகளில் மிக வெளிப்படையாக இருந்தது. அதாவது 4.39ல் இருந்து 1.27 எனக் குறைந்தது. ஜெயராஜ் மற்றும் சுப்பிரமணியம் இருவரும் இதே விதமான பகுப்பாய்வை சமூகப் பொருளாதார குழுக்களுக்கு (வருமானக் குழுக்கள் அல்ல) நடத்தி உள்ளனர். உள்ளடக்கல் இல்லை எனவும் அவர்கள் தமது ஆய்வில் கண்டறிந்துள்ளனர். (டி.ஜெயராஜ் மற்றும் எஸ்.சுப்பிரமணியன் இருவரும் இணைந்து 2012ல் எழுதி உள்ள "இந்தியாவின் நுகர்வுச் செலவு வளர்ச்சியில் குழுக்களுக்கு இடையிலான உள்ளடக்கல் குறித்து" என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

சூரியநாராயணா மற்றும் தாஸ் இருவரும் வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் நுகர்வு என்ற மூன்று பரிமாணங்களில் அனைவரையும் உள்ளடக்குதல் என்பதை கருத்தாக்க வரையறை செய்கின்றனர்.

I. இடைநிலை (MEAN) வருமானத்தைப் பொருத்து உள்ள இடைநிலை (MEAN) நுகர்வில் நெகிழ்ச்சி. அதாவது, ஒரு சதவிகித மாற்றம் இடைநிலை (MEAN) வருமானத்தில் இருந்தால் இடைநிலை நுகர்வு அதற்கேற்ப மாறுபடும் சதவிகிதம்.

II. இடைநிலை (MEAN) நுகர்வுக்கு ஏற்ப உருவாக்கும் நடுத்தர அளவு (MEDIAN) நுகர்வில் நெகிழ்வுத் தன்மை. அதாவது இடைநிலை (MEAN) நுகர்வில் ஒரு சதவிகித மாற்றம் ஏற்பட்டதாக இருந்தால் அதற்கேற்ப நடுத்தர அளவு (MEDIAN) நுகர்வில் ஏற்படும் மாற்றத்தின் சதவிகிதம்.

III. இடைநிலை (MEAN) நுகர்வில் 60 சதவிகிதத்துக்கும் குறைவாக உள்ள மக்கள் தொகையின் பங்குக்கு ஏற்ப மாறுபடும் "உள்ளடக்கிய குணகம் (COEFFICIENT)":

பரந்துபட்ட வளர்ச்சிக்கு மேற்சொன்ன நெகிழ்வுத்தன்மைகள் 1 என்ற மதிப்புக்கு அதிகமானதாக இருக்க வேண்டும். ஒட்டுமொத்த மக்கள்தொகை மற்றும்

சமூகரீதியில் பின்தங்கிய குழுக்கள் (உதாரணம் பழங்குடியின மக்கள்) ஆகிய இரு பிரிவையும் கருத்தில் கொள்ளும் போதும், 1993–94 முதல் 2011–12 வரையிலான நுகர்வுச் செலவின என்.எஸ்.எஸ் தரவைப் பயன்படுத்தும்போதும் கிடைக்கும் முடிவு தெரிவிப்பது என்னவென்றால் இந்திய வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இல்லை என்பதே ஆகும். உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமென்றால் 1993–94ல் 0.748ஆக இருந்த உள்ளடக்கிய குணகம் (COEFFICIENT) 2011–12ல் 0.711ஆகக் குறைந்துவிட்டது. இந்தியாவின் பெரும்போக்கு வளர்ச்சி செயல்முறையில் மிகவும் ஏழைகளை உள்ளடக்குவது என்பது இன்னமும் நிறைவேறாத நம்பிக்கையாகவே உள்ளது" என அவர்கள் இறுதியாகக் கூறுகிறார்கள்.

## விவாதமும் முடிவுகளும்

ஒட்டுமொத்த மக்கள் தொகை மற்றும் சமூக ரீதியில் பின்தங்கிய குழுக்கள் என இரு பிரிவினரின் சராசரி வருமானம் கடந்த இருபது ஆண்டுகளில் அதிகரித்தே வந்துள்ளது. அரசாங்கம் நிர்ணயிக்கும் வறுமைக் கோடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படும் வறுமையும் குறைந்து உள்ளது. எனினும் இந்த பலன்களைத் தாண்டி மேலும் கூடுதலான பலன்கள் உள்ளடக்கல் மூலம் ஏற்பட வேண்டும் என்ற தேவை இருக்கின்றது. நாம் முன்னர் விவாதித்தப்படி, உள்ளடக்கல் என்பதை கருத்தாக்கமாக வரையறுப்பதில் உள்ள, விரிவான அணுகுமுறைகள் இந்தியாவின் செயல்பாடு திருப்தியளிப்பதாக இல்லை எனக் கண்டறிந்து உள்ளன. இதற்கான காரணங்களைச் எளிதாகவே கூறிவிடலாம். இந்தியாவின் விவசாயம் சிறப்பான முறையில் நடைபெறவில்லை. பல அறிஞர்கள் விவாதிப்பது போன்று விவசாயம் செய்தல் என்பது இப்போது நெருக்கடி நிலையில் உள்ளது (லைவ் மின்ட் பத்திரிகையில் ஏ.வாசவி (2015) எழுதி உள்ள "வெக்சேஷன்ஸ் ஆஃப் அக்ரேரியன் இந்தியா" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). விவசாயத்துறை மற்றும் நகரத்தில் முறைசாரா துறை என இரண்டிலும் உள்ள ஏழைகளுக்கு உதவும் வகையில் நகரப் பகுதிகளில் போதுமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவில்லை. பல அரசாங்க அறிக்கைகள் மற்றும் பல அறிஞர்கள் ஆவணப்படுத்தி உள்ளதை வைத்துப் பார்க்கும்போது கட்டுமானத்துறையே அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்கிய துறையாகும். இந்தத் துறையிலும் ஊரகப் பகுதிகளில்தான் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

பொதுவாக இந்தகைய வேலைகள் தகுந்த சம்பளத்தைக் கொடுப்பதாக இல்லை. மேலும் சந்தைக்குத் தேவைப்படும் தொழில்திறனை இவை வளர்ப்பதும் இல்லை. உற்பத்தி துறையின் செயல்பாடு ஏமாற்றம் அளிக்கிறது. உற்பத்தி துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதலில், அதிலும் குறிப்பாக தொழிலாளர் அதிகம் உள்ள உற்பத்தி துறையில் உருவாக்குதலில் உள்ளடக்குதல் என்ற அம்சம் முழுமைபெற மேலும் நீண்டகாலம் ஆகும். இன்றைய காலகட்டத்தில் உடனடியாகச் செய்ய வேண்டியது என்னவென்றால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (எம்.என்.இ.ஆர்.ஜி.எஸ்) போன்ற நல்வாழ்வுத் திட்டங்களை வலுப்படுத்துவதும் நகர ஏழைகளைக் காப்பதுமே ஆகும். இதுதவிர தொழில்திறன்களை வளர்க்கக்கூடிய கொள்கைகள், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் (உதாரணமாக பொதுத்துறை முதலீடு மூலமாக) போன்றவையும் இப்போதைய தேவையாகும். வளர்ச்சி என்பது அனைவருக்குமானது என மேம்போக்காக கருதிக் கொள்வது எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். ●

# அனைவருக்குமான நிதிச் சேவையும் சமூக மாற்றமும்

*– சரண் சிங், சீ.எல்.தத்ஹிச், எஸ். ஆனந்த்*

*நாட்டில் முதலீடுகளை ஊக்குவித்துப் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடுவதற்காக சமூகத்தின் நலிந்த பிரிவு மக்களுக்கு எளிய நிபந்தனைகளில் நிதி உதவி அளிப்பதே அனைவருக்குமான நிதிச் சேவையின் பிரதான நோக்கமாகும். இதனால் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான வளர்ச்சி ஏற்படுவதுடன் சமூகமும் மேம்பாடு காணும். மகளிர், ஏழை மக்கள் உள்ளிட்ட புறக்கணிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினரும், தன்னிறைவு பெற்று நிதி தொடர்பான சீரிய முடிவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை அவர்களுக்குப் பெற்றுத் தரும். சேமிப்பு மற்றும் செலவுக் கணக்கு, கடன் மீதான இன்ஷ்யூரன்ஸ், ஓய்வூதியம் போன்ற அனைத்து நிதிச் சேவைகளையும் அனைவருக்கும் வழங்குவதே இதன் இலட்சியமாகும். மேலும் அனைவருக்குமான நிதிச் சேவையின் மூலம், தொழில் தொடங்கும் வாய்ப்புகள், ஓய்வுக் காலத்திற்கான சேமிப்பு, இடர்களுக்கு எதிரான காப்பீடு, அவசர காலக் கடன் உதவி போன்றவையும் கிடைக்கும்.*

*நீதித்துறை சேவைகள் அனைவருக்கும் எட்டும் விதமான முதல்கட்ட நடவடிக்கையே அனைவருக்குமான நிதிச் சேவை. இந்த முயற்சியில் நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து, ரிசர்வ் வங்கியும் மத்திய அரசும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன. எனினும் சமீபத்தில் அரசு தொடங்கிய, வங்கிச் சேமிப்புக் கணக்குத் திட்டம் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது எனலாம். பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனா என்ற இந்தத் திட்டத்தின்படி இந்தியாவின் 98 சதவீத குடும்பத்தினர் வங்கிக் கணக்கை ஆரம்பித்துள்ளனர்.*

## அனைவருக்குமான நிதிச் சேவையின் வரலாறு :

*வட்டித் தொழில் செய்கிறவர்களின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்துவதற்காக 'நில வங்கிகளை' ஏற்படுத்த வேண்டும் என்று 1895 ஆம் ஆண்டு நிக்கல்ஸன் அறிக்கை கூறியது. அதனையடுத்து 1904 ஆம் ஆண்டில் கூட்டுறவு கடன் சங்கங்கள் சட்டம் இயற்றப்பட்டது. 1951–54 ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்திந்திய கிராமப்புறக்கடன் ஆய்வின்படி விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் வங்கிகளின் பங்கு 0.9% என்றும், வட்டித் தொழில்புரிவோர் 24.9% கடனும், தொழில்ரீதியான வட்டித் தொழில் நிறுவனங்கள் 44.8% கடனும் வழங்கியதாகத் தெரிய வந்தது. இதனையடுத்து 1955ஆம் ஆண்டில் பாரத ஸ்டேட் வங்கி நாட்டுடைமை யாக்கப்பட்டது. பின்னர் 1969 முதல் 1980 வரை பல்வேறு வங்கிகளும் அரசுடைமை ஆயின. 'நபார்ட்' என்கிற வேளாண்மை – கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி உருவாக்கப்பட்டதும், முன்னுரிமைத் துறைக்குக் கடன் வழங்க வேண்டுமென்ற திட்டம் செயல்படுத்தப்பட்டதும், விவசாயத்*

---

**சரண் சிங் –** பெங்களூர் இந்திய மேலாண்மை நிறுவனத்தின் பொருளாதாரப் பேராசிரியர்

**சீ.எல்.தத்ஹிச் –** இந்திய வேளாண் பொருளாதார சங்கத்தின் கௌரவச் செயலாளர்

**எஸ். ஆனந்த் –** விஜயவாடா IDRBT-ன் இணைப் பேராசிரியர்

துறைக்கு அரசு நிறுவனங்களில் இருந்து கூடுதலாக கடன் உதவி கிடைக்கத் தொடங்கியது.

2005ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கி அறிவித்த வழிகாட்டுதலின்படி, குறைந்தபட்ச இருப்புத் தொகை எதுவும் இல்லாமல் சேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டன. பின்னர் 2012ஆம் ஆண்டில் இதற்கு அடிப்படை சேமிப்பு வங்கிக் கணக்கு என்று பெயர் மாற்றம் செய்தனர். தற்போது இது ஜன்தன் கணக்கு என்றழைக்கப்படுகிறது. 2008ஆம் ஆண்டில் ரங்கராஜன் கமிட்டி அளித்த பரிந்துரையின் பேரில், அரசுத்துறை வங்கிகள் ஒவ்வொன்றும் குறைந்தது ஒரு மாவட்டத்திலாவது 100 சதவீதம் பேருக்கும் வங்கிச் சேவையை வழங்கும் முன்னேற்றத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. அதன்படி தொலை தூரங்களில் உள்ள கிராமங்களில் மக்களின் வீட்டு வாயில் அருகிலேயே வங்கிச் சேவையை வழங்க ஊக்குவிக்கப்பட்டன. 2010ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளில் அனைவருக்கு மான நிதிச் சேவை வழங்கும் திட்டத்திற்கு வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டுக்குள் இரண்டாயிரம் பேருக்கும் அதிமான மக்கள் தொகையுள்ள கிராமங்களிலும், 2013ஆம் ஆண்டுக்குள் 1000 முதல் 2000 வரை மக்கள் உள்ள கிராமங்களிலும் அனைவருக்குமான வங்கிச் சேவையை அளிக்க அடிப்படை அமைக்கப்பட்டது. பின்னர், வங்கிகள் தாம் தொடங்கும் புதிய கிளைகளில் 25% கிளைகளை கிராமப்புறங்களில் திறக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

இன்னொரு முக்கியமான நடவடிக்கை கிஸான் கடன் அட்டை வழங்கியதாகும். பத்து லட்ச ரூபாய்க்கு மிகாமல் கடன் தேவையுள்ள சிறு தொழில் முனைவோர்களுக்குக் கடன் வழங்கு வதற்காக ‘முத்ரா’ வங்கி சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது. ரூ.20,000 கோடி முதலீடும், ரூ.3,000 கோடி கடன் உத்தரவாத நிதியமும் கொண்ட ‘முத்ரா’ வங்கி குறுந்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்யும் நிறுவனங்களுக்கு மறுநிதியுதவி செய்யும்.

எனினும் 2013ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அனைத்திந்திய கடன் மற்றும் முதலீட்டு ஆய்வின்படி, 17.2 சதவீத குடும்பத்தினர் நிறுவனங்களில் கடன் பெற்றிருந்தனர்; 19 சதவீத குடும்பங்கள் நிறுவனம் அல்லாத தனி மனிதர்களிடம் கடன் வாங்கி இருந்தனர். கிராமப் புறங்களில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளைத் தொடங்கிய

**அட்டவணை 1**

| வ. எண் | | ஆரம்பிக்கப்பட்ட கணக்குகள் | | | ‘ரூபே’ கடன் அட்டை எண்ணிக்கை | கணக்கில் இருக்கும் இருப்புத் தொகை (ரூ.) | (கோடியில்) பணமே இல்லாத கணக்கு களின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | கிராமப் புறம் | நகரம் | மொத்தம் | | | |
| 1. | பொதுத் துறை வங்கிகள் | 6.9 | 5.8 | 12.7 | 11.9 | 14357.5 | 52.3 |
| 2. | தனியார் வங்கிகள் | 2.5 | 0.4 | 2.9 | 2.1 | 3258.5 | 52.1 |
| 3. | பிராந்திய கிராமப்புற வங்கிகள் | 0.4 | 0.3 | 0.7 | 0.6 | 1068.6 | 49.3 |
| | மொத்தம் | 9.79 | 6.5 | 16.3 | 14.5 | 18684.6 | 52.2 |

போதும், தனியார் வட்டித் தொழில் புரிவோரின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்த முடியவில்லை என்று இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜனா சற்று மாறுபட்டு 'ரூபே' கடன் அட்டையையும் வழங்குகிறது. மேலும் காப்பீடு வசதியும் உள்ளது. இத்திட்டத்தைத் தொடங்கியபோது 2015 ஜனவரி 26க்குள் 7.5 கோடி கணக்குகளைத் தொடக்கத்திட்டமிட்டபோதும், இலக்கை விஞ்சிய சாதனை நிகழ்த்தப்பட்டது

## அனைவருக்குமான வங்கிச் சேவையின் சமூக – பொருளாதார விளைவு

வலுவான வங்கிச் சேவையின் மூலமே பொருளாதார வளர்ச்சிக்கு வேகம் கொடுக்க முடியும் என்பதை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்று அனுபவம் நமக்குக் காட்டி உள்ளது. பொருளாதார மாற்றங்களே சமூக மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளன. கிராமப்புற இந்தியாவும் எந்திரமயமாகும் விவசாயம், மேம்பட்ட போக்குவரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் எனப் பல மாற்றங்களைக் கண்டு வருகிறது.

ஜன்தன் திட்டத்தின் அங்கமாக, பிரதம மந்திரியின் சுரக்ஷா பீமா யோஜனா, பிரதம மந்திரியின் ஜீவன் ஜோதி யோஜனா, அடல் பென்ஷன் யோஜனா என்ற மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களும் உள்ளன. இந்தத் திட்டங்களில் இதுவரை சுமார் 10 கோடியே 40 லட்சம் பேர் சேர்ந்துள்ளனர். ஏழை மக்களுக்கும் அமைப்பு சாராத துறையில் உள்ளவர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு வழங்கும் திட்டங்களாக இவை விளங்குகின்றன.

2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு அனைவருக்குமான நிதிச் சேவைத் திட்டத்தில், தொழில்நுட்ப வசதிகள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஜன்தன், ஆதார், மொபைல் ஆகிய மூன்றும் சேர்ந்து, பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த உள்ளன. ஆதார் திட்டத்தோடு, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்த தொழில்நுட்ப வசதிகளுக்காக மாநில அரசுகள் செலவிடத் தொடங்குகின்ற சூழலில், நிதிச் சேவைத் துறையிலும் மாற்றம் ஏற்படும். சமீபத்திய ஒரு கணக்கெடுப்பின்படி கிராமப்புற மக்கள் தமது வருவாயை 25 சதுர கி.மீ. சுற்றளவுக்குள்ளேயே செலவிடுகின்றனர் எனத் தெரிய வந்துள்ளது. இந்தியாவின் பூகோள அமைப்பிலும் பெரும்பாலான கிராமங்கள், நகரங்களில் இருந்து ஐந்து முதல் இருபத்தைந்து கி.மீ. சுற்றளவுக்குள்ளேயே இருக்கினற்ன.

மேலும் ஆதார் அட்டையுடன் இணைக் கப்பட்ட தானியங்கி பட்டுவாடா நுண் எந்திரங்களில் ரூபே அட்டைகளைப் பயன் படுத்தி பணம் இல்லாத பரிவர்த்தனையை நடத்தலாம். மேலும் செல்பேசிகளின் வழியாக கொடுக்கல் – வாங்கல்கள் அதிக அளவில் நடைபெறுவதற்கான வாய்ப்புகளும் பெருகியுள்ளன.

இதுவரை வங்கிச் சேவைகள் சரியாக வழங்கப்படாமல் இருந்த பகுதிகளில், புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்தியதன் மூலம் மூன்று முக்கிய பலன் ஏற்பட்டிருக்கிறது எனலாம். அவை சௌகரியம், குறைவான பரிவர்த்தனச் செலவு, அதிகப்படியான மக்கள் கடனைத் திரும்பச் செலுத்துவதால் ஏற்பட்டுள்ள வாடிக்கையாளர் நல்லுறவு ஆகியன. தானியங்கி பட்டுவாடா எந்திரங்களால் எந்த நேரமும் பணத்தை எடுத்துக் கொள்ளலாம் என்ற வசதியுடன், வங்கிக் கிளைகள் யாவும் கணிணி இணைப்பில் ஒன்று சேர்க்கப்பட்டு விட்டதால், ஓரிடத்தில் இருந்து மற்றோர் ஊருக்குப் பணம் அனுப்புவதற்கான செலவும் குறைந்துவிட்டது. மேலும், பணமும் உடனடியாக சம்பந்தப்பட்டவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடுகிறது. மேலும் கிராமப்புறக் கிளைகள் மூலம்,

மக்களிடம் உபரியாக இருக்கின்ற பணம் வைப்புத் தொகையாக மாறுகிறது. இல்லை என்றால் அவை கவர்ச்சிகரமான பல ஏமாற்றுத் திட்டங்களுக்குச் சென்றுவிடக் கூடும். மக்கள் தமது பணத்தைப் பாதுகாப்பாகச் சேமிக்கும் வழியை வங்கிகள் காட்டிவிட்டன எனலாம். அத்தோடு, உயர்கல்வி, வீட்டு வசதி, மருத்துவ சேவை போன்றவற்றுக்காக மக்கள் தமது சேமிப்பைத் தொடரும் வாய்ப்பும் கிடைத்துள்ளது எனலாம்.

## ஜன்தன் திட்டத்திற்கு அப்பால்

வட்டித் தொழில் நடத்தும் தனியாரை அறவே இல்லாமல் செய்தால்தான் ஜன்தன் திட்டம் வெற்றி பெற்றதாகச் சொல்லமுடியும். தற்போது ஜன்தன் திட்டத்தில் உள்ள இரண்டு முக்கியக் குறைபாடுகள் என, பரிவர்த்தனை எண்ணிக்கையில் உச்சவரம்பும், சேவை மையங்கள் அருகில் இல்லாமையும் சொல்லப்படுகின்றன. சேவை மையங்கள் இன்மை என்னும்போது, இந்தியக் கிராமங்களின் சரிபாதியில் வங்கிக் கிளைகள் ஏதும் கிடையாது என்ற உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டும். பரிவர்த்தனையில் உள்ள சிரமங்கள் என்ற வகையில், நாளொன்றுக்கு ரூ.1500 முதல் ரூ.10,000 வரை மட்டுமே ஒரு கணக்கில் இருந்து பணம் எடுக்க அல்லது போட முடியும் போன்றவற்றைச் சொல்லாம். ஆனால் அரசாங்கம் வழங்கும் நேரடி மானிய உதவி, இன்ஷ்யூரன்ஸ் பணம் போன்றவை இந்த வரம்புக்கும் மேல் இருக்கும்போது வாடிக்கையாளர் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது.

கிராமப்புறங்களில் வங்கிச் சேவையை மேம்படுத்த அஞ்சலகங்களைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறுகின்றனர். நம்நாட்டில் சுமார் 28 கோடி கணக்குகள் அஞ்சல் அலுவலகங்களில் உள்ளன. இவற்றில் 13 கோடிக்கும் அதிகமானவை சேமிப்புக் கணக்குகள். பதினொரு கோடிக் கணக்குகள் தொடர் வைப்புக் கணக்குகள். இவற்றோடு, நியாய விலைக்கடைகளிலும் வங்கிச் சேவையைத் தொடங்கினால், மக்களின் சமூக – பொருளாதார நிலையில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம்.

இதற்கு, ஆந்திரப்பிரதேச மாநில அரசு நடைமுறைப்படுத்தி வருகிற, எந்த நியாய விலைக் கடையிலும் நுகர்பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற திட்டத்தை உதாரணமாகச் சொல்லாம். மக்களின் ஆதார் எண்ணுடன் ரேஷன் விநியோகத்தை இணைத்துவிட்டதால், ஒரு நகரத்தில் உள்ள எந்த நியாயவிலைக் கடையில் வேண்டுமானாலும் ஒருவர் தனக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் முறை சாத்தியமாகிவிட்டது.

நிறைவுரை : ஜன்தன்திட்டம் தங்கத்தை முதலீடு செய்யும் திட்டம், முத்ரா வங்கித் திட்டம் போன்றவற்றால் அனைவருக்கும் கிடைக்கும் வங்கிச் சேவைகளால் கிராமப் புறப் பொருளாதாரத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுவிடும். மானியங்களை அரசு நேரடியாக மக்களின் வங்கிக் கணக்கில் செலுத்தும் திட்டங்களால், தொடர்ந்து மக்களின் கணக்குகளில் பணம் வந்துகொண்டே இருக்கும். அது முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கும். கிராமப்புறங்களில் உள்ள 1,40,000 அஞ்சலகங்கள் இதில் முக்கியப் பங்காற்ற உள்ளன. சிறுசேமிப்பு முதல், தங்க முதலீட்டுத் திட்டம் வரை அனைத்தும் கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கும்போது அதனால் விளையும் பயன்கள் பலப்பலவாகும். மக்களின் உற்பத்தி முயற்சிகளுக்கு நிதி ஆதாரங்கள் தடையின்றிக் கிடைத்து, 'இந்தியாவில் உற்பத்தி செய்வோம்" என்ற திட்டமும் உத்வேகம் பெற்று, வேலைவாய்ப்புகள் பெருகி, வளமான பொருளாதாரமாக நமது பொருளாதாரம் நிச்சயம் மாற்றம் பெற்றுவிடும். ●

# உங்களுக்குத் தெரியுமா?
# மின்னணு சந்தைகள்

மின்னணு சந்தைகள் எனப்படுவது காய்கறிகளை நியாயமான விலையில் ஆன்லைன் முறையில் விற்பனை செய்வதற்கான மின்னணு சந்தைத் தளம் ஆகும். இந்த சந்தையில் மொத்த வணிகர்களும், சில்லறை வணிகர்களும் காய்கறிகளை வாங்க முடியும். வெளிப்படையான முறையில், மிகவும் எளிமையாக காய்கறிகளை வாங்க முடியும் என்பது மின்னணு சந்தைகளின் சிறப்பம்சம் ஆகும். மின்னணு சந்தைகள் திட்டத்தின் உதவியுடன் இந்தியா முழுவதும் உள்ள முறைப்படுத்தப்பட்ட சந்தைகள் ஒருங்கிணைக்கப்பட்டு பொதுவான மின்னணு தளம் ஏற்படுத்தப்படும். இந்த தளத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள உழவர்களும், மொத்த மற்றும் சில்லறை வணிகர்களும் வேளாண் விளைபொருட்களை வெளிப்படையான முறையில் விற்கவும், வாங்கவும் முடியும். இதன்மூலம் சந்தைப்படுத்துபவர்களால் விவசாயிகள் ஏமாற்றப்படுவது தடுக்கப்படும். அதுமட்டுமின்றி, தனியார் சந்தைகள் தங்களின் வணிகப்பரப்பை அதிகரித்துக் கொள்ளும் வகையில் மின்னணு சந்தைகளை பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படும்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு சந்தைப்பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு ஒழுங்குமுறை குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இதனால் பல இடங்களில் சந்தைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. பல்வேறு சந்தைகளில் பொருட்களை விற்பனை செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு சந்தைக்கும் ஒரு உரிமம் பெற வேண்டியிருக்கிறது. அவ்வாறு உரிமம் பெறுவதில் உள்ள முட்டுக்கட்டைகள் காரணமாக ஏகபோகம், மோசமான கட்டமைப்பு வசதிகள், தொழில்நுட்பங்கள் குறைந்த அளவில் பயன்படுத்தப்படுவது, முறையான தகவல் தொடர்பின்மை, விலை நிர்ணயத்தில் வெளிப்படைத் தன்மையின்மை, அதிக அளவு சந்தைக் கட்டணங்கள், பொருட்களைக் கொண்டு செல்வதில் தேவையற்றக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு சவால்கள் உள்ளன. இந்த சவால்களை சந்திக்க மின்னணு சந்தைகள் பயனுள்ளவையாக இருக்கும் என்பதால் தான் மின்னணு சந்தை என்ற தத்துவத்திற்கான தேவை பிறந்தது. எனவே தான், விவசாயிகளுக்கு நல்ல விலை, வினியோகச் சங்கிலியை மேம்படுத்துதல், பொருட்கள் வீணாவதை குறைத்தல், தேசிய அளவிலும், மாநில அளவிலும் ஒருங்கிணைந்த சந்தையை உருவாக்குதல் ஆகியவற்றை சாத்தியமாக்குவதற்காக பொது மின்னணு தளம் தேவைப்படுகிறது.

மின்னணு சந்தைகளை சிறு உழவர்களைக் கொண்ட வேளாண் வணிகக் கூட்டமைப்புகள் மூலம் மத்திய வேளாண்மை மற்றும் கூட்டுறவுத்துறை அமைக்கும். இவர்கள் மூலமாக அமைக்கப்படும் மின்னணு பொதுத் தளம் நாடு முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட முறைப்படுத்தப்பட்ட சந்தைகளால் பயன்படுத்திக் கொள்ளப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2015–16 முதல் 2017–18 வரையிலான 3 ஆண்டுகளுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. 2015–16 ஆம் ஆண்டில் 250 சந்தைகள், 2016–17ஆம் ஆண்டில் 200 சந்தைகள், 2017–18 ஆம் ஆண்டில் 135 சந்தைகள் என மொத்தம் 585 முறைப்படுத்தப்பட்ட சந்தைகள் இந்த மின்னணு தளத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படும். இந்த சந்தைகள் அமைந்துள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இலவச மென்பொருட்கள் வழங்கும் திட்டமும் இதில் அடக்கம். ஒவ்வொரு சந்தைக்கும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக தலா ரூ.30 கோடி மானியம் வழங்கப்படும்.

கர்நாடக மாநிலத்தில் இந்த வகை சந்தைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் இந்த சந்தைகள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. கர்நாடக அரசு அம்மாநிலத்தில் உள்ள 55 பெரிய சந்தைகளையும் இணைத்துள்ளது. அதுமட்டுமின்றி, அச்சந்தைகளை இணையதளத்துடன் இணைத்து ஒவ்வொரு சந்தையிலும் விற்பனைக்கு உள்ள பொருட்கள் மற்றும் அவற்றின் விலைகளை பட்டியலிட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலுள்ள 30,000 வணிகர்களுக்கும் தனித்தனி பயனாளர் பெயர்களும், அதற்கான கடவுச் சொல்லும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலம் பெங்களூரில் உள்ள ஒரு வணிகர் கர்நாடகத்தின் மற்ற மாவட்டங்களில் எந்தெந்த பொருட்கள் எத்தனை மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடியும். பொருட்கள் இருக்கும் தொலைவுக்கு ஏற்றவாறு, போக்குவரத்து செலவைக் கணக்கிட்டு, அந்தப் பொருட்களுக்கான விலையை வணிகர் நிர்ணயிப்பார். அவ்வாறு பல்வேறு வணிகர்களும் நிர்ணயிக்கும் தொகையில் எது அதிகம் என்று உழவர் முடிவெடுக்கிறாரோ, அந்த விலைக்கு பொருட்களை விற்பார். அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை போன்று, நிலையான விலை, இருதரப்பு வணிகம் ஆகிய முறைகளிலும் பொருட்களை விற்பனை செய்ய இந்த இணையதளம் வகை செய்கிறது. கர்நாடகத்தில் கடந்த 16 மாதங்களில் மட்டும் தேங்காய் கொப்பரை, துவரம் பருப்பு, நெல், ராகி, நிலக்கடலை, சோளம் போன்ற பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் மின்னணு சந்தை அமைப்பு ரூ.8,521 கோடி வருவாய் ஈட்டியிருக்கிறது. மின்னணு சந்தை அமைப்பின் நோக்கமே மாறி வரும் சந்தை முறையை ஏற்படுத்துவதுதான் என்ற போதிலும், இந்த சந்தை அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது, மின்னணு சந்தைக்கான மென்பொருள் ஆகியவை குறித்த விழிப்புணர்வை உழவர்களிடம் ஏற்படுத்துவதும் மாநில அரசுகளின் கடமை ஆகும்.

# இந்தியாவின் வளர்ச்சிக்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்திக்கொள்ளுதல்

– விஜய்குமார் கவுல்

புதுதில்லியில் கடந்த ஜூலை 1–ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில், டிஜிட்டல் இந்தியா வாரத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். டிஜிட்டல் தொழில்நுட்பம் அல்லது டிஜிட்டல் மயமாக்கல் என்பது, பொதுமக்களையும், பொருட்களையும், சேவைகளையும் இணைப்பதற்கான சமீபத்திய புதுமையாகும். தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, இணையதளம் மற்றும் பிற தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், இந்தத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள தொழில்நுட்பப் புரட்சியின் ஓர் அங்கம்தான் டிஜிட்டல் தொழில்நுட்பமாகும். உலக அளவில் ஏற்கெனவே இத்தகைய 5 தொழில்நுட்பப் புரட்சிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் டிஜிட்டல் தொழில்நுட்பம் 6–வது ஆகும். டிஜிட்டல் மயமாக்கத்தின் மூலம் பல்வேறு நாடுகளில் மிகப்பெரிய அளவில் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புள்ளது. உலகில் கடந்த 250 ஆண்டுகளில் நிகழ்ந்த 5 தொழில்நுட்பப் புரட்சிகளில் ஒன்றில்கூட இந்தியா பங்கேற்றதில்லை. இந்த அனைத்துத் தொழில்நுட்பப் புரட்சிகளும் மேலைநாடுகளில் தொடங்கியவையாகும். பின்னர் இப்புரட்சிகள் மேலை உலகின் மற்ற நாடுகளுக்குப் பரவின. இந்தப் புரட்சிகளின் மூலம் பெரும்பாலான மேலை நாடுகள் பயனடைந்தன. ஆனால் இந்தியாவோ, சுதந்திரமடைந்து 60 ஆண்டுகளுக்குப் பிறகும் வறுமை, நுண்ணூட்டச் சத்து குறைவு, வேலைவாய்ப்பு குறைவு, எழுத்தறிவின்மை, மருத்துவ வசதியின்மை உள்ளிட்ட சமூகப் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள முடியாமல் திணறி வருகிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக, சுற்றுச் சூழல் சீரழிவு இந்தியாவை பெருமளவில் பாதித்திருக்கிறது. இந்தியா இப்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் காலனி ஆதிக்கத்தின் கீழ் நீண்டகாலம் இருந்ததும், விடுதலையடைந்த பிறகு மோசமான நிர்வாக முறையைப் பின்பற்றியதும்தான். இத்தகைய சூழலில், இன்றைய நிலையில் இந்தியா எதிர்கொண்டு வரும் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திறன், நவீன டிஜிட்டல் தொழில்நுட்பங்களுக்கு உண்டு. இந்திய மக்களின் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வகை செய்து, அதன் மூலம் விரும்பத் தக்க சமூக மாற்றத்தை ஏற்படுத்த டிஜிட்டல் தொழில்நுட்பம் உதவி செய்யுமா? என்ற வினாவை எழுப்பி, இந்தியாவின் சமூகப் பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதில், டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கு குறித்து ஆராய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

### சமூகப் பொருளாதார சவால்கள், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாடு

இந்தியா ஏராளமான சமூகப் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. உலகிலேயே அதிக ஏழைகளைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது. கோடிக்கணக்கான இந்தியக் குழந்தைகள் நுண்ணூட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. காசநோய், புற்றுநோய், நீரிழிவு நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஆய்வு செய்து பார்த்தால், மற்ற நாடுகளைவிட, இந்தியாதான் முன்னணியில் உள்ளது. அண்மைக்காலத்தில் இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் அதிகரித்துள்ளது என்ற போதிலும், இந்தியாவில் எழுத்தறிவு பெறாதவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே உள்ளது. ஏராளமான இளைஞர்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர். இனிவரும் காலங்களில் இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது அதிகரிக்கும். இதற்கெல்லாம் மேலாக, உலகப் பொருளாதாரத்துடன், இந்தியப் பொருளாதாரம் ஒருங்கிணைக்கப்பட்டதால், இந்தியாவில் உள்ள புறக்கணிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள்

---

விஜய் குமார் கவுல், **துறைத் தலைவர், வணிகப் பொருளாதாரத் துறை, தில்லி பல்கலைக்கழகம், புதுதில்லி.**

தீவிரமடைந்துள்ளன. இந்தியா எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார சவால்கள் குறித்து படம் எண்–1–ல் விளக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வுகண்டுவிட முடியாது. அதுமட்டுமின்றி, இந்தப் பிரச்சினைகளில் பெரும்பாலானவை ஒன்றுடன் ஒன்றுதொடர்புடையவைகளாக உள்ளன. உதாரணமாக, வறுமை, உள்ளடக்கிய வளர்ச்சி, உணவுப் பாதுகாப்பு மற்றும் வேலை உருவாக்கம் ஆகியவை நமது வேளாண்மையுடனும், வேளாண் சூழல் அமைப்புடனும் தொடர்புடையவையாக உள்ளன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமானால், வேளாண் துறையிலும், ஒட்டுமொத்த வேளாண் சூழல் அமைப்பிலும் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். இதற்காக, ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி, தீர்வுகாணக்கூடிய விரிவான கொள்கை செயல்திட்டம் தேவை. இந்தியாவில் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொதுவான செயல்திட்டம் சாத்தியமில்லை. அத்தகைய செயல்திட்டத்தை செயல்படுத்தினாலும் பயன் இருக்காது. எனவே, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள வளங்கள், பிரச்சினைகளை எதிர்கொள்வதில் மக்களின் தயார்நிலை, அவர்களின் ஈடுபாடு, திறமை, சட்ட வல்லுநர்களின் பார்வை அல்லது அரசு நிர்வாக அமைப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற சிறந்த தீர்வுகள் உருவாக்கப்பட வேண்டும்.


அதே நேரத்தில் கடந்த சில 10 ஆண்டுகளில் டிஜிட்டல் மயமாக்கத்தின் வடிவில் உருவான புதிய தொழில்நுட்பங்கள், இந்தியா போன்ற வளரும் நாடுகள் எதிர்கொண்டு வரும் சில சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பயன்பாடு என்பது, கல்வியை பரவலாக்குதல், அரச நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை மேம் படுத்துதல், மக்களிடையே தொடர்பை அதிகரித்தல், உற்பத்தியைப் பெருக்குதல், தொழில்நிறுவனங்களின் செயல்பாடுகளை மாற்றுதல், புதிய தொழிற்சாலைகளின் வளர்ச்சி, புதுமையான செயல்பாடுகளின் பெருக்கம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வேளாண்மை மற்றும் ஊரகத்துறை, கல்வி, உற்பத்தி, சுகாதார கவனிப்பு, மின்னணு நிர்வாகம் ஆகிய துறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்து இனிவரும் பகுதிகளில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இந்தியாவின் சமூகப் பொருளாதார சவால்கள், அவற்றுக்கான தீர்வுகள், அதன் பயனாக ஏற்படும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு குறித்து படம்–1 விளக்குகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, இந்தியா உலகில் மிகவும் வளமையான நாடாகும். இந்தியாவில் நீண்டகாலம் நடைபெற்ற ஆங்கிலேயர் ஆட்சியின்போது, இந்தியாவிடம் இருந்து அதன் வளம் பறிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, கடந்த காலங்களில் நடைபெற்ற எந்தவொரு தொழில்நுட்பப் புரட்சியிலும் இந்தியா பங்கேற்கவில்லை. இந்தியா விடுதலையடைந்தபோது, வறுமை, கல்வி அறிவின்மை, மிகவும் மோசமான

அட்டவணை 1

## தொழில்நுட்பப் புரட்சிகள்

| ஆண்டு மற்றும் நாடுகள் | தொழில்நுட்பப் புரட்சியின் தன்மை மற்றும் தொழில்கள் |
|---|---|
| 1. 1971, இங்கிலாந்து | தொழில்புரட்சி (எந்திரங்கள், தொழிற்சாலைகள்) |
| 2. 1829, இங்கிலாந்து | நீராவி, நிலக்கரி, இரும்பு மற்றும் ரயில்வே புரட்சி |
| 3. 1875, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி | எஃகு மற்றும் கனரக பொறியியல் (மின்சாரம், ரசாயனம், உள்நாட்டு கடல்சார் தொழில்கள் |
| 4. 1908, அமெரிக்கா | வாகனங்கள், எண்ணெய், பெட்ரோ கெமிக்கல் புரட்சி |
| 5. 1971, அமெரிக்கா | தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புப் புரட்சி |
| 6. 2000, | டிஜிட்டல் மயமாக்கம், உயிரி தொழில்நுட்பம், உயிரி மின்னணு, நானோ தொழில்நுட்பம் மற்றும் புதிய பொருட்கள் |




**படம் –1**

**இந்தியாவில் அரச நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி**

*சமூகப் பொருளாதார காரணிகள் என உலகின் மோசமான ஏழை நாடுகளில் ஒன்றாக இருந்தது. கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவை இந்தியர்கள்தான் ஆண்டு வருகிறார்கள் என்றபோதிலும், இந்த பிரச்சினைகளில் இருந்து இந்தியாவை மீட்டெடுக்க முடியவில்லை. அதனால்தான் மோசமான அரச நிர்வாகம்தான் மோசமான பொருளாதார வளர்ச்சிக்கும், அதன் செயல்பாடுகளுக்கும் காரணம் என்று படம்–1–ல் விளக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், சிறப்பான நிர்வாகம் இருந்தால் இந்தியாவில் பிரச்சினைகளை தீர்த்துவிட முடியும். சிறப்பான நிர்வாகத்தின் காரணமாக, சிறந்த பொருளாதார வளர்ச்சி ஏற்படும், சமூக நலன் சார்ந்த கொள்கைகள், சிறப்பான திட்டங்கள் ஆகியவை ஏற்படுத்தப்படும். அவை அனைத்தும் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டால், உள்ளடக்கிய வளர்ச்சி எட்டப்படும். இந்த விஷயத்தில் நவீன தொழில்நுட்பங்களின் பங்கும் கருத்தில்கொள்ளப்பட வேண்டும். நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மாநகர நிர்வாகங்கள், பொருளாதாரம் உள்ளிட்ட நிர்வாக அமைப்பில் டிஜிட்டல் மயமாக்கல் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் இவை பெரிய அளவில் உதவி செய்துள்ளன.*

*சுருக்கமாகக் கூறவேண்டுமானால், இந்தியா இப்போது எதிர்கொண்டு வரும் அனைத்து சமூகப் பொருளாதார சவால்களையும் நல்ல கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நல்லாட்சி, அவற்றை செயல்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் உதவியுடன் தீர்க்கமுடியும். இவற்றின் மூலம் இந்தியாவில் உள்ளடக்கிய வளர்ச்சி ஏற்படும்.*

## நவீன தொழில்நுட்பங்களும், இந்தியாவின் உள்ளடக்கிய வளர்ச்சியும்

*கடந்த 250 ஆண்டுகளில் உலகம் பலவிதமான தொழில்நுட்ப மாற்றங்களை எதிர்கொண்டிருக்கிறது. இந்தத் தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள்தான் தொழில்நுட்பப் புரட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உலக அளவில் ஏற்பட்ட இத்தகைய ஐந்து வகையான தொழில்நுட்பப் புரட்சிகள் அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டுள்ளன. 6–வது புரட்சிதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழில்நுட்ப மாற்றங்கள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதால், இவை தொழில்நுட்பப் புரட்சி என்று அழைக்கப்படுகின்றன.*

*ஒவ்வொரு தொழில்நுட்பப் புரட்சியும், மிகப்பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.*

அந்தப் புரட்சியால், நாட்டின் வளர்ச்சி, உற்பத்தி அதிகரிப்பு, உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் வகை அதிகரிப்பு, சமூகப் பயன்கள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களின் முழு பரிமாணத்தையும் உணர 50 ஆண்டுகள் ஆயின. அடுத்தடுத்து ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியின் காரணமாக ஏற்பட்ட வளர்ச்சியால்தான் முதலாளித்துவ முன்னேற்றம் ஏற்பட்டது.

இந்தியாவின் சமூகப் பொருளாதார தன்மைகளை கருத்தில் கொண்டு, உள்ளடக்கிய வளர்ச்சியை எட்டுவதற்கான தொழில்நுட்பங்களை இந்தியா தேர்வு செய்யவேண்டும். இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தி முடித்து உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான 12 வகை தொழில்நுட்பங்களை மெக்கின்சி குலோபல் இன்ஸ்ட்டியூட் அடையாளம் கண்டிருக்கிறது. இந்தத் தொழில்நுட்பங்களின் பயன்களும் தாக்கங்களும் பரவலாக உணரப்படும் ஏராளமான பொதுமக்கள், நிறுவனங்கள் தயாரிப்புகள் மற்றும் சந்தைகளில் இத்தொழில்நுட்பங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தத் தொழில்நுட்பங்கள் மிகப்பெரிய அளவில் பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மெக்கின்சி நிறுவனம் கூறியிருக்கிறது.

இந்தியாவில் செயல்படுத்துவதற்கு ஏற்ற 12 தொழில்நுட்பங்களை 3 வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன. 1. வாழ்க்கை மற்றும் பணிகளை மின்னணு மயமாக்குதல், 2. ஸ்மார்ட் இயற்பியல் அமைப்புகள், 3. மறு சிந்தனை சக்திக்கான தொழில்நுட்பங்கள். இந்த 3 வகைகள் குறித்து வரைபடம் 2–ல் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 4 தொழில்நுட்பங்கள் இந்திய சூழலுக்கு முற்றிலுமாக உகந்த தொழில்நுட்பங்களாக உள்ளன. அவை, டிஜிட்டல் பணம் விநியோக தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் அடையாள சரிபார்ப்பு தொழில்நுட்பம், பொருட்களை நவீன முறையில் கொண்டு செல்லுதல் மற்றும் விநியோகித்தல், மேம்படுத்தப்பட்ட ஜி.ஐ.எஸ். தொழில்நுட்பம் ஆகியவைதான் அந்த 4 தொழில்நுட்பங்களாகும். இந்த 4 தொழில்நுட்பங்களும் அடுத்த 10 ஆண்டுகளில் அனைவராலும் கடைப்பிடிக்கப்பட வாய்ப் புள்ளது. நவீன ரோபோட்டிக் தொழில்நுட்பம், தானாக இயங்கும் வாகனங்கள், முப்பரிமாண அச்சுமுறை, நவீன பொருட்கள் ஆகிய பிற தொழில்நுட்பங்களும் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமாகும்.

அட்டவணை–2ல் குறிப்பிடப்பட்ட 12 தொழில்நுட்பங்களும் இந்தியாவுக்கு மிகவும் அவசியமானவையாகும். அதிவேக பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம், சிறந்த நிர்வாகம் ஆகிய இலக்குகளை இந்தியா 2025 ஆம் ஆண்டிற்குள் எட்டுவதற்கு உதவக்கூடிய பொருளாதார மற்றும் சமூக மாண்புகளை உருவாக்க இந்தத் தொழில்நுட்பங்கள் உதவும். இந்தியாவின் வளர்ச்சிக்கு அவசியமான டிஜிட்டல் இந்தியா திட்டம் குறித்து முதலில் விவாதிப்போம். அதன் ஒரு கட்டமாக, இந்தியப் பொருளாதாரத்தின் 5 முக்கியத் துறைகளில் டிஜிட்டல் மயமாக்கத்தால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து நாம் பார்ப்போம்.

### டிஜிட்டல் இந்தியா – தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கான முயற்சி

டிஜிட்டல் இந்தியா தொழில்நுட்பம் என்பது இந்தியா இப்போது எதிர்கொண்டு வரும் சில சவால்களில் இருந்து மீள்வதற்கு மக்களுக்கு உதவும் வகையில் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் முயற்சி ஆகும். டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிந்த மக்கள் எல்லையில்லாத வாய்ப்புகளுக்கு அத்தொழில்நுட்பத்தை பயன்படுத்த வகை செய்யும் திட்டம் இதுவாகும். இந்தியாவுக்கு தேசிய நெடுஞ்சாலைகள் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு அகண்ட அலைவரிசை நெடுஞ் சாலைகளும் முக்கியம் என்பதை நமது அரசியல் தலைவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். சிறப்பான சேவைகளை வழங்குதல், புதுமைகளைப் படைத்தல், அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட இலக்குகளை எட்டவேண்டுமானால், அதற்கு டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது அவசியம் என்பதையும், டிஜிட்டல் நாடுகளுக்கு அடித்தளம் அமைக்கவேண்டுமானால், நாடு முழுவதும் டிஜிட்டல் மயமாக்க வேண்டும் என்பதையும் நமது தலைவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

டிஜிட்டல் இந்தியா திட்டம் அனைவருக்கும் பயன்படக்கூடிய வகையிலான டிஜிட்டல் கட்டமைப்பை வழங்குகிறது. தேவைப்படும்போது நிர்வாகம் மற்றும் சேவைகளை வழங்குதல், குடிமக்களுக்கு டிஜிட்டல் அதிகாரம் அளித்தல் ஆகியவற்றுக்கு இந்தக் கட்டமைப்பு பயன்படும். இந்தியாவின் வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய 9 முக்கிய

*அட்டவணை – 2 (இந்தியாவின் வளர்ச்சிக்கான 12 தொழில்நுட்பங்கள்)*

| தொழில்நுட்ப வகைப்பாடு | தொழில்நுட்பம் | பயன்கள் |
|---|---|---|
| வாழ்க்கை மற்றும் பணிகளை மின்னணு மயமாக்கல் | மொபைல் இன்டர்நெட் | குறைந்த செலவு கொண்டது, கையடக்கக் கருவிகளில் பயன்படுத்த ஏற்றது, பல்வேறு வகையான சேவைகளை உலகம் முழுவதும் உள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குக் கொண்டு சென்று சேர்க்கும் திறன் கொண்டது. |
| | க்ளவுட் டெக்னாலஜி | கணக்கிடும் திறன், தகவல்களை சேமித்து வைத்தல், ஒரு குறிப்பிட்ட நெட்வொர்க் அல்லது இணையதளத்தில் குறைந்த செலவில் சேவை வழங்கும் செயலியாகப் பயன்படுதல். |
| | அறிவுசார் பணியை தானியங்கி மயமாக்கல் | முறையான வடிவத்தில் இல்லாத பகுப்பாய்வை ஒழுங்குபடுத்துவதற்கான மென்பொருள். இந்த மென்பொருள் மொழிகளைப் பகுத்தறியவும், நீதிமன்ற தீர்ப்பு தொடர்பான பணிகளுக்கும், முடிவு எடுக்கும் திறனின் தரத்தை மேம்படுத்தவும் உதவும். |
| | டிஜிட்டல் பணம் வாங்கும் முறை | டிஜிட்டல் பணம் வழங்கும் முறை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கோடிக்கணக்கான இந்தியர்கள் பணம் இல்லாமல் பறிமாற்றம் செய்யும்நிலை ஏற்படுத்தப்படும். |
| | டிஜிட்டல் அடையாள சரிபார்ப்பு | எளிமையான முறையில் ஒருவரின் அடையாளத்தை சரிபார்க்க முடியும். இதன் மூலம், அவருக்கு பாதுகாப்பான முறையில் பணம் வழங்குதல், அரசு சேவைகளைப் பெறுதல் ஆகியவை சாத்தியமாகும். |
| ஸ்மார்ட் இயற்பியல் அமைப்பு | கருவிகளை இணைத்தல் | குறைந்த விலை கொண்ட சென்சார்களைப் பயன்படுத்தி, எந்திரங்கள் மற்றும் கருவிகளை இணைத்து நிர்வகித்தல். தொடர்ச்சியான தகவல் சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வின் மூலம் இது சாத்தியமாகிறது. |
| | பொருட்களை கொண்டு செல்லுதல் மற்றும் விநியோகித்தல் | பொருட்களை இணைக்கும் தொழில்நுட்பத்துடன் டிஜிட்டல் சேவைகளைப் பயன்படுத்தி, பொருட்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் விநியோகிக்கும் பணி சிறப்பாகவும், திறமையாகவும் செய்யப்படுகிறது. |
| | மேம்படுத்தப்பட்ட ஜி.ஐ.எஸ். தொழில்நுட்பம் | புவியியல் இடம் சார்ந்த தகவல்களை பிற வகையான தகவல்களுடன் இணைத்து பூகோலம் முழுவதும் வளங்களை மேலாண்மை செய்யவும், பிற பணிகளை மேலாண்மை செய்யவும் பயன்படுகிறது. |
| | அடுத்த தலைமுறை மரபணுவியல் | விரைவான குறைந்த செலவிலான மரபணு வரிசைப்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் மேம்படுத்தப்பட்ட மரபணுவியல் தொழில்நுட்பம். வேளாண் உற்பத்தியையும், இந்தியாவில் எரிசக்தி பாதுகாப்பையும் மேம்படுத்த இது உதவுகிறது. |
| மறு சிந்தனை சக்தி | மேம்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கண்டறிதல் மற்றும் எடுத்தல் | மரபு சார்ந்த தொழில்நுட்பங்களைத் தாண்டி, எண்ணெய் மற்றும் எரிவாயுவை பூமியில் இருந்து குறைந்த செலவில் எடுக்கும் தொழில்நுட்பம். இது இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பை மேம்படுத்தும் திறன் கொண்டதாகும். |
| | புதுப்பிக்கவல்ல எரிசக்தி | புதுப்பிக்கவல்ல ஆதாரங்களில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதால், தட்பவெப்ப நிலைக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்க முடியும். அதுமட்டுமின்றி, மின் தொகுப்புடன் இணைக்கப்படாத தொலைதூரப் பகுதிகளுக்கும் மின்சாரத்தைக் கொண்டு செல்ல முடியும். |
| | மேம்படுத்தப்பட்ட மின்சார சேமிப்பு | எரிசக்தியை சேமித்து வைக்கும் கருவிகள் அல்லது அமைப்புகள். மின் தடைகள், மின் விநியோக குளறுபடிகள், விநியோக இழப்பு ஆகியவற்றைக் குறைப்பதற்கான மேலாண்மை. |

ஆதாரம்: நோஷிர் காக்காவால் தொகுக்கப்பட்டு மெக்கின்சி குளோபல் இன்ஸ்ட்டிடியூட்டால் வெளியிடப்படும் மெக்கின்சி காலாண்டு இதழில் (டிசம்பர் 2014) வெளியான இந்தியாவின் தொழில்நுட்ப வாய்ப்புகள்: பணிகளை மேம்படுத்தி மக்களுக்கு அதிகாரம் அளித்தல் என்ற தலைப்பிலான கட்டுரை

அம்சங்களில் டிஜிட்டல் இந்தியா திட்டம் அடையாளம் கண்டுள்ளது. அவற்றுள் முக்கியமானது. 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் இரண்டரை லட்சம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அகண்ட அலைவரிசை சேவையைக் கொண்டுசெல்வதாகும். புதிய கட்டடங்களில் தொலைத்தொடர்பு கட்டமைப்புகளை அமைப்பதன் மூலம், நகர்ப்புறப் பகுதிகளில் அகண்ட அலைவரிசை சேவைகளை விரிவுபடுத்த மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. அகண்ட அலைவரிசை சேவையை கிராமப்புறங்களுக்கு கொண்டு செல்வதன் மூலம், தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான சேவைகளை நாட்டில் தொலைதூரத்தில் உள்ள பகுதிகளுக்கும் கொண்டு செல்ல முடியும் என்று அரசு கருதுகிறது. நாடு முழுவதும் செல்பேசி சேவையை பரவலாக்குவதில் இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. 2018 ஆம் ஆண்டிற்குள் மேலும் 40 ஆயிரம் கிராமங்களில் செல்பேசி தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், டிஜிட்டல் மயமாக்கல் என்பது, புதிய கண்டுபிடிப்பு புரட்சி ஆகும். இதை 19–ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த எந்திரமயமாக்கல் மற்றும் மின்சார கண்டுபிடிப்பு புரட்சியுடன் ஒப்பிட முடியும். தொழில்நுட்பத் துறை என்பது பரிணாம வளர்ச்சி அடையக்கூடியது. அதே நேரத்தில் சமுதாயத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் புரட்சிகரமானது ஆகும்.

## வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி

இந்தியப் பொருளாதாரத்தில் சில குறிப்பிட்ட துறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்து பார்ப்போம். இந்தியாவில் வறுமை, உள்ளடக்கிய வளர்ச்சி, உணவுப் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஆகியவை குறித்து விவாதிப்பதற்கு முன்பாக இந்தியாவின் வேளாண்மை மற்றும் வேளாண் சூழல் அமைப்பை புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தப் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகாண வேண்டுமானால், நாம் ஒற்றை மாதிரி தீர்வை மட்டும் உருவாக்கினால் போதாது. மாறாக, ஒவ்வொரு பகுதியிலும் கிடைக்கும் வளம், வளத்தின் அடிப்படையில் அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற புதுமையான வளர்ச்சி மாதிரிகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான், வறுமையை ஒழித்து நாகரீகமான வாழ்வாதாரம் மற்றும் உண்மையான உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். 1950 ஆம் ஆண்டில் இருந்து இந்திய வேளாண்துறை அடைந்து வரும் வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது. இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சியைவிட, உணவு உற்பத்தியின்வளர்ச்சி அதிகமாக உள்ளது. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, நீலப் புரட்சி ஆகியவை இந்தியாவின் வேளாண் பொருளாதாரம் வெற்றி பெறுவதற்கு உதவியுள்ளன. 1950–ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 5 மடங்கு அளவுக்கும், பால் உற்பத்தி 7 மடங்கு அளவுக்கும் அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில், விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது குறித்த செய்திகளும், பொருளாதார அடிப்படையில் அவர்கள் சுரண்டப்படுவது குறித்த செய்திகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. கொள்கை குறைபாடுகள்தான் இதற்குக் காரணம் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். கடந்த காலங்களில் இந்தியாவின் வேளாண் கொள்கை உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது. அதே நேரத்தில் அதிக மதிப்பு கொண்ட வேளாண் விளைப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதை கவனிக்க அவர்கள் தவறிவிட்டனர். அதே போல் பொதுமக்களுக்கும் போதிய நுண்ணூட்டச் சத்து கொண்ட உணவு தானியங்கள் கிடைக்கவில்லை. உணவு தானியங்கள் தவிர்த்த அதிக விலை கொண்ட பொருட்கள் எளிதில் அழுகக்கூடியவையாகவும், விரைவாக விநியோகிப்பதற்கு ஏற்ற வசதிகள் தேவைப்படுபவையாகவும் இருந்தன. வேளாண்மை சார்ந்த கொள்கையை சிறப்பாக வகுக்க வேண்டுமானால், உழவர்களிடம் இருந்து தொடங்கி இடைத்தரகர்கள், சேமிப்புக் கிடங்குகள், உணவுப் பதன நிறுவனங்கள், சில்லரை வணிகர்கள், நுகர்வோர் வரையிலான வேளாண் மதிப்புக்கூட்டு சங்கிலியை முழுமையாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். வேளாண் மதிப்புக்கூட்டு சங்கிலியை சூழல் அமைப்பாக மாற்றுவதில் அரசாங்கம் தவிர, வணிகர்கள், நிதியுதவி செய்பவர்கள் ஆகியோரும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இந்த சூழல் அமைப்பு நிலைத்து நிற்க வேண்டுமானால், அதற்கு அரசு மட்டுமின்றி, பிற பங்குதாரர்களும் தங்களின் பங்களிப்பை செலுத்த வேண்டும். வேளாண் மதிப்புக்கூட்டு சங்கிலியை திறமையானதாகவும், போட்டிகளை எதிர்கொள்ளக் கூடியவையாகவும் மாற்றுவதற்கு நவீன தொழில்நுட்பங்கள் பெருமளவில் உதவும்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள், துல்லிய வேளாண்மை, மொபைல் இண்டர்நெட் அடிப்படையிலான வேளாண்மை விரிவாக்கம் மற்றும் சந்தை தகவல் சேவைகள் மூலம், 2025 ஆம் ஆண்டிற்குள் இந்திய வேளாண்மைத் துறை ஆண்டுக்கு 8,000 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு கூடுதல் மதிப்பை எட்டுவதற்கு உதவும். கிடங்கு வசதிகள் மற்றும் விநியோக அமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் குறையும். இதன் மூலமும் பொதுவிநியோகத் திட்டத்தில் உள்ள குறைகளை களைவதன் மூலமும், ஆண்டுக்கு 3,200 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு மிச்சப்படுத்த முடியும். இது 30 கோடி முதல் 40 கோடி பேருக்கு சிறந்த நுண்ணூட்டச் சத்தைக் கொண்டுவருவதுடன், 10 கோடி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும் வகை செய்யும்.

உழவர்களுக்கு பயிர்க் காப்பீட்டை வழங்குவதற்கு தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக அமையும். அனைத்துப் பருவ காலங்களுக்கும் தாக்குப்பிடிக்கும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, செயற்கைக்கோள்கள் / ஆளில்லாத விமானங்கள் மூலம் பயிர்களைப் படம்பிடித்து, அவற்றை மொபைல் கருவிகள் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதன் மூலம் வேளாண் அமைப்பில் வலுவான அறிவியல் தளத்தை ஏற்படுத்துவதுடன் ஊழலையும் கட்டுப்படுத்த முடியும்.

அதேபோல், பல்வேறு வகையான சேவையின் மூலம் ஊரக பொதுமக்களுக்கு அதிகாரம் அளிப்பதுதான் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட நிர்வாகம், நில ஆவணங்கள், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, வேளாண்மை மற்றும் அரசு மற்றும் தனியார் ஆவணங்களை மின்னணு மயமாக்கி பாதுகாத்தல் போன்ற துறைகளில் டிஜிட்டல் சேவையை அறிமுகம் செய்வதன் மூலம் பெருமளவிலான மக்களுக்கு இச்சேவையை வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்த நடவடிக்கையின் மூலம், புதிய தொழில் முனைவோருக்கும், ஊரகப் பகுதிகளில் செயல்படும் சேவை வழங்கும் அமைப்புகளுக்கும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## உற்பத்தித் துறை சூழல் அமைப்பு

இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் பெருமளவிலான இளைஞர்கள் தொழிலாளர் சக்திகளாக மாறுவர் என்று பொருளாதார வல்லுநர்களும், பொருளாதார அமைப்புகளும் மதிப்பிட்டுள்ளன. இதன் காரணமாக இந்தியாவின் உற்பத்தித் துறை மற்றும் அதன் சூழல் அமைப்பை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த காலங்களில் உலக உற்பத்தி அமைப்பு என்பது, ஒரு நிறுவனம் மற்றும் பல்வேறு விநியோகஸ்தர்கள் நிதியுதவி வழங்குதல் மற்றும் நுகர்வோரை சார்ந்ததாக இருந்தது. ஆனால், தற்போதைய உலக உற்பத்தி என்பது, உற்பத்தித் துறை சூழல் அமைப்பைச் சார்ந்ததாக மாறிவிட்டது. இந்த மாற்றத்திற்கு வித்திட்டது டிஜிட்டல் மயமாக்கல்தான். சந்தையில் போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்குத் தயாராக இருத்தல், இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை உருவாக்குதல் ஆகியவற்றை இந்திய நிறுவனங்களும், கொள்கை வகுப்பாளர்களும் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு நவீன தொழில்நுட்பங்கள் பெருமளவில் உதவி செய்யும். இந்திய நிறுவனங்கள் இத்தகைய தொழில்நுட்பங்களை விரைவாக ஏற்றுக்கொள்கின்றன.

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இன்றைய வணிக சூழலில் நிறுவனங்கள், அவை செயல்படும் விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அனைத்துத் தொழில்களிலும், மதிப்புச் சங்கிலி என்பது முறிக்கப்பட்டு, மீண்டும் சேர்க்கப்பட்டு புதிதாக உருவாக்கப்படுகிறது. ஏற்கெனவே உள்ள மதிப்புச் சங்கிலியை முறித்து, பிற மதிப்பு வளங்களை இணைத்தும், மற்ற துறைகளின் மதிப்புச் சங்கிலிகளை சேர்த்தும், புதிய மதிப்பு உருவாக்க வளங்களை கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய சூழலில், அதிக வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய உலக நாடுகளுடன் போட்டியிடும் அளவுக்கு இந்திய தொழில்துறையை மேம்படுத்தக்கூடிய உற்பத்தித் துறை சூழல் அமைப்பை உருவாக்கும் வகையில் கொள்கை வடிவமைக்கப்படவேண்டியது அவசியமாகும். சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மீதும், அவற்றுக்கும் பெரு நிறுவனங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதிலும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். உற்பத்தித் துறை சூழல் அமைப்பை அனைத்து மட்டங்களிலும் பரப்புவதன் மூலம், தொழில்துறையில் உள்ள குறைகளை எளிதில் அடையாளம் காண முடியும். நிதியுதவி, மூலப் பொருட்கள், நிலம், பயனாளர் சந்தைகளுடன்

இணைப்பு வசதியை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

இந்தியாவில் பொருட்கள் மற்றும் சேவை வரி விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது. இந்தியாவின் வணிகத்துறையினரும், பெரு நிறுவனங்களும், பெருமளவில் வளர்ச்சியடைவதற்கும், போட்டித் தன்மையை எதிர்கொள்வதற்கும் இது மிகவும் உதவியாக இருக்கும். நவீன தொழில்நுட்பங்கள் மூலம்தான் இது சாத்தியமாகும். அதுமட்டுமின்றி, மின்னணு பொருட்கள் உற்பத்திக்கு உரிய முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் மின்னணு பொருட்களின் இறக்குமதியை அடியோடு நிறுத்த வேண்டும் என்ற அரசின் இலக்கை எட்டுவதற்கு டிஜிட்டல் இந்தியா திட்டம் அதிக கவனம் செலுத்துகிறது. இதன் மூலம் இந்தியாவின் உற்பத்தித்திறன் அதிகரித்து, இந்தியா ஒரு உற்பத்தி மையமாக மாறும். இத்திட்டத்தின் ஓர் அங்கமாக அடுத்த 5 ஆண்டுகளுக்கு சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக்கான தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் தகவல் தொழில்நுட்பத்தை கையாளக்கூடிய தொழிலாளர்களை உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்தும்.

## கல்வி மற்றும் திறன் உருவாக்கம்

நமது கல்வி அமைப்பில் மிகப்பெரிய அளவில் கற்றல் குறைபாடுகளும், தரம் சார்ந்த பிரச்சினைகளும் உள்ளன. பள்ளிப் படிப்பின் தரம் குறைவாக இருப்பது, அதிக கல்வி கற்ற பணியாளர்கள் வேலைவாய்ப்பு பெறும் திறன் இல்லாமல் இருப்பது, தொழிற்பயிற்சி குறைபாடு இருப்பது ஆகியவை இந்திய கல்வி முறையின் குறைபாடுகளாகும். இத்தகைய சூழலில் இந்தியாவின் கல்வி அமைப்புக்கு புத்துயிர் அளிக்க டிஜிட்டல் மயமாக்கம் ஏராளமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. புதுமையான டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் காரணமாக, எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய கல்விமுறை உருவாகியிருக்கிறது. பயிற்சி வழங்குபவர்கள் மற்றும் வழிகாட்டிகளை எளிதில் அணுகுவது, உடனடியாக பயனுள்ள தகவல்களை வழங்குவது ஆகிய வாய்ப்புகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் சாதகமான சூழலை உருவாக்குவதன் மூலம், இந்திய கல்வி முறையில் மிகவும் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்த டிஜிட்டல் இந்தியா திட்டத்தால் முடியும். முறையான சிந்தனை மற்றும் செயல்பாடுகளின் மூலம், மாணவர்களின் கற்றல்திறனை மேம்படுத்துதல், ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் திறனை மேம்படுத்துதல், சிறப்பான நிர்வாகம் அளித்தல் ஆகியவற்றுக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். இந்தத் தொழில்நுட்பத்தை நமது பறந்துபட்ட, ஒன்றுடன் ஒன்று இணைந்த கல்வி முறை மற்றும் உயர்கல்வி கட்டமைப்புடன் இணைப்பதற்கு, ஒருங்கிணைந்த மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அணுகுமுறை தேவை. இத்தகைய அணுகுமுறையை 3 தூண்களின் மீது கட்டியெழுப்ப வேண்டும். அந்த 3 தூண்கள் குறித்து பின்வரும் பத்திகளில் பார்ப்போம்.

முதலாவது தூண் மிகவும் முக்கியமானது ஆகும். ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட முறையில் கற்பதற்கு வசதியாக கற்பித்தல் கருவிகளை உருவாக்குவதுதான் முதல் தூண் ஆகும். டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பாடநூல்கள், அனிமேஷன்கள், வீடியோக்கள் ஆகியவற்றை உருவாக்குவது இதன் ஓர் அங்கமாக அமையும். மாணவர்கள் தனிப்பட்ட முறையில் கல்வி கற்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கும், கல்வி கற்பதை உரையாடும் தன்மை கொண்டதாக மாற்றுவதற்கும், பொழுது போக்காக மாற்றுவதற்கும் புதிய தொழில்நுட்பம் பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம் மாணவர்கள் ஏராளமான முறை பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். இந்தியாவில் பல்வேறு மொழிகள் இருப்பதாலும், பல்வேறு வகையான பாடத்திட்டங்கள் இருப்பதாலும் ஏற்படும் சிக்கல்களைப் போக்கும் வகையிலான கற்றல் கருவிகளை உருவாக்க இது உதவும்.

2-வது தூண் என்பது திறன் சார்ந்த ஆசிரியர் பயிற்சிக்கான தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்கு வதற்கான அணுகுமுறையாகும். தொழில்நுட்பத் துடன் இணைந்த ஆசிரியர் பயிற்சி முறைகளை உருவாக்குவதன் மூலம், ஆசிரியர் பயிற்சிக் கல்வியில் புதிய மாதிரிகளை உருவாக்க தொழில்நுட்பம் உதவி செய்கிறது. இதன் மூலம், ஆசிரியர்கள் தங்களது சக ஆசிரியர்களுடன் தொடர்புகொள்ளவும், வல்லுநர்களிடமிருந்து போதனைகளைப் பெறவும் முடியும். குஜராத்,

உத்தரகாண்ட், மராட்டியம் போன்ற மாநிலங்களில் வாட்ஸ் ஆப் குரூப் போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆசிரியர்கள் தங்களுக்கிடையே அறிவு சார்ந்த தகவல்களை பரிமாறிக்கொள்கிறார்கள். கர்நாடக மாநில திறந்தநிலை கல்வி ஆதார அமைப்பு டிஜிட்டல் உள்ளடக்கத்தை உருவாக்க ஆசிரியர்களுக்கு உதவுகிறது. பயிற்றுவிக்கும் வீடியோக்கள், ஆன்லைன் பயிற்றுவித்தல் என ஏராளமான தொழில்நுட்ப வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. பெருமளவிலான திறந்தநிலை ஆன்லைன் படிப்புகளை மற்ற கல்வி முறைகளுடன் இணைப்பதன் மூலம், உயர்தர பாடல்களை மாணவர்களுக்கு வழங்க முடியும். அதுமட்டுமின்றி, நர்சிங் மற்றும் பிற படிப்புகளுக்கு சிறந்த முறையில் பயிற்சி வழங்க முடியும்.

3–வது தூண் என்பது, வலுவான நிர்வாகத்திற்கு தகவல்களை திரட்டுதல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது ஆகும். வலிமையான தகவல் மேலாண்மை அமைப்புகளின் உதவியுடன் அனைத்துக் கல்வி நிறுவனங்களும் மாணவர்கள் நிலையிலான செயல்பாடுகளை பதிவு செய்து, பராமரித்து, கண்காணித்து பகுப்பாய்வு செய்ய முடியும். இதை வகுப்பு சார்ந்த இலக்குகளுக்காகவும், கல்வி நிறுவனம் சார்ந்த இலக்குகளுக்காகவும் பயன்படுத்திக்கொள்ள முடியும். கேரளா, மராட்டியம், குஜராத், ஒதிஷா ஆகிய மாநிலங்களின் அரசுகள் இத்தகைய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றன.

### சுகாதார கவனிப்பு சேவைகளை வழங்குதல்

சர்வதேச தர நிர்ணயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய மக்கள் தொகைக்கு எவ்வளவு மருத்துவர்களும், செவிலியர்களும், சுகாதார சேவை மையங்களும் தேவையோ, அதில் பாதியளவுக்கு மட்டும்தான் நமது நாட்டில் உள்ளன. இருக்கும் மருத்துவ சேவை அமைப்புகளும், சிறப்பான சேவை வழங்குவதற்கு தயார்நிலையில் இல்லை. பொது சுகாதார சேவைகளை வழங்குதல், தொலைதூர சுகாதார சேவைகளின் மூலம் மருத்துவ ஆலோசனை வழங்குதல், டிஜிட்டல் கருவிகளின் மூலம் ஓரளவு மருத்துவ முறை தெரிந்தவர்களைக் கொண்டு, அடிப்படையான மருத்துவ கவனிப்புகளை செய்ய வைத்தல், ஸ்மார்ட் ஃபோன்களுடன் இணைக்கப்பட்ட குறைந்த செலவிலான நோய் கண்டறியும் கருவிகளை உருவாக்குதல் போன்றவற்றை தொழில்நுட்பத்தின் உதவியுடன் சாத்தியமாக்க முடியும். உதாரணமாக, ஒரு ஸ்மார்ட் ஃபோனை கண் சோதனை செய்யும் கருவியாக மாற்ற முடியும். நெட்ராஜி எனப்படும் கண் பரிசோதனைக் கருவியை பொருத்துவதன் மூலம் கண் பரிசோதனையை 300 ரூபாய்க்கும் குறைவான செலவில் செய்ய முடியும். அவ்வாறு சோதனை செய்யப்பட்டவருக்கு கண்ணாடி அணிவதைத் தவிர, வேறு கவனிப்புகள் ஏதேனும் தேவைப்பட்டால் அவரது கண் ஆய்வு குறித்த தகவல்களை இணையத்தின் உதவியுடன் வல்லுநர்களுக்கு அனுப்பி, அவர்களின் ஆலோசனைகளைப் பெற முடியும். ஆனால், டிஜிட்டல் மூலம் இணைக்கப்பட்ட சமுதாயத்தில் மட்டும்தான் இது சாத்தியமாகும். மின்னணு மயமாக்கல் என்பது, சுகாதார சேவை வழங்கல், அதன் தரம், பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். தரமான பாதுகாப்பான அளவீடுகளை மேற்கொள்ளவும் டிஜிட்டல் தொழில்நுட்பம் உதவி செய்கிறது.

### மின் நிர்வாகம்

இவ்வாறாக, டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் நோக்கம் என்பது இந்தியாவை டிஜிட்டல் ஆளுமை பெற்ற சமூகமாக மாற்றுவதும், அறிவு சார் எதிர்காலத்திற்கு தயார்படுத்துவதும் ஆகும். அனைத்து மின் நிர்வாகம் மற்றும் மத்திய அரசின் தொலைத்தொடர்பு இணைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை தீவிரமாக செயல்படுத்துவதுதான் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் நோக்கமாக தெரிகிறது. உதாரணமாக, இரண்டரை லட்சம் கிராம பஞ்சாயத்துக்களை கண்ணாடி இழை மூலம் இணைத்து அகண்ட அலைவரிசை சேவை வழங்கும் திட்டம், பி.எஸ்.என்.எல் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படவிருந்தது. ஆனால், தற்போது அத்திட்டம் பாரத் நெட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. மக்களை இணைக்கும் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள சிவப்பு நாடா முறைகளை அகற்றுதல், இடைத்தரகர்களை

நீக்குதல், ஊழலை ஒழித்தல் ஆகியவற்றின் மூலம் மக்களையும், அரசையும் நெருங்கச் செய்வதுதான் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

உலகின் மற்ற நாடுகளைப் போலவே, அரச நிர்வாகத்தை சிறப்பானதாக மாற்றுதல், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுதல் உள்ளிட்ட சவால்களை சமாளிக்க திணறிக்கொண்டிருக்கிறது. எங்களது மதிப்பீடுகளின் அடிப்படையில் பார்க்கும்போது, அடிப்படை சேவைகளுக்காக அரசால் செலவிடப்படும் நிதியில் பாதிக்கும் மேல் மக்களுக்கான பயனாக சென்றடைவதில்லை. அதுமட்டுமின்றி, இந்திய அரசிடம் அனுமதி, உரிமம் போன்றவற்றை வாங்குவதற்கான நடைமுறை மிகவும் கடினமானதாக இருப்பது இந்தியாவின் முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது.

## நிறைவுரை

இந்தியாவில் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதில் நவீன தொழில்நுட்பங்களின் பங்கு என்ன? என்பதை ஆய்வு செய்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும். நாட்டின் வளர்ச்சியில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கு குறித்து ஆய்வு செய்ததுடன், டிஜிட்டல் இந்தியா திட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது குறித்தும் விளக்கியிருந்தேன். வேளாண்மை, உற்பத்தி, கல்வி, சுகாதார கவனிப்பு, அரசு சேவைகள் ஆகிய 5 துறைகளில் புதிய டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தும்போது இந்த துறைகள் மிகப்பெரிய வளர்ச்சி அடையும் என்பது உறுதி. இத்துறைகளில் காணப்படும் திறமையின்மையையும், குறைகளையும் இந்த தொழில்நுட்பங்களின் மூலம் போக்க முடியும். இந்த தொழில்நுட்பங்கள் இந்திய வேளாண்துறையை மாற்றுவதுடன் கிராமப்பகுதிகளில் வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும். அதேபோல், உற்பத்தித் துறை போட்டிகளை சமாளிக்கும் திறன் கொண்டதாக மாற்றப்படுவதுடன், அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகவும் மாற்றியமைக்கப்படும். கல்வித்துறையில் தரம் மற்றும் கற்றலில் உள்ள பிரச்சினைகளுக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் தீர்வு காணும். டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சுகாதார சேவைகள் அனைத்தும் நாட்டின் தொலைதூரப்பகுதிகளில் கூட குறைந்த செலவில் கிடைக்க வகைசெய்யப்படும். அரசு சேவைகளும் மேம்படுத்தப்படும். சுருக்கமாக கூற வேண்டுமானால், கணிசமான பொருளாதார முன்னேற்றம், நிலையான அரச நிர்வாகம், உள்ளடக்கிய மற்றும் எளிதில் கிடைக்கக்கூடிய சுகாதார சேவை, கல்வி மற்றும் குடிமக்கள் சேவை ஆகியவற்றுடன் இணைந்த உள்ளடக்கிய வளர்ச்சியை எட்ட தொழில்நுட்பம் உதவி செய்யும்.

புதிய நவீன தொழில்நுட்பங்களின் முழு பயனையும் அடையவேண்டும் என்றால், அதற்காக டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்வதில் உள்ள தடைகளை அகற்றுதல், தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் தொழில்நுட்பங்களின் தீய விளைவுகளை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் தேவையான தரம் மற்றும் ஒழுங்குமுறைகளை உருவாக்குதல் ஆகியவை மிகவும் அவசியமாகும். அதுமட்டுமின்றி, புதுமைகளை படைப்பதற்கான சூழல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதும் மிகவும் அவசியமாகும். இந்தியா பல்வேறு மொழிகளை பேசும் நாடு என்பதால், தகவல்கள் மற்றும் வாய்ப்புகளை மக்களிடம் கொண்டு செல்ல பல மொழித்திறனை உருவாக்குவதும் அவசியம் ஆகும். சிறப்பான பொதுவினியோகத் திட்டத்தை உருவாக்குதல், பணிகளை தானியங்கி முறைக்கு மாற்றுதல், ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்க்கை நிலையை மாற்றுதல், சிறப்பான சுகாதாரச் சேவையை வழங்குதல் என அனைத்துப் பணிகளையும் எளிமையாக்குவதற்காக இவற்றின் பாரம்பரிய அமைப்புகளை நவீன முறைகளுடன் இணைக்க வேண்டியதும் அவசியம் ஆகும். மேலைநாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டதால் அந்த நாடுகளின் உற்பத்தித் திறனும் வேலைவாய்ப்பும் அதிகரித்துள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் உதவியுடன், மத்திய காலத்தில் இந்தியாவும் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும். இதற்காக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் பொறுப்புடன் கூடிய சிறப்பு கவனத்தை செலுத்துவதுதான். ●

# எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு உதவியாக விவசாயம்

– புவன் பாஸ்கர்

விவசாயம் சார்ந்த ஒரு சமுதாயத்தில் அதை மையப்படுத்தாத எந்த ஒரு வளர்ச்சி திட்டமும் வெற்றி பெறாது என்பது எல்லோரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம் நாம் உலகத்திலேயே அதிகமாக உணவு பொருட்களை பயன்படுத்தும் நாடு, ஆகவே நம்முடைய உணவு பாதுகாப்புக்கு விவசாயம் இன்றியமையாதது என்பது மட்டுமல்ல; நம்முடைய மொத்த ஜனத்தொகையில் பாதிக்கும் அதிகமானவர்களின் சமுதாய, பொருளாதார, ஏன் கலாச்சாரம்கூட விவசாயத்தை சார்ந்தே உள்ளது. இப்படி உள்ள நிலையில் இந்தியாவின் விவசாயத்துறை பரிதாபத்துக்குரிய அளவில் எப்படி சரிந்து கிடக்கிறது என்பதை நம்பவே முடியவில்லை. நாடு சுதந்திரம் பெற்ற உடனேயே இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு “நான் தொழிற்துறையை நிச்சயமாக வரவேற்கிறேன், எஃகு தொழிற்சாலை, பிற தொழில்கள், ஆனால் அதை விட அவசியமானது விவசாயம்” என்று கூறினார்.

இது ஒரு சாதாரணமான வாக்கியமல்ல. இதுவே கடந்த எழுபது ஆண்டுகளில் இந்திய விவசாயத்துறையின் முன்னுரையாக இருந்துள்ளது. அடுத்தடுத்த அரசுகள் விவசாயத்தின் அவசியத்தைப் பற்றி பறை சாற்றினாலும், கொள்கைகளை வகுக்கும் போது விவசாயத்தைத் தள்ளாடும் வகையில் வைத்துவிட்டன. தொழிற்சாலைகள் இந்தியாவின் கோயில்கள் என்று நேரு கூறியதை அடுத்து இந்திய விவசாயத்தின் விதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. ஏளனத்திற்கும், ஆதரவற்ற நிலைமைக்கும் தள்ளப்பட்டது.

இப்படி விவசாயத்திற்கு மதிப்பு அளிக்காததால் இரண்டு வகையான விளைவுகள் ஏற்பட்டன. முதலாவதாக விவசாய உற்பத்தி திறன் குறைந்து மாற்றுப் பயிர்கள் விவசாயம் செய்வது நலிந்தது. இரண்டாவதாக இந்திய மக்களில் மூன்றுக்கு இரண்டு பங்கு மக்கள் சமுதாய பொருளாதார நிலையில் பின் தங்கிவிட்டனர். இதற்கு காரணம் விவசாயம்தான் அவர்களின் ஒரே வாழ்வாதாரம். ஆகவே, விவசாயம் சார்ந்த உள் கட்டமைப்பு வசதிகளான நீர்ப்பாசனம், அறுவடைக்குப் பிறகு தேவையான சேவைகள், ஆய்வு மையங்கள், கடன் வசதிகள், நிதி சார்ந்த சேவைகள் ஆகியவை போதிய அளவில் இல்லாத காரணத்தினால் அவர்களின் வருவாய் பாதிக்கப்பட்டதோடு நகர்ப்புற, கிராமப்புற இடைவெளி மிகவும் பெருகியது.

1960களின் ஆரம்பத்தில் இந்தியாவில் உணவு பஞ்சம் ஏற்பட்டபோது அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பசுமை புரட்சி ஏற்படுத்தி வெற்றி கண்டார். இதைப் பயன்படுத்தி இந்தியாவின் பல அடிப்படை பயிர்கள் உற்பத்தியில் முன்னேற்றமும் பல வகையான உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவும் ஏற்பட்டது. ஆனாலும், இந்த புரட்சி ஒரு குறிப்பிட்ட நிலைகளில் மட்டும் காணப்பட்டது. அதன் முக்கிய தத்துவமாக இருந்தது பரப்பளவையும் உற்பத்தி திறனையும் பெருக்குவது. எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காகவும், சமுதாய மாற்றத்திற்காகவும் இது உருவாக்கப்படவில்லை. இதனால் விவசாய நிலங்களில் மிக அதிகப்படியான உரம், பூச்சிக் கொல்லிகள் மற்றும் இதர இரசாயன பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இதனால் நிலத்தின் உற்பத்தித் திறன் அதிகரித்தாலும் கூடவே விவசாயத்தின் செலவும் கூடியது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இரசாயன பொருட்களின் பயன்பாடு அதிகரிக்கப்பட்டு, பசுமைப் புரட்சியில் மிகவும் பயனடைந்த பஞ்சாபில் தற்போது உற்பத்தித் திறன் மிகக் குறைந்தும் விவசாய செலவு மிக அதிகமாக உயர்ந்தும், விவசாய நிலங்களில் நச்சுத்தன்மை மிக அதிகமாகவும் காணப்படுகிறது. 2003ல் அப்போதைய அட்டல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முதன்முதலாக அறுவடைக்குப் பிறகு உள்ள தேவையான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு விவசாய பொருட்கள் உற்பத்தி சந்தை குழுக்கள் சட்டத்தை இயற்றியது. ஆனால், நாளடைவில் இந்த குழுக்கள் உள்ளூர் அரசியல்வாதிகளின் கட்டுக்குள் வந்து விவசாயிகளுக்கு அதிகபட்ச விலைகள் கிடைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டது.

**ஆசிரியர் நிதி மற்றும் வளர்ச்சிசார் பத்திரிகையாளர். அவர் CNBC ஆவாஸ், சி பிசினஸ், எக்னாமிக் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார். இப்போது NCDeXல் பணியாற்றுகிறார்.**

தற்போது, இந்த சட்டத்தைப் பற்றிய புது விவாதம் துவங்கி ஏற்கனவே நிதி அமைச்சகம் இந்த குழுக்களிடமிருந்து பழங்களுக்கும், காய்கறிகளுக்கும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியும், சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்துகின்ற வகையில் மற்றொரு முக்கிய கொள்கை முடிவாக இதுவரை வெற்றி பெறாத விவசாய காப்பீடு திட்டத்தில் புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது முதல்முறையாக இந்திய விவசாயத் துறை சரித்திரத்தில் மத்திய அரசு விவசாயத்தை மக்களுக்கு உணவு அளிக்கும் ஒரு துறையாக மட்டும் கருதாமல் நாடெங்கிலும் சமுதாய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு முக்கிய காரணியாக கருதுகிறது. இதனை உறுதி படுத்தும் அரசு பல வளர்ச்சி திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் இந்திய விவசாயத்தின் ஆணி வேரை பலப்படுத்தி, விவசாயம் சார்ந்த மக்களின் வாழ்வை உயர்த்தமுடியும். இந்த திட்டங்களை இப்போது பார்ப்போம்.

***1. தேசிய விவசாய சந்தை :*** மத்திய அரசின் இந்த புதிய திட்டத்தின்படி அறுவடைக்குப் பின்னான விவசாய பொருட்களின் மேலாண்மை பெருமளவில் வளப்பட வாய்ப்புள்ளது. ஜூலை 2, 2012ல் மத்திய அரசின் பொருளாதார குழு ஒப்புதல் அளித்த ஒரு மத்திய திட்டத்தின்படி விவசாயத்துறையில் தொழில்நுட்ப உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள 585 மொத்த வணிக சந்தைகளை கணிணி வலைதளத்தின் மூலம் இணைப்பதற்காக 2015–16லிருந்து 2017–18 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. “இனிமேல் ஒட்டு மொத்த மாநிலத்திற்கும் ஒரே ஒரு அனுமதிதான் இருக்கும், ஒரு முனை வரிவிதிப்புத்தான் இருக்கும். விவசாய பொருட்களின் உண்மை விலையை கண்டறிய கணிணிசார் ஏலங்கள் நடைபெறும். இதனால் ஒட்டு மொத்த மாநிலமும் ஒரே ஒரு சந்தையாக அமைந்து சிறு சிறு சந்தைகள் ஒழிக்கப்பட்டு விடும்.” என்று மந்திரி சபை கூட்டத்திற்குப்பின் நிதியமைச்சர் அருண் ஜெட்லி கூறினார். இந்த திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு இருநூற்று ஐம்பது சந்தைகளையும், 2016–17ல் 200 சந்தைகளையும், 2017–18ல் மேலும் 135 சந்தைகளையும் கணிணி வலைதளத்தின் மூலம் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் முழுமையாக செயல்படும்போது மாநிலமெங்கும் வியாபாரம் மிக எளிதாகி விடும். ஒரு விவசாயி மாநிலத்தின் எங்குள்ளவருக்கும் விற்கலாம், எங்கிருந்தும் இடு பொருள்களை வாங்கலாம். இந்த பொதுவான கணிணிசார் வணிகம் மூலம் நாடெங்கிலும் உள்ள சந்தைகள் இணைக்கப்பட்டு விவசாயிகளுக்கு, அவர்களுடைய பொருட்களுக்கு நல்ல விலையும் கிடைத்து, பொருள்கள் விநியோகம் தாராளமயமாக்கப்பட்டும், பொருள்கள் வீணாவது குறைக்கப்பட்டும் பல நன்மைகள் ஏற்படும் என்று அரசு கூறுகிறது.

இந்த வலைதள வியாபாரத்தின் மூலம் இடைத்தரகர்கள் விலக்கப்படுவார்கள். கர்நாடக மாநிலத்தில், மாநில அரசும், நெம்மல் என்ற வலைதள வியாபார நிறுவனமும் இணைந்து செயல்படுத்தும் தேசிய வலைதள வியாபார சேவைகள் நிறுவனம் அமைக்கப்பட்டு ஒரே அனுமதி மூலம் மொத்தமுள்ள 155 பெரிய சந்தைகளில் 55 ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தை மத்திய அரசின் முன் மாதிரி திட்டமாக 2014–15ன் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வேளாண் துறை அமைச்சர் ராதா மோகன்சிங் 23 மாநிலங்களின் வேளாண் அமைச்சர்களைக் கூட்டி கர்நாடக திட்டத்தை விளக்கியுள்ளார்.

**2. மண்வள திட்டம் :** தான் முதலமைச்சராக குஜராத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தியதை அடுத்து இந்த திட்டத்தை நரேந்திர மோடி மக்களவை தேர்தலில் ஒரு முக்கிய கொள்கையாக அறிவித்தார். அவர் வெற்றி பெற்று பிரதமரானபின் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் பட்ஜெட்டில் இது பிரதிபலித்தது. நிதியமைச்சர் அருண் ஜெட்லி இந்த திட்டத்திற்கு 155 கோடி ஒதுக்கி அதில் ரூபாய் 56 கோடி செலவில் நாடெங்கிலும் 100 நடமாடும் மண்வள சோதனை கூடங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி 19ஆம் தேதி ராஜஸ்தான் மாநிலம் சூரத்கட்டில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி மண்வள அட்டை என்ற திட்டத்தை நாடெங்கிலும் அறிமுகப்படுத்தினார். விவசாயத்தை மக்களின் வறுமையைப் போக்கும் ஒரு கருவியாக கருதுகிறது என்று பிரதமர் கூறினார். இந்த திட்டம் வலுவூட்டப்பட்டு இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூபாய் 200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 28ஆம் தேதி வேளாண் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் 2015–16ஆம் ஆண்டில் நாடெங்கிலும் 2.53 கோடி மண்வள மாதிரிகள் சேகரிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்காகும் செலவில் 50 சதவிகிதத்தை மாநில அரசுகள் ஏற்றுக்

கொள்ள வேண்டும். ரூபாய் 192 கோடி செலவிலான இந்த திட்டத்தில் மண் சோதனை மாதிரிகள், அவைகளின் ஆய்வு, இரசாயன வல்லுனர்களின் பயிற்சி, பணியாளர்களின் செலவு, தேவையான கருவிகள் ஆகியவை அடங்கும். இதில் 96 கோடி ரூபாயை மத்திய அரசு ஏற்கும். நாட்டிலுள்ள 14.5 கோடி விவசாயிகளுக்கும் மூன்று ஆண்டுகளுக்குள் இந்த மண்வள அட்டையை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த மண் வள அட்டை திட்டம் நாட்டின் சில பகுதிகளில் ஏற்கனவே செயல்பட்டாலும்; இது ஒரு தேசிய திட்டமாக முன்பு மேற்கொள்ளப்பட வில்லை. விவசாயத்துறையை தொடாந்து முன்னேற்ற இது ஒரு சிறந்த திட்டமாகும். இந்த திட்டத்தின் படி ஒரு விவசாயியின் நிலத்தில் மண் எடுக்கப்பட்டு ஆய்வுகூடத்தில் பரிசோதிக்கப்படும். பரிசோதிக்கபட்ட மண்ணில் உள்ள உட்பொருட்களும், குறைகளும் இந்த அட்டையில் பதிவு செய்யப்படும். இதன் அடிப்படையில் ஒரு விவசாயி கண்மூடித்தனமாக செயற்கை உரங்களை பயன்படுத்துவதற்கு பதிலாக தேவையான உரங்களை மட்டும் பயன்படுத்தலாம். இதனால், செலவு குறைவதோடு, மண் வளமும் பாதுகாக்கப்படும். இதன் அடிப்படையில் மண் வளத்திற்கு ஏற்ற பயிரையும் தேர்ந்தெடுக்கமுடியும்.

**3. பிரதம மந்திரியின் விவசாய பாசன திட்டம் :** ஒவ்வொரு விவசாயியின் நிலத்திற்கும் நீர் வசதி ஏற்படுத்தவும், அந்த நீரை பயனுள்ள வகையில் பயன்படுத்தவும் 2015–16 பட்ஜெட்டில் ரூ.5300 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி குறு நீர் பாசனம், நீர் சேமிப்பு மேம்பாடு, பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டம் ஆகியவை பயன்பெறும். கடந்த ஆண்டு இப்படிப்பட்ட நீர்ப்பாசன, நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ.5623 கோடி ஒதுக்கப்பட்டது. பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டம் பிஜேபி கட்சியின் தேர்தல் வாக்குறுதியாகும். இந்த திட்டத்திற்கு நிதியமைச்சர் 2014–15க்கான தனது முதல் பட்ஜெட்டில் ரூ.1000 கோடி ஒதுக்கினார். ஆனாலும் திட்டம் துவங்கவில்லை. ஜூலை இரண்டாம் தேதி பிரதம மந்திரி நரேந்திர மோடி தலைமையில் கூடிய அமைச்சரவை 2015–16 முதல் 2019–20 வரையிலான அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.50,000 கோடி ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்தது.

உணவு தானியங்கள் உற்பத்திக்கான நீர்ப்பாசனம் பெற்ற நிலங்கள் மொத்தம் 56 சதவிகிதம் உள்ளன, ஆனால், உண்மையில் 40.5 சதவிகிதம்தான் நீர்ப்பாசனம் பெறுகிறது என்ற உண்மையை பார்க்கும்போது இந்த திட்டத்தின் மகத்துவம் புரிகிறது. நீர்ப்பாசன வசதியின் மகத்துவம் தெரிந்திருந்தும் அடுத்தடுத்து வந்த அரசுகள் அது பற்றி கவலைப்படவில்லை. (கீழே அட்டவணையைப் பார்க்கவும்). இதன் காரணமாக 2000–2001 முதல் 2011–2012 வரையிலான கால கட்டத்தில் நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்களின் அளவு 5.8 சதவிகிதம்தான் உயர்ந்தது. அரசு தகவல்களின்படி, பயிரிடப்பட்ட நிலங்களில் நீர்ப்பாசன வசதி 40.5 சதவிகிதத்திலிருந்து 40.34 சதவிகிதம் தான் இந்த கால கட்டத்தில் உயர்ந்தது.

| திட்டத்தின் பெயர் | காலம் | மாநிலங்களின் மொத்த திட்டங்களில் நீர்பாசனத்தின் பங்கு |
|---|---|---|
| ஐந்தாவது திட்டம் | 1974–78 | 23.25% |
| ஆறாவது திட்டம் | 1980–85 | 20.85% |
| ஏழாவது திட்டம் | 1985–90 | 11.85% |
| எட்டாவது திட்டம் | 1992–97 | 18.48% |
| ஒன்பதாவது திட்டம் | 1997–2002 | 14.93% |

(ஆதாரம் : திட்ட கமிஷன்).

“பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசன திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன: நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்த முதலீடுகளை ஒருங்கிணைத்தல், நீர்ப்பாசன ஆதாரம் உள்ள பகுதியில் பயிரிடப்படும் நிலங்களின் அளவை அதிகரித்தல். (ஒவ்வொரு நிலத்திற்கும் தண்ணீர்), தண்ணீர் வீணாவதை தடுக்க சிறப்பான பயிர்ப்பாசன திட்டங்கள், நீர் சேமிப்பு மற்றும் குறைந்த அளவு நீர் சார்ந்த விவசாயம் ஆகியவற்றைப் போற்றுதல் (ஒவ்வொரு சொட்டுக்கும் அதிக விளைச்சல்) நிலத்தடி நீர் சேமிப்பு, பயன்படுத்தப்பட்ட கழிவு நீரை சுத்திகரித்து விவசாயத்துக்குப் பயன்படுத்துதல் மற்றும் குறிப்பிட்ட நீர்ப்பாசன திட்டங்களுக்கு தனியார் முதலீடுகளை ஈர்த்தல்,” என்று அமைச்சரவை அறிக்கை கூறியது. இதன்படி மூன்று வகையான நீர்ப்பாசன திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பகுதி சார்ந்த திட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்படி நீர்வளம், பயன்பாடு சம்மந்தப்பட்ட அனைத்து அமைச்சகங்களும், துறைகளும், நிறுவனங்களும், நிதி நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு வீடுகளுக்கு, விவசாயத்திற்கு மற்றும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய தண்ணீர் சார்ந்த மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று

வேளாண்துறை அமைச்சர் ராதா கோகன் சிங் அமைச்சரவை ஒப்புதலுக்குப் பின் தெரிவித்தார். இந்த திட்டத்தின்படி தொடர்ந்து நீர் சேமிப்பும், நீர் பாசனமும் கிடைக்கப்பெற்று சமூக முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பிரதம மந்திரி விவசாய நீர்ப்பாசன திட்டம் அல்லாமல் அடுத்து மூன்று ஆண்டுகளில் விவசாயிகள் தங்களுடைய நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்திக் கொள்ள நபார்டு வங்கி ரூ. 30,000 கோடி கடன் வழங்குகிறது. இந்த ஆண்டு இது வரை ரூ.1000 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4. விலை உறுதிப்பாடு நிதியம்:** வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகளில் ஏற்படும் பெருமளவிலான மாற்றங்களால் விவசாயிகள் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த காய்கறிகள் விரைவில் அழுகும் தன்மை கொண்டதால் சரியான கிடங்குகள் இல்லாத நிலையில் இடைத் தரகர்கள் அவற்றின் விலைகளை பெருமளவு உயர்த்த வாய்ப்புள்ளது. ஒருபுறம் விவசாயிகள் தங்களுடைய காய்கறிகளை குறைந்த விலையில் விற்க வேண்டிய கட்டாயத்திலும், இடைத் தரகர்கள் அபரிமிதமான லாபத்தைப் பெறும் நிலையில் உள்ளது. இந்த சூழ்நிலையைத் தடுக்க மோடி அரசு ரூ.500 கோடி முதலீட்டில் விலை உறுதிப்பாடு நிதியம் ஒன்றை அமைத்துள்ளது. இந்த நிதியத்தின் கீழ் பிற விவசாய பொருட்களும், பூக்களும் பயன்பெறும். அரசின் கூற்றின்படி இந்த பொருட்கள் விவசாயிகளின் நிலத்திலிருந்து நேரடியாகவோ, விவசாயிகள் அமைப்பின் மூலமாகவோ பெறப்பட்டு நுகர் வோருக்கு அடக்கமான விலையில் வழங் கப்படும்.

வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சிறு விவசாயிகளுக்கான வேளாண் வணிக குழுமமும் இதே கொள்கையைக் கொண்டுள்ளது. விவசாயிகள், உற்பத்தியாளர்கள் அமைப்புகள் நாடெங்கிலும் உருவாக்கும் வண்ணம் 2014ல் தில்லி விவசாய மண்டி என்ற அமைப்பை துவக்கியது. இந்த திட்டத்தின்படி நுகர்வோர் விவசாயிகளிடம் நேரடி தொடர்பு கொள்வார்கள். இந்த அமைப்புகள் மூலமாக ஓராண்டிற்குள் தில்லி விவசாயிகள் மண்டி 1000 டன் காய்கறிகளை விநியோகித்துள்ளது.

**5. வேளாண் கடன் :** மத்தியில் அமைந்த அனைத்து அரசுகளுக்கும் விவசாயிகளுக்கு சுலபமான 'ரத்துக்களில் கடன் வழங்குவது என்பது மிகப்பெரிய சவாலாகவே விளங்கி வந்துள்ளது. தனியாரிடமிருந்து கடன் பெற்ற விவசாயிகள் அதை தீர்க்கமுடியாமல் தற்கொலை செய்து கொண்டதை நாம் அறிவோம். இந்த கடுமையான உண்மையை கவனத்தில் கொண்டு விவசாயக் கடன்களுக்கான அளவை மேலும் ரூ.50,000 கோடி வரை கூட்டி மொத்தம் 8.5லட்சம் கோடியாக உயர்த்தியுள்ளது.

**6. வேளாண் தொலைக்காட்சி துவக்கம்:** விவசாயம் சார்ந்த புதிய வாய்ப்புக்கள், தகவல்கள் மற்றும் வானிலை போன்ற தகவல்களை அளிப்பதற்காக தேசிய ஜனநாயக கூட்டணி அரசு விவசாயிகளுக்காக தனியாக ஒரு தொலைக்காட்சி அமைப்பை உருவாக்கியுள்ளது. இது ஒரு நல்ல முயற்சி. சரியாக செயல்பட்டால் ஒரு பெரிய தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

**7. பயிர் காப்பீடு :** அரசு ஒரு புதிய விவசாய காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த உள்ளது என்று ஜூலை 12, 2015ல் நிதி அமைச்சர் கூறினார். அது விவசாயி பயிர் செய்ய பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களையும், கடன்களையும் உள்ளடக்கும். ஏற்கனவே உள்ள விவசாயம்சார் காப் பீட்டு திட்டங்களை ஒப்பிடும் போது இது அரசுக்கு ஒரு பெரிய சவாலை ஏற்படுத்தும் என்று கொள்ளலாம். விவசாயிகளுக்கு உறுதிகூறும் வகையில் இந்த காப்பீட்டு திட்டத்தை விளக்கிய திரு. ஜெட்லி, இது செயல்படுத்தப்படக்கூடிய காப்பீட்டு திட்டம்தான். இதில் விவசாயி குறைந்தபட்சம் விவசாய இடுபெருள்களுக்கு தான் செலவிட்ட பணத்தையாவது, அசாதாரண நிகழ்வுகளின் போது பெறமுடியும் என்று கூறினார். அரசு ஒரு சிறப்பான கடன் வசதியை விவசாயிகளுக்கு அளித்தால் அதனால் கிராமப்புறங்களில் ஒரு நல்ல சமுதாய பாதுகாப்பு கிடைக்கும். ஆனால் இதுவரை துவங்கப்பட்ட இது போன்ற எல்லா திட்டங்களும் தோல்வி அடைந்து விட்டன. (அட்டவணையை பார்க்கவும்) புதிய விவசாய கடன் திட்டங்களை விளக்கிய இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுனர் திரு. H.R. கான் "நம்மிடம் தேசிய காப்பீடு உள்ளது. இப்போது நாம் வானிலை சார்ந்த காப்பீட்டிற்கு போகிறோம். தற்போது விவசாயிகளின் வருமானம்சார் காப்பீடு பற்றி பேசுகிறோம். அது ஒரு பெரிய விஷயமாக உருவாகியுள்ளது" என்றார்.

**8. கிடங்குகள் :** சீரான கிடங்குகளின் அவசியத்தை சரியாக உணர்ந்த மோடி அரசு தன்னுடைய முதல் பட்ஜெட்டில் அதற்காக ரூ.5000 கோடி ஒதுக்கியுள்ளது. சரியான கிடங்குகள் வசதியின்மையால் நாட்டில் மொத்த கோதுமை உற்பத்தியில் 22 சதவிகிதம் அதாவது 2.1 கோடி டன் அளவு ஒவ்வொரு

| திட்டத்தின் பெயர் | ஆரம்ப ஆண்டு | முடிவான ஆண்டு | முக்கிய தகவல்கள் | தோல்விக்கான காரணம் |
|---|---|---|---|---|
| முழுமையான பயிர் காப்பீட்டுத் திட்டம் | தகவல் இல்லை | 1997 | உறுதி செய்யப்பட்ட மகசூலுக்கு குறைவாக விளைச்சல் இருந்தால் விவசாயிக்கு குறைந்த மகசூல் அளவிற்கு இழப்பீடு கிடைக்கும். | இந்தியாவின் மொத்த கோரிக்கையான ரூ.1623 கோடியில் குஜராத்தில் நிலக்கடலைக்கு மட்டும் ரூ.792 கோடி கிடைத்தது. |
| பரிசோதனை பயிர் காப்பீடு | 1997–98 | 1997–98 | குறிப்பிட்ட மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பயிர்களுக்கான சிறு, நடுத்தர விவசாயிகளுக்கான திட்டம். செலுத்தும் சந்தா தொகைக்கு மானியம் உண்டு. | வாங்கப்பட்ட சந்தாத் தொகை ரூ.3கோடி வழங்கப்பட்ட இழப்பீடு ரூ.40 கோடி |
| விவசாய வருவாய் காப்பீட்டு திட்டம் | 2003–04 | 2003–04 | ஒரே ஒரு காப்பீட்டு திட்டம் மூலம் குறிப்பிட்ட மகசூலும், விலையும் உறுதி செய்யப்பட்டு விவசாயிக்கு நிர்ணயிக்கப்பட்ட வருமானம் உறுதி செய்யப்படும். | அரசு மாற்றம் |
| தேசிய விவசாய காப்பீட்டு திட்டம் | 1999–2000 | நடப்பில் உள்ளது | எல்லா உணவுப் பயிர்களுக்கும் (உணவு தானியங்கள், பருப்புகள்) எண்ணெய் வித்துக்கள், பழங்கள் மற்றும் வியாபாரப் பயிர்கள். கடன் பெற்றவர்கள்/பெறாதவர்கள் என அனைத்து விவசாயிகளுக்கும் பொருந்தும். | தகவல் இல்லை. |

*ஆண்டும் வீணாகிறது என்று இந்திய இயந்திரம்சார் பெரியாளர்களின் கழகம் 2013ல் தன்னுடைய அறிக்கையில் கூறியது. பழங்கள், காய்கறிகளை எடுத்துக் கொண்டால் அது மொத்த உற்பத்தியில் 40% வீணாகிறது. ஒவ்வொரு ஆண்டும் மொத்தமாக ரூ.44,000 கோடி மதிப்பிலான உணவு தானியங்கள் வீணாகின்றன. 9.23 லட்சம் டன் கொள்ளளவு கொண்ட அறிவியல் பூர்வமான கிடங்கு களை கட்ட நாபார்டு உத்தேசித்துள்ளது. 2015–16ல் ரூ.47,756.43 கோடி கடன் வழங்கி நீர் ஆதாரங்கள், நில மேம்பாடு, விவசாயத்தில் இயந்திரங்களை பயன்படுத்துதல், பால்வளம், பறவைகள் வளம், மின்வளம், கிடங்குகள் மற்றும் சந்தை உள் கட்டமைப்புகளை உருவாக்குதல், மீண்டும் உருவாகக்கூடிய எரிசக்தியை உருவாக்குதல், கழிவு மேலாண்மை ஆகியனவற்றில் வளம் சேர்க்க முடியும் என்று நாபார்டு கருதியது. 2014–15ல் வழங்கப்பட்ட ரூ.40,001 கோடியைவிட இந்த ஒதுக்கீடு 19 சதவிகிதம் அதிகமாகும். மத்திய அரசு இந்திய விவசாயத்துறையில் ஒரு பெரிய சிக்கலை அறிந்து கொண்டு அதற்கு தீர்வான கொள்கைகளை எடுக்கிறது என்பதை இது காட்டுகிறது.*

*பல ஆண்டுகளாக நாம் இழந்தவைகளை, கடந்த ஓராண்டு காலத்தில் எடுக்கப்பட்ட திட்டங்களினால் நாம் ஈடு செய்ய முடியும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது. இந்த நேரடி திட்டங்கள் அல்லாமல் அரசின் மின்சக்தி துறைசார் சீர்திருத்தங்களினாலும் கிராமப் புறங்களுக்கு அதிக பயன் கிடைக்க உள்ளது. விவசாயத்தை அதிகம் சாராமல் இருப்பது வளமையை காட்டுகிறது என்ற கூற்றை பல தேசிய மாதிரி ஆய்வுகளும், சமீபத்திய சமூக பொருளாதார மற்றும் ஜாதி வாரியான ஆய்வுகளும் மறுக்கின்றன. இந்தியாவில் தற்போது விவசாயம் ஒரு நஷ்டத் தொழிலாகவே கருதப்படுகிறது. ஆகவே இளைஞர்கள் பட்டணங்களுக்கு ஓடிச் சென்று, குடிசைப் பகுதிகளை பெருக்கி புதிய பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் வெற்றி பெற்றால் இந்த நிலைமை மாறி எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தொடர்ந்து நிலைத்து நிற்கும் என்ற கனவு நனவாகும்.* ●

# பிஎஸ்எல்வி சி.28 இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் வணிக சாதனைப் பயணம்

– மு. ஜெயசிங்

இரவு வானில் கதிரவன் திடீரென எழுந்ததுபோல் சென்னைக்கு 90 கிலோ மீட்டர் வடக்கே உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் மேகங்கள் சிவந்தன. சுற்றிலும் ஒளி வெள்ளம் சூழ்ந்தது மழைத்துளிகளை கருத்தரித்து நின்ற கார்மேகக் கூட்டத்துக்கிடையே புகையைக் கக்கியவாறு காற்றைக்கிழித்துக் கொண்டு ஜூலை 10ம் தேதி இரவு சரியாக மணி 9.58க்கு மேலெழுந்தது இந்திய விண்வெளி ஆய்வுக் கழகமான இஸ்ரோ–வின் பிஎஸ்எல்விசி–28 செலுத்து வாகனம் ஒளியைவிட ஒலியின் வேகம் குறைவுதான் என்பதை வெளிப்படுத்தும் வகையில் அது வெளிக்கிளம்பிய சில நொடிப் பொழுதுகள் கழித்து செவிகளில் மோதியது. அதன் ஓசை செலுத்து வாகனத்தின் மூக்கு நுனியில் பத்திரமாக புகலிடம் கொண்டிருந்தன பிரிட்டனின் தனியார் விண்வெளி நிறுவனங்கள் உருவாக்கிய பெரிதும் சிறிதுமான ஐந்து செயற்கைக்கோள்கள்.



ஸ்ரீஹரிகோட்டாவில் சதீஷ் தாவன் விண்வெளி மையத்திலிருந்து செலுத்து வாகங்கள் பயணிப்பது வாடிக்கைதான் என்றாலும் இம்முறை அதன் பயணத்தில் ஒரு தனி சிறப்பு இருந்தது. ஆம் இஸ்ரோ–வின் இதுவரையிலான அனுபவத்தில் மிகவும் பெரிய வணிக ரீதியிலான செயற்கைக் கோள் ஏவும் பணி இதுவே. ஏவப்பட்ட தனியார் செயற்கைக் கோள்களின் மொத்த எடை அடிப்படையிலும் இதுவே மிகப் பெரும் நடவடிக்கை.

பிஎஸ்எல்விசி–28 பிரிட்டனை சேர்ந்த 'சர்ரீ ஸ்பேஸ் டெக்னாலஜீஸ்' நிறுவனத்தின் நான்கு செயற்கைக் கோள்களையும், 'சர்ரீ ஸ்பேஸ் சென்டர்' தயாரித்த மற்றொரு செயற்கைக்கோளையும் குறித்த நேரத்தில் குறித்த உயரத்தில் சூரியநிலை ஆயத்தப் பாதையில் நிறுத்தி தனது பணியை செவ்வனே செய்து முடித்தது.

ஏவப்பட்ட முதல் நான்கு செயற்கைக் கோள்களில் மூன்று, ஒரே எடையும் ஒரேவிதமான கருகிளையும் கொண்ட டி.எம்.சி. 3 என்னும் பெயர் கொண்ட நடுத்தர எடையுடன் கூடியவையாகும். டி.எம்.சி. என்பது பேரிடர் மேலாண்மை கட்டுப்பாடு என்பதற்கான ஆங்கிலப் பெயர் சுருக்கம் என்றாலும், இவை பூமியின் எந்த ஒரு இடத்தையும் மிகச் சிறப்பாக நாள் முழுமைக்கும் படம் எடுக்கும் தன்மை பெற்றவை. இந் நிறுவனம் பூமியை படமெடுக்க இதுவரை தயாரித்துள்ள செயற்கைக் கோள்களிலேயே மிக கனமானவை இவையே. கண்ணுக்கெட்டிய உயரத்தில் வானில் அவை வட்டமடித்து வந்தாலும்கூட தரையில் ஒரு மீட்டர் இடைவெளியிலுள்ள பொருட்களை வகை பிரித்து அறியும் வகையில் தெளிவான படங்களை அவை தர வல்லவை. மேலும் வெறும் கண்களால் பார்த்தறியும் வகையிலும் அகச்சிவப்பு அலைநீளத்திலும் அவை படங்களைத் தரக்கூடியவை.

கட்டுரையாளர், சென்னை அகில இந்திய வானொலி செய்திப்பிரிவு உதவி இயக்குனர்

டி.எம்.சி.3 வானில் ஒவ்வொன்று மிடையே 120 டிகிரி கோணத்தில் 647 கிலோ மீட்டர் உயத்தில் சூரிய நிலைப் பாதையில் நிலைநிறுத்தப்படுவதால். இவ்வுயரத்தி லிருந்தபடியே பூமியை மொத்தமுள்ள 360 கோணத்திலும் முழுமையாக பார்க்க முடியும் படமெடுக்க முடியும் என்பது இவற்றின் தனிச் சிறப்பு. ஒரு சர்வதேச விளையாட்டுப் போட்டியை நடத்த ஆடுகளங்களை எவ்வாறு தயார் செய்வது என்று திட்டமிடுவதிலிருந்து, எந்த அளவுக்கு பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடுவது வரை இச் செயற்கைக் கோள்கள் உதவி செய்கின்றன. ஏன் நகரங்களில், எங்கே மக்கள் குப்பை கொட்டுகிறார்கள் என்று பார்த்து உடனடியாக பணியாளர்களை அங்கு அனுப்பி வைக்கவும் அவற்றின் படங்கள் உதவுகின்றன. புயல், நிலநடுக்கம், சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களின்போது, சேதம் எங்கே என்று உடனடியாக பார்த்து மீட்பு, நிவாரணப் பணிகளை அங்கே முடுக்கிவிடவும் அவை பெரிதும் துணை புரியும்.

பொதுவாக இது போன்ற தொலையுணர் செயற்கைக் கோள்கள் பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு முறைதான் படமெடுக்கும். ஆனால் இங்கு செயற்கைக் கோள்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படுவதால், முழு பூமியின் பகுதிகளையும் எந்நேரமும் படமெடுக்கலாம். அவை ஒவ்வொன்றின் எடை தலா 447 கிலோ கிராம் அவற்றின் வாழ்நாட்காலம் 7 ஆண்டுகள்.

சர்ரீ ஸ்பேஸ் சென்டரால் தயாரித்து அனுப்பப்பட்ட சிபிஎன்டி-1, ஒரு குறுங்கோளாகும். அதன் எடை 91 கிலோ கிராம் அது எதிர்காலத்தில் செயற்கைக் கோள்கள் பயணிப்பதில் நல்ல மாற்றங்களை கொண்டு வருவது பற்றிய சோதனைகளை செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

பிஎஸ்எல்விசி-28 அனுப்பிய டிஆர்பிட்செயில், ஒரு நானோ செயற்கைக் கோள். அதன் எடை 7 கிலோ கிராம் அது 'சர்ரீ பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான 'சர்ரீ ஸ்பேஸ் சென்டரால் உருவாக்கப்பட்டது. அதன் நோக்கமும் ஆராய்ச்சி செய்வதே. வானில் பல்வேறு நாடுகளால் பல்வேறு கால கட்டங்களில் ஏராளமான செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டு அவை காலாவதியான பின்பும் விண்வெளிக் குப்பைகளாக தொடர்ந்து சுற்றிக் கொண்டுதான் இருக்கின்றன. அவை எண்ணிக்கையில் பெருகிவிட்டால், புதிய செயற்கைக் கோள்களை செலுத்துவது சிரமமாகிவிடும். விண்வெளியிலும் கூட விபத்துக்கள் நேரிடலாம். எனவே, செயலிழந்த செயற்கைக் கோள்கள் அழிக்கப்பட்டால் அது மிகவும் நல்லது. ஆனால், காற்றில்லா வெற்றிடமான விண்வெளியில் அவற்றுக்கு அழிவு என்பது சொல்லப்போனால் கிடையாது அவை ஒரு கால கட்டத்தில் சிறிது சிறிதாக பூமியின் காற்று மண்டலத்தில் நுழைந்தால், காற்றுடன் அவை உராய்ந்து சூடாகி சாம்பலாகும் ஆனால், விரைவில் அவற்றை எப்படியாவது பூமியின் காற்று மண்டலத்துக்கு கொண்டுவர முடியுமா என்று ஆராய்வதுதான் டிஆர்பிட் செயில் செயற்கைக் கோளின் பணியாகும்.

இஸ்ரோவின் துருவநிலை செயற்கைக் கோள் செலுத்து வாகனமான பிஎஸ்எல்விக்கு இது 30வது பயணம். அதிலும் 29ஆவது தொடர் வெற்றிப் பயணம் இதன் மூலம் சர்வதேச செயற்கைக் கோள் செலுத்தும் சந்தையில் பூமிக்கு அருகிலமைந்த சுற்றுப்பாதைகளில் சுமார் ஒன்றரை டன் வரை எடை கொண்ட செயற்கைக் கோளை செலுத்த நம்பகமான வாகனம் என்ற அரும்பெயரை பிஎஸ்எல்வி பெற்றுள்ளது.

ஒரு டன் வரை எடை இருந்தால் பிஎஸ்எல்விக்கு கூடுதல் மோட்டார்கள் பொருத்த அவசியமிராது ஆனால் இம்முறை செலுத்தப்பட்ட ஐந்து செயற்கைக் கோள்களின் மொத்த எடை 1440 கிலோ கிராம் என்பதால் அதில் கூடுதல் உந்துவிசைக்காக அதிக மோட்டார்கள் பொருத்தப்பட்டிருந்தன. இவ்வாறு கூடுதல் அம்சங்களுடன் அது தனது பயணத்தை மேற்கொண்டது இது ஒன்பதாவது முறை பிஎஸ்எல்வி ஏற்கெனவே 40 வெளிநாட்டு செயற்கைக் கோள்களை ஏவி சாதனை புரிந்துள்ளது. அவற்றில் சில முழுக்க முழுக்க வணிகரீதியிலான பயணங்கள் ஆனாலும் இம்முறை ஏவப்பட்டதே அதிக எடையுடன் கூடிய மிகப் பெரும் வணிக நடவடிக்கையாகும். இது இஸ்ரோவின் மற்றொரு சாதனைப் பயணமாகும். இன்னும் பல சாதனைகளுக்காக அது காத்துக் கொண்டிருக்கிறது. ●

# அனைவரும் இணைந்த கூட்டுப் பொறுப்பால்தான் பொதுசுகாதாரம் மேம்படும்




மத்திய அரசின் களவிளம்பர இயக்குனரகத்தின் தமிழ்நாடு – புதுச்சேரி மண்டலத்தின் சார்பில் சென்னை சாஸ்திரிபவன் கருத்தரங்கக் கூட்டத்தில் 22–7–2015 அன்று இனப் பெருக்க மண்டலம், தாய்நலம், பச்சிளம் குழந்தை, குழந்தை நலம், பதின் பருவ வயதினர் ஆகியோருக்கான திட்டம் (RMNCH+A) மற்றும் இந்திரதனுஷ் இயக்கம் தொடர்பான ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது. கள விளம்பர இயக்குனரகம் இந்த மையக் கருத்துகளில் வரும் ஆகஸ்ட் முதல் டிசம்பரை வரை சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தவுள்ளது. அதையொட்டி முதல் நிகழ்ச்சியாக இந்தப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

பயிலரங்கை தமிழக அரசின் நலவாழ்வு மற்றும் குடும்ப நலச் செயலாளர் டாக்டர் ஜே. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப. துவக்கி வைத்தார். பொதுசுகாதாரம் என்பது அரசாங்கம் மட்டும் பராமரிக்கக்கூடியது அல்ல. அனைவரும் இணைந்து கூட்டுப் பொறுப்புடன் செயல்பட்டால்தான் பொதுசுகாதாரத்தை மேம்படுத்த முடியும். தற்போது மக்களுக்கு அடிப்படைத் தகவல்கள் தெரியும். அதை உள்வாங்கி நடத்தையை மாற்றிக் கொண்டாக வேண்டும். நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. கள விளம்பர அலுவலகத்தினர் இந்த நடத்தை மாற்றத்தை நோக்கி தங்களது விழிப்புணர்வு பணியை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் ஜே. ராதாகிருஷ்ணன் தனது துவக்கவுரையில் தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்கு பத்திரிக்கைத் தகவல் அலுவலக கூடுதல் தலைமை இயக்குனர் கே.முத்துக்குமார் தலைமை வகித்தார். ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் தலைமை இயக்குனர் டாக்டர் ஆர்.எஸ். இராமசுவாமி சித்த மருத்துவத்தில் தாய்–சேய் நலம் எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் முதுநிலை மண்டல இயக்குனர் டாக்டர் ரோஷினி ஆர்தர் விளக்கவுரை ஆற்றினார். பிறகு தொடர்ந்து பயிற்சி அமர்வுகள் நடைபெற்றன. மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரத் துறையின் கூடுதல் இயக்குனர் டாக்டர் எம். கதிரேசன்; தமிழ்நாடு சுகாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குனர் டாக்டர் கே.அமுதாதேவி; பொதுசுகாதாரத் துறையின் இணை இயக்குனர் டாக்டர் எஸ். சரவணன்; மாநில இணை தாய்சேய் நல அலுவலர் வி. காந்திமதி; குடும்ப நல பயிற்சி நிறுவன முதல்வர் டாக்டர் பி.சம்பத்; மண்டல இயக்குனர் டாக்டர் நிர்மல் ஜோ; தமிழ்நாடு சுகாதார இயக்க உதவி திட்ட அலுவலர் டாக்டர் ஜி. மஞ்சுளா, காஞ் சீபுரம் மாவட்ட பயிற்சிக்குழு டாக்டர் கே. காயத்ரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முன்னதாக கள விளம்பர மண்டல இயக்குனர் என்.வி. நாகராஜன் வரவேற்றார். நிறைவில் கோயம்புத்தூர் கள விளம்பர உதவி இயக்குனர் சூரஜ் மோன் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை புதுச்சேரி கள விளம்பர அலுவலர் தி.சிவக்குமார் தொகுத்து வழங்கினார். இப்பயிலரங்கில் கள விளம்பர அலுவலர்கள், கள விளம்பர உதவியாளர்கள், மத்திய அரசு ஊடகப் பிரிவுகளின் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.